
உ

பரமபதி துணை.

இராமதேவரென்ற யாகோபு வைத்திய வாத சூஸ்திரம் 400.



குரு. இராமசாமிக்கோன் (இ. ராம. கு சன்)

ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் பிரஸ்

குருசாமிக்கோனர் சந்து,

...க்குமாரி வீதி மதுரை.

விலை ரூ 2-50

உ

பரம்ப[illegible]னே

இராமதேவரென்ற

யாகோபு வைத்திய

வாத சூஸ்திரம் 4

மதுரை வித்துவான்,

த. குப்புசாமி நாயுடு அவர்கள்

பரிசோதித்தபடி


மதுரை வடக்குமாசிவீதி, 4 குருசாமிக்கோனர் சந்து

புத்தகசாலை.

ஜி. இராமசாமிக்கோன்

அவர்களால்

பிரசுரிக்கப்பெற்றது.



மதுரை வடக்குமாசி வீதி, 4ீர் குருசாமிக்கோனார் சந்து
ஸ்ரீராமச்சந்திர் விலாசம் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது, 1966,
காப்பி 500, ஐந்தாம் பதிப்பு.

உ

பரமபதி துணை

யாகோபு அருளிச்செய்த

வைத்திய

வாத சூஸ்திரம் 400.

காப்பு.

சீர்பெறவே நபிமார்கள் பாதந்தன்னைத்
தெரிசித்து வாதசூஸ்த் திரத்தைச்சொல்ல
பார்புகழு மிரசூலின்றன் பாதம்போற்றிப்
பக்தியுட னென்தாயார் பாதம்போற்றி
நேர்பெறவே குருமுனிவர் பாதம்போற்றி
நிறைந்தநந்தி போகரிஷி பாதம்போற்றி
ஏர்பெறவே கொங்கணர்தன் பாதம்போற்றி
இனிமையுள்ள யூகிமுனி பாதங்காப்பே.

காப்பான கணேஷனுட பாதங்காப்பு
கருணைதருஞ் சிற்பரையாள் பாதங்காப்பு
தாப்பான குண்டலிசத் தியுமேகாப்பு
தாயான மனோன்மணியாள் பாதங்காப்பு
கோப்பான பரவெளியிற் சார்ந்துநின்று
குறிப்பறிந்த கடவுளர்தன் பாதங்காப்பு
மாப்பான நபிமார்கள் பாதங்காப்பு
மகிழ்வாகு மருட்ஜோதி பாதங்காப்பே.

ஜோதியெனுங் குருசூஸ்திரந் தன்னைத்தானுஞ்
சொல்லுகிறே னுலகோர்க்கு வெளியதாக
நீதியுடன் நீத்தினத்தைச் சொல்லிவிட்டேன்
நேர்மையுட னிதைத் தெரிந்து செய்வானாகில்
வாதிகளு மிவனுவான் வைத்தியனுவான்
மற்றோர்க்கு யிம்முறையோ வருத்தமில்லை
சேதியாம் நீத்தினத்தின் குருவைக்கேளு
செம்புதொட்டிப் பாஷாணம் அரிதாரந்தானே (1)

நீத்தினத்தின் குரு.

அரிதாரம் லிங்கமுடன் ரசமூஞ்சேரு
ஐந்தாச்சு இன்னமிதை அரையக்கேளு
பெரிதான கல்லுப்பு சத்திசாரம்
பேரான வெடியுப்பு வெண்காரந்தான்
விரிவான சூடனொடு ஐந்துமாச்சு
விதமாகக் குருவண்டு உரமும்நாவி
சரியான நெரிவிஷமும் புழுகுங்கூட்டித்
தானாக யிதுவெல்லா மரைத்திடீரே. (2)

அரைப்பதற்குத் தெளிவு நீர் சொல்லக்கேளு
அவுரியொடு வாழையுடன் அரசுதேங்கு
நிரைக்கவே நாயுருவி ஐந்துஞ்சுட்டு
நேராகப் பாண்டத்தி லிட்டுக்கொண்டு
நுரைக்கவே அமுரிதனை வார்த்துக்கிண்டு
நுட்பமதாய் மூன்றுநாள் தெளியவைத்து
பரைக்கவே தெளிவிருத்துக் கொண்டு நீயும்
பாங்காக மருந்ததனை அரைத்திடாயே. (3)

அய பற்பம்.

அரைத்ததனைக் காயவைத்துப் பதனம்பண்ணு
அப்பனே விபரமினிச் சொல்லக்கேளு
திரைத்ததொரு யிரும்பதனைத் தகடாய்த்தட்டி
நெற்கனமாய்த் தகடடித்து வைத்துக்கொண்டு
கரைத்ததொரு மருந்ததனைப் பலத்துக்கப்பா
களஞ்சிவீ தப்பூசிக் காயவைத்து
வரைத்திட்ட பூநீரு கற்சுண்ணந்தான்
வாகாகச் சரிகூட்டிப் பொடித்திடாயே. (4)

காந்த பற்பம்.

பொடியதனைக் கீழ்மேலும் ஒட்டிவிட்டுப்
போதவே மண்சீலை செய்துகொண்டு
வடிவெனவே கெஜபுடத்தில் நீறிப்போகும்
மைந்தனே பாண்டுவெ:ன்ற வியாதிதீரும்
நெடியதொரு காந்தத்தைக் கொண்டுவந்து
நேராகப் பாக்குப்போ லுடைத்துக்கொண்டு
துடியான மருந்துதனைப் பூசிக்காய்ந்து
சொல்லுகிறேன் சுண்ணத்திற் புடமேபோடே. (5)

அப்பிரேகப் பற்பம்.

போடுமே காந்தமது நீறிப்போச்சு
போக்கான காந்தபற்பம் வாய்வுக்காகும்
ஓடுமே பணவிடைதான் தாக்கும்போது
உள்ளிருந்த நோயெல்லாந் தீர்ந்துபோகும்
தேடுமே அப்ரேகங் கொண்டுவந்து
சிறக்கவே வில்லைபோல் நருக்கிக்கொண்டு
தாடுமே மருந்துதனைப் பூசிக்காய்ந்தால்
நலமான சுண்ணத்தில் வைத்திடாயே (6)

வைத்திடவே மேல்மூடிச் சீலைசெய்து
வாகான கெஜபுடத்தில் வாகாய்ப்போடு
நைத்துமே நீறிவிடும் புடந்தா னென்றில்
நலமான சுண்ணமுந்தான் தளுக்கிராது
கைத்திடவே ஒருபுடத்தில் அப்ரேகந்தான்
கடினமடா நீறுமது கண்டுபாரு
பொய்த்திடவே சொல்லவில்லை குருவின்நேர்மை
புகலரிது புகலரிது புதுமைதானே (7)

தாம்பிரப் பற்பம்.

புதுமையுள்ள அப்ரேகப் பற்பமப்பா
போக்குமே சயகாஷ மீளையெல்லாம்
கதுமையாய் நாம்பிலுள்ள வியாதியெல்லாம்
களன்றுவிடும் வைத்யமிது கண்டுபாரு
புதுமையாய்த் தாம்பிரத்தைத் தகடாய்த்தட்டிப்
புகழான மருந்ததனைப் பூசிக்கொண்டு
வதுமையாம் செவ்வாளிப் பட்டைத்தூளில்
வைத்துமே புடம்போட நீறும்பாரே. (8)

தங்கப் பற்பம்.

பாருமே கரப்பனொடு மேகமெல்லாம்
பார்க்குமுன்னே மண்டலத்தில் தீர்ந்துபோகும்
நீருமே குன்மமென்ற தனைத்துந்தீரும்
நினைவாகச் சூலைமுத லெல்லாந்தீரும்
தேருமே யின்னமொரு சேதிகேளு
செப்புகிறேன் தங்கத்தைத் தகடாய்த்தட்டி
பேருபெற மருந்ததனைப் பூசிக்கொண்டு
பெலமாகப் பனிதாங்கி மூலிகொண்டே (9)

வெள்ளிப் பற்பம்.

மூலிகையாற் பொதிந்துமே மண்சீலைசெய்து
மூக்கியமாய்ப் புடமிடவே நீறிப்போகும்
வாலிபமாந் தங்கபற்பந் தாதுவிர்த்தி
மகராஜ ராஜர்களுக் காகும்பாரு
கோலமாய் வெள்ளியுட பற்பஞ் சொல்வேன்
குணமாகத் தகட்டுக்கு மருந்துபூசி
சோலியே யில்லாம லரசம்பட்டைத்
தூளிலே வைத்ததனைக் கொண்டுமூடே. (10)

கொண்டுமே புடம்போடப் பற்பமாகும்
குணமாகக் கொண்டிடவே நரைகளெல்லாம்
வண்டுபோ லாகுமது கூந்தல்தானும்
வர்ணமோ தேகமன்மதனுமாவான்
கண்டுபா ரிதுவுமே வைத்தியமப்பா
கணப்பொழுதிற் சிலேற்பனத்தைக் கரைத்தேபோடும்
விண்டுமே செத்தாலும் பேசிச்சாவான்
மேதினியிற் செய்துபார் விபரப்பாரே. (11)

வெள்ளீயப் பற்பம்.

விபரமாய் வெள்ளீயப் பற்பங்கேளு
விதமான ஈயத்தைத் தகடாய்த்தட்டி
கவசமாய் மருந்துதனைக் கொண்டுபூசிக்
கனமான ஆவரையின் பட்டைத்தூளில்
அவசமாய் வைத்ததனை மூடிக்கொண்டு
அப்பனே மண்சீலை செய்துபின்னும்
பவசமாய்ப் புடம்போட நீறிப்போகும்
பாங்கான வெள்ளீயப் பற்பமாச்சே. (12)

பற்பமடா பணவிடைதான் மேகத்துக்குப்
பாங்கான அனுப்பான மறிந்துபோடு
அற்பமாய்ப் போகாதே பற்பந்தானும்
அகலுமே மேகமென்ற வாய்வுக்கெல்லாம்
நிற்பமாய் செய்யுமடா ரோகமெல்லாம்
நெடுநாளைக் குள்ளான ரோகமெல்லாம்
துப்பரவா ஊறலெல்லாம் விட்டுவாங்கும்
துகளான வைத்தியத்தைச் சூட்டிப்பாரே. (13)

காரீயப் பற்பம்.

சூட்டிப்பார் காரீயப் பற்பந்தன்னைச்
சொல்லுகிறேன் தகடாகத் தட்டிக்கொண்டு
வாட்டியே மருந்துதனைப் பூசிக்கொண்டு
வளமாகச் சொல்லுகிறேன் மைந்தாகேளு
ஆட்டியே நொச்சியிலைத் தூளில்வைத்து
அப்பனே மண்சீலை செய்துகொண்டு
காட்டியே முழப்புடத்தில் நீறிப்போகும்
கண்டுபா ரீதினுண்மை அருமைதானே. (14)

அருமையாங் காரீயப் பற்பந்தானும்
அனைத்துமே தசையிலுள்ள நோய்களெல்லாம்
பெருமையாய்ப் பிளவைமுதல் விப்புருதியப்பா
பெலமான அரையாப்பு யெல்லாந்தீரும்
உருமையாய்க் கொண்டிடவே மண்டலத்தில்
உள்ளநோ யெல்லாந்தா னொழிந்துபோகும்
தருமமாம் வைத்தியத்துக் கிதுதானப்பா
சரியாக யிவ்வண்ணஞ் செய்துபாரே. (15)

நாக பற்பம்.

வண்ணமென்ற நாகபற்பஞ் சொல்லக்கேளு
மகத்தான நாகத்தை உருக்கிச்சாய்த்து
திண்ணமுள்ள தகடாக்கி மருந்தைப்பூசிச்
செப்புகிறேன் பருத்திவிதைத் தூளுக்குள்ளே
கன்னவே வைத்ததனை மேலேமூடிக்
கவுசித்து முழப்புடந்தான் கண்டுபோடு
நன்னவே நாகமது பற்பமாகும்
நாடாது சிலேட்டுமநோய் நகண்டுபோமே. (16)

இலிங்க பற்பம்.

நகண்டுபோம் லிங்கபற்பஞ் சொல்லக்கேளு
நன்றாகப் பலமொன்று கட்டிவாங்கி
அகண்டிடா மருந்துதனைப் பூசிக்கொண்டு
அப்பனே அவுரியிலை அரைத்துக்கட்டி
பகண்டிடவே கவசித்து மண்சீலைசெய்து
பார்மகனே காயவைத்துப் புடந்தான்போடு
ஜெகம்புகழ லிங்கமது பற்பமாகும்
செப்புகிறேன் ஜன்னிபதின் மூன்றுந்தானே. (17)

பதின்மூன்று ஜன்னியுந்தான் தீர்ந்துபோகும்
பார்மகனே வலியெல்லாந் தீர்ந்துபோகும்
விதிமூண்டு தென்றாலும் துயர்ந்தேதீரும்
மேலான பிரமைமுதல் வெப்புத்தீரும்
நதிமூன்றில் மூழுகினது போலேயப்பா
நலமான உஷ்ணங்கள் தீர்ந்துபோகும்
சதியாக வெளியிட்டேன் சொன்னேன்பாரு
சங்கடங்கள் தீர்ந்துவிடுஞ் சாந்தமாமே. (18)

தாளக பற்பம்.

சாந்தமாய் தாளகத்தின் பற்பங்கேளு
தயவான தாளகத்தைச் சுத்திசெய்து
வாந்தமாய் மருந்ததனைப் பூசிக்கொண்டு
மைந்தனே சொல்லுகிறேன் சுண்ணத்தூளில்
தேர்ந்துமே வைத்தெரிக்க மூன்றுசாமம்
திறமான பற்பமாஞ் செப்புவேன்கேள்
பாந்தமாய்க் குளிர்சுரங்கள் யெப்பிளைப்பு
பகரவே யிதுவெல்லாம் விட்டுப்போமே. (19)

கெந்தி பற்பம்.

போமென்ற கெந்தியுட பற்பங்கேளு
புகழாக உருக்கியதைப் பாலிற்சாய்ப்பாய்
வாமென்று சாய்த்திடவே வட்டுப்போலே
மைந்தனே மருந்துதனை மேலேபூசி
நாமென்ற பல்லிப்பூ டரைத்துக்கொண்டு
நலமாக மேற்கவசம் நன்றாய்ச்செய்து
தாமென்ற சுண்ணத்துக் குள்ளேவைத்துத்
தப்பாமற் புடம்போடப் பற்பமாமே. (20)

பற்பத்தை அனுப்பானந் தன்னிற்சேர்த்து
பத்தியமாய்க் கொண்டிடவே குஷ்டரோகம்
அற்பமாய்ப் பறந்துவிடும் பாலுஞ்சோறும்
அப்பனே உண்டுவர மண்டலந்தான்
கற்பமென்ன யிதுபோலே கற்பமுண்டோ
காயத்தி லிருந்ததொரு களங்கமெல்லாம்
சொற்பமாய்ப் போயிடுங்காண் வைத்தியர்க்கு
சுகமான மருந்துதனைச் சூட்டினேனே. (21)

பாஷாண பற்பம்.

சூட்டினேன் வெள்ளைப்பா ஷாணந்தன்னைச்
சுண்ணத்தில் வைத்ததனைக் கள்ளைவார்த்து
ஆட்டியே கொதியிடுவாய் மூன்றுசாமம்
அப்பனே வெண்மையடா அறிந்துபாரு
நாட்டியே மருந்துதனைக் கவசஞ்செய்வாய்
நன்றாகப் பத்துக்கு ஒன்றுவீதம்
கூட்டியே மண்சீலை செய்துகொண்டு
கோழியென்ற புடமிடவே நீறும்பாரே. (22)

நீறியதோர் பாஷாணந் தன்னிலப்பா
நிமிஷத்திற் சுரந்தீரும் பத்தியம்வேண்டாம்
ஆறியதோ ரஸ்திசுரம் இளைப்புத்தீரும்
ஆகாத பவுந்திரங்க ளனைத்தும்போகும்
நாறியதோர் புண்களெல்லாந் தீர்ந்துபோகும்
ராச்சுரமும் குளிர்சுரமும் நாடாதோடும்
ஊறியதோ ருடம்பாகு மிதினாலப்பா
ஊட்டியதோர் பச்சையினால் உடல்கெட்டாரே. (23)

கெட்டாரே பிள்ளைபிள்ளை தலைமுறைக்கும்
கேடில்லை யீதுமொரு வழிதானென்பார்
மட்டான கைபாக மூட்டாளுக்கு
வகைதெரியா தேயீய்ந்து மாண்டார்பாரு
கெட்டானே தான்கெட்ட கேடுமல்லால்
கெடுத்தானே லோகமெல்லாங் கெடவுந்தானே
துட்டான துட்டனுக்கு நூலீய்ந்தாக்கால்
தோஷமுண்டு பாவம்வருஞ் சொன்னேன்பாரே. (24)

கெவுரிப் பற்பம்

சொன்னதொரு கெவுரியுட பற்பங்கேளு
சூச்சமா யவுரிதனில் மூன்போற் காய்ச்சி
வண்மையாய் மருந்துதனைக் கவசஞ்செய்து
வைத்திடுவாய் வாழையுட சாம்பற்குள்ளே
பின்னமில்லை மஞ்சள் நிறக் கெவுரிதானும்
பிசகாமல் வெள்ளை நிறம் பேணிப்பாரு
கன்னமுடன் பவுந்திரங்கள் மூலரோகம்
காணாதே போய்விடுமே கண்டுபாரே. (25)

மிருதார்சிங்கிப் பற்பம்.

கண்டதொரு மிருதார சிங்கிப்பற்பம்
காட்டுகிறேன் நன்ருகக் கருதிக்கேளு
பண்டான சிங்கியொரு பலமாங்கட்டி
பாரப்பா மருந்துதனைப் பரிந்துபூச
வண்டான அண்டத்துக் குள்ளேவைத்து
வளமாகக் கவசித்துப் புடந்தான்போடு
கொண்டாடும் சிங்கிபஸ்பம் வெள்ளையாகும்
கொடுத்திடுவாய் புண்புறைகள் பிளவைபோமே. (26)

செம்புத்தோட்டிப் பற்ப்ம்

பிளவைமுதல் கரப்பானீ ரெல்லாந்தீரும்
பெருமைதரும் வைத்தியந்தான் புதுமைமெத்த
இளமையாஞ் செம்புதொட்டிப் பற்பங்கேளு
இயலான மருந்துதனைக் கவசஞ்செய்து
வளமையாய் மூக்குரட்டை கவசங்கட்டி
வைத்திடவே வெள்ளையாம் வைத்துக்கொண்டு
தளமையாங் குடல்வாதம் ஈரல்புத்து
சதையடைப்பு சதைவளர்த்தி சாந்தமாமே. (27)

மனேசிலைப் பற்பம்.

சாந்தமாய் மனேசிலையின் பற்பங்கேளு
தயவான மருந்துதனைப் பூசிக்கொண்டு
பாந்தமாய் வெள்ளருகைக் கவசங்கட்டி
பாரடா பூனீரு கீழ்மேலிட்டு
வாந்தமாய்ப் புடம்போடு நிதானம்பார்த்து
மைந்தனே பஸ்பமென்ருல் மகத்துவமெத்த
ஏந்தவே கிரந்தியொடு கண்டமாலை
எடுத்ததொரு மனேசிலையும் பற்பம்பாரே. (28)

ரச பற்பம்

பற்பத்தைப் பணவிடையாய்ப் பத்துநாட்கொள்
பாங்கான புண்பொடிக ளெல்லாந்தீரும்
வுற்பனமாய் ரசபற்பஞ் சொல்லக்கேளு
உத்தமனே ரசம்பத்துக் கொன்றுதானும்
மெய்ப்புடைய கல்வத்தி லிட்டுக்கொண்டு
விளங்கவே அரைத்திடுவாய் தாளிச்சாற்றில்
அற்புதம்போல் மாண்டுவிடும் வில்லைசெய்து
அப்பனே காய்ந்தபின்பு சொல்லக்கேளே. (29)

கேளப்பா கஞ்சாவும் புகையிலையுஞ்சுட்டுக்
கெடியான சாம்பலதைத் தாளிச்சாற்றில்
வாளப்பா அரைத்ததனை வில்லைக்குமேல்
வாகாகக் கவசித்து மணற்குள்வைத்து
நாளப்பா மேற்சட்டி கவிழ்த்துமூடி
நன்றாக மண்சீலை செய்துகொண்டு
ஆளப்பா மூச்சாம மெரித்துஆறி
அப்பனே யெடுத்துப்பார் வெண்ணீராமே. (30)

நீராகும் பஸ்பத்துக் குருதிகண்டு
நினைவாக அனுப்பான மறிந்துபோடு
வாரான வயித்தியமுஞ் சூதத்தாலே
மைந்தனே ரசவாதஞ் சூதத்தாலே
கூரான ரசபற்பங் கொண்டபோது
கொடியதொரு நோயெல்லாங் கூறுதோடும்
சீரான பத்தியமிலை யென்றுசொல்லு
தேகத்தில் பேதமொன்றுஞ் செய்யாதென்னே. (31)

என்னவே ரசபற்பங் கொண்டாயானால்
எடுத்தெடுத்த நோயெல்லா மிறங்கிப்போகும்
வன்னமாய்க் குட்டமுடன் கரப்பான்தீரும்
வாகான கிரந்தியுடன் சூலைதீரும்
சன்னமாம் உதரத்தில் வலியுந்தீரும்
சட்டையிடுங் குட்டநோய் தவறுண்டேபோம்
கன்னமிடுங் காலதுபோல் ரசபற்பந்தான்
காட்டினேன் சாஸ்திரத்திற் கண்டுபாரே. (32)

சாரப் பற்பம்.

கண்டுபார் சாரத்தின் பற்பங்கேளு
கருவான மருந்துதனைக் கட்டிக்கப்பா
விண்டிடவே பத்துக்கு ஒன்றுபூசி
விதமாக காயவைத்துச் சொல்லக்கேளு
பண்டுடனே புரசப்பட்டைச் சாம்பற்குள்ளே
பதித்துமே கீழ்மேலுஞ் சாம்பலிட்டு
அண்டவே மேற்சட்டி கவிழ்த்துமூடி
அப்பனே மண்சீலை மூன்றுசெய்யே. (33)

செய்துமே அடுபபேற்றித் தீயைமூட்டிச்
சிவசிவா மூச்சாமந் தீயைமூட்டி
அய்துமே ஒருவிறகா லெரிப்பாயப்பா
அப்பனே தீயாறி யெடுத்துப்பாரு
கொய்துமே தந்தமது போலேகட்டும்
கொடுநாகங் கண்டஙகுங் கூர்ந்துபாரு
வய்துமே நீர்ப்பாண்டு போகும்பாரு
மகத்தான பற்பமது வைத்துக்கொள்ளே. (34)

வெங்காரப் பற்பம்.

கொள்ளவே வெங்காரப் பஸ்பஞ்சொல்வேன்
கொடுமையுள்ள மருந்துதனைக் கவசித்தேதான்
அள்ளவே ரவியிலிடு மூன்றுநாள்தான்
அப்பனே நாலாநா ளெடுத்துக்கொண்டு
கள்ளமாஞ் சிப்பிசுண்ணத் துள்ளேவைத்து
கனமாக மேல்மூடிப் புடந்தான்போடு
வெள்ளையாம் பற்பமது நீர்க்கட்டெல்லாம்
விட்டே நீர்ப் பாண்டுவிஷத் திரும்பாரே. (35)

சீனப் பற்பம்.

தீருமே சீனத்தின் பற்பங்கேளு
திறமான கட்டிக்குப் பூசிப்போடு
பாருமே நாயுருவிச் சாம்பறகுள்ளே
பதித்துமே வைத்துதீ கவசஞ்செய்து
சேருமே மூன்போலே தீயைமூட்டு
திறமான சாமமது சென்றாற்போதும்
காருமே சீனபஸ்பம் நீர்க்கடுப்பு
கருவான வயற்றளைச்சல் கழிந்துபோமே. (36)

வீர பற்பம்

போமென்ற வீரபற்பஞ் சொல்லக்கேளு
புகழான வீரமொடு பலங்கட்டிக்கு
ஆமென்ற மருந்துதனைப் பத்துக்கொன்று
அப்பனே பூசிவிடு ரவியிற்போடு
நாமென்ற கொடுவேலி வேரரைத்து
நன்றாகக் கவசமது பொதிந்துகட்டி
வாமென்ற மண்சீலை மூன்றுசெய்து
மகத்தான சுண்ணத்திற் புடத்தைப்போடே. (37)

புடம்போட வீரமது பற்பமாகும்
புண்பிளவை கட்குழகங் காணவிட்டால்
வடம்போட்ட பற்பமதை உமிழ்நீராலே
மத்தித்துப் பொட்டதுபோல் முகத்திற்போடு
கடம்போட்ட நாழிகைதான் நாலுக்குள்ளே
கண்டிடவே தான்துளைத்துக் காத்தேவாங்கும்
நடம்போட்டுத் தகர்ந்துவிடும் வேறேகேளு
நன்றான பருத்திவிரை யிடித்துக்கட்டே. (38)

சவுக்காரப் பற்பம்

கட்டவே சலஞ்சீதம் கழிந்துபோகும்
கடிதாக மூன்றுநாள் எண்ணெய்தன்னில்
மட்டான மாச்சக்காய் கிராம்புகூட்டி
மைந்தனே வேகவைத்துப் பஞ்சிலூட்டி
வட்டாகப் போட்டவுடன் செம்புண்ணுகி
வாரமதுக் குள்ளாகும் வளமைகேளு
பட்டாரச் சவுக்காரப் பஸ்பங்கேளு
பாங்கான மருந்துதனைப் பரிந்துபூசே. (39)

பூசியே ரவிதனிலே காயவைத்துப்
புகழ்பெறவே இலுப்பைப்புண்ணுக்குதன்னை
வாசியாங் கவசமது மேலேசெய்து
மண்சீலை யதுமேலே வலுக்கச்செய்து
நேசியாங் கோழியென்ற புடத்தில்நீறும்
நிலையான சவுக்கார பஸ்பமப்பா
காசியாம் வலிகுன்மம் வாய்வுக்கட்டி
கரைந்திடுமே அனுப்பானங் கண்டுபோடே. (40)

சூட பஸ்பம்.

கண்டுபார் சூடனுட பற்பங்கேளு
கனமான மருந்துதனைப் பூசியேதான்
விண்டுபார் கற்பூர வல்லிதன்னை
விதமாகக் கவசித்து மண்சீலைசெய்து
நன்றாகச் செய்ததனை ரவியிற்போடு
நலமான குக்குடத்திற் நீறிப்போகும்
சென்றுபார் சயகாஷ மனுப்பானத்தில்
செய்திடவே தீருமப்பா திர்க்கந்தானே. (41)

நவரத்தினப் பற்பம்.

தீர்க்கமாய் நவரத்தின மொன்பதுந்தான்
செய்திடவே மருந்துதனைப் பூசிக்கொண்டு
ஆக்கமாய்ப் புடம்போட நீறும்பாரு
அரகரா பவ்பமது யாருக்காகும்
தேர்க்கவே ராஜர்களுக் குரித்தாம்பாரு
சித்தருக்குக் காயசித்தி திறமாம்பாரு
மூர்க்கமாய்ச் சாக்கினுட விபரங்கண்டு
முடித்தவனே ரசவாதி மொழிவோம்பாரே. (42)

மொழிந்திடவே உபரசந்தான் நூற்றிரண்டுபத்து
முறையான லவணமது இருபைத்தைந்து
கழிந்து நின்ற லவணமொடு நவலோகந்தான்
காட்டினேன் நவரத்ன பற்பத்தோடு
வழிந்துமே வகையொன்று களஞ்சியொன்றாய்
மைந்தனே நிருத்ததனைக் கல்வத்திட்டுக்
கழிந்துநீ கடைச்சாக்கு அறுபத்தினாலும்
கருக்கவே யிடித்ததனைப் பொடியாய்ப்போடே. (43)

போட்டுமே கிஷாயமதை வற்றவைத்துப்
புகழாகக் குருக்கியதை விட்டுஆட்டி
நாட்டுமே குன்றியிடை உருட்டிப்போடு
நலமாக ரவிதனிலே காய்ந்தபின்பு
பூட்டுமே தேவிபதந் தன்னில்வைத்துப்
பூஜைசெய்து செப்பதனிற் பதனம்பண்ணு
காட்டுமே சிலேற்பனந்தா னிழுக்கும்போது
கஸ்தூரிக் கிஷாயத்தி லொன்றுதாக்கே. (44)

தாக்கவே சிலேற்பனங்கள் தெரித்துப்போகும்
தண்ணீரு போலவே கரைந்துபோகும்
வாக்கசந்து யிருப்போர்க்கு உயிருண்டாகும்
வாயுவினு லக்கினியும் வளரும்பாரு
நோக்கியே கண்விழித்துப் பேசுவார்கள்
நடுக்கமெல்லாந் தான்தீர்ந்து யெழுந்திரிப்பார்
போக்கதுவே வயதுவிதி யிவளவென்றால்
பொசித்திடவே யாகாது போகும்பாரே. (45)

போகாத விதிதானே தினமொன்ருகப்
பொசித்துவிடு மண்டலத்திற் சட்டைதள்ளும்
வாகான காயசித்தி யாகும்பாரு
வருஷமது கொண்டிடவே வாசிசித்தி
யோகமதில் கலைநாலுங் கட்டிப்போகும்
உத்தமனே வாதமெல்லா மூறுதியாகும்
சாகாம லிருப்பதற்கு விதியுமாச்சு
சற்குருவி னருளாச்சு சார்ந்துபாரே. (46)

நவரத்தினச் செந்தூரம்.

சார்ந்துபார் செந்தூர மிதிலேசொல்வேன்
தயவான இந்துப்புச் சவுக்காரந்தான்
வார்ந்ததொரு சீனமுடன் சாரங்காரம்
வளமாக ஐந்தாச்சு யின்னங்கேளு
பார்ந்திடவே சிங்கியொடு கெவுரிகெந்தி
பதமாக மனோசிலையும் ரசமுமைந்து
ஆய்ந்துபார் இந்திரகோபஞ் செம்பட்டுப்பூச்சி
அழகான கொம்பரக்குப் பூசிபோடே. (47)

இரும்புச் செந்தூரம்.

பூச்சியுடன் பூநாகஞ் சிவந்த அட்டை
புகழாக இதுவெல்லாங் கல்வத்திட்டு
ஆச்சியமா யரைத்திடுவா யுவர்நீராலே
அப்பனே காயவைத்துப் பதனம்பண்ணி
வாச்சுதே தொட்டதெல்லாஞ் செந்தூரந்தான்
வாகாக ஆடுதற்கு வகையைக்கேளு
காச்சுதே யிரும்புதன்னைத் தகடாய்த்தட்டிக்
கனமான மருந்துதனைக் கொண்டுபூசே. (48)

கொண்டுமே உதியம்பட்டை தனிற்பொதிந்து
குறையாமற் செங்கல்மாப் பொடிக்குள்வைத்து
மண்டுமே மேல்மூடிச் சீலைசெய்து
மைந்தனே கெசபுடந்தான் வைத்துப்போடு
தண்டுமே ஒருபுடத்திற் செந்தூரந்தான்
தப்பாது முருக்கம்பூ தானெவ்வாது
பண்டிதமாய்ச் செந்தூரஞ் செய்வாயாகில்
பாசவினை யொழிந்துவிடும் பரிந்துபாரே. (49)

காந்தச் செந்தூரம்.

பரிந்துமே காந்தத்தை நொறுக்கிக்கொண்டு
　　பார்மகனே மருந்துதனைப் பிரட்டியேதான்
விரிந்திதனைக் காயவைத்து விருசம்பட்டை
　　விளங்கவே தானரைத்து அடையாய்த்தட்டி
கரிந்திடவே யதிற்பரப்பி ஓடுமூடி
　　கனமாகச் சீலைசெய்து புடந்தானப்பா
எரிந்திடவே கெஜபுடந்தான் போட்டாயானால்
　　இதுபோலே செந்தூர மில்லைதானே. (50)

இல்லையென்ற காந்தச்செந் தூரத்தாலே
　　எதிர்த்தெதிர்த்த வியாதியெல்லா மிடைந்தேபோகும்
தொல்லையென்று விட்டாலுந் தோஷமுண்டு
　　சொல்லிலே யினிப்புவந்து தோன்றுமோபார்
வல்லபமா யறிவோடே கூடிக்கொண்டு
　　வளர்ந்திடவே வேதாந்த சித்திசெய்தால்
இல்லறத்தில் வாழ்ந்தாலென் காட்டில்வாழ்ந்தென்
　　எடுத்ததொழில் சித்தர்மூலி யிசைப்பான்பாரே. (51)

அப்பிரேகச் செந்தூரம்.

இசைக்கவே அப்பிரகந் தன்னைக்கேளு
　　எடுத்திடுவாய் தகடாக வாங்கிக்கொண்டு
பசைக்கவே பலமொன்று யெடுத்துக்கொண்டு
　　பத்திரமாய் வெள்வேலம் பட்டைக்குள்ளே
நசைக்கவே வைத்ததனை மண்சீலைசெய்து
　　நாலுசாம மெரித்துப் போடுவாய்நீ
அசைக்கவே செந்தூர மாகுமப்பா
　　ஆகுமடா ஒருபுடத்தி லருமைதானே. (52)

தாம்பிரச் செந்தூரம்.

அருமையென்ற செந்தூரம் ஷயநோவுக்கு
　　ஆகுமடா பத்தியங்க ளரையவேண்டாம்
ஒருமையென்ற தாம்பிரத்தைத் தகடாய்த்தட்டி
　　உத்தமனே மருந்துதனை உரைத்தேபூசு
கருப்பான சாரணையைப் பொதிந்துகொண்டு
　　கணக்கவே ஒட்டிவிட்டுப் புடந்தான்போடு
தருமையென்ற தாம்பூரச் செந்தூரந்தான்
　　தப்பாது குன்மமெல்லாந் தனியேபோமே. (53)

வெள்ளிச் செந்தூரம்.

போமென்ற வெள்ளிச் செந்தூரங்கேளு
போக்கோடே மருந்துதனைப் பூசிக்கொண்டு
தாமென்ற வன்னியுட பட்டைதன்னில்
நன்றாகத் தான்பொதித்து ஒட்டிவிட்டு
காமென்ற சீலைமண் செய்துகொண்டு
கனமாகப் புடமிடவே செந்தூரந்தான்
மானென்ற தாதுவிர்த்தி மிகவுண்டாகும்
மைந்தனே தங்கத்தின் வரிசைகேளே. (54)

தங்கச் செந்தூரம்.

வரிசையாய் மருந்துதனைப் பூசிக்கொண்டு
மைந்தனே காட்டாத்திப் பட்டைதன்னில்
யரிசையாய்ப் பொதிந்துமே ஒட்டிவிட்டுப்
பாங்காக மண்சீலை செய்துகொண்டு
பிரியமாய்ப் புடம்போடு கெஜந்தானப்பா
போான செந்தூரம் பேசொண்ணாது
உரிசையாய் உறங்கினதோர் சுகபோகிக்கு
உத்தமனே மருந்திதுதான் உகந்துபாரே. (55)

வங்கச் செந்தூரம்

பாரப்பா வெள்ளீயத் தகட்டுக்குத்தான்
பாங்கான மருந்துதனைப் பூசிகொண்டு
ஆரப்பா வாகையுட பட்டைத்தூளில்
அப்பனே புடமிடச்செந் தூரமாகும்
ஊரப்பா காரீய மதுதனக்கு
உறவாக மருந்துபூசிக் காய்ந்தபின்பு
வேரப்பா புங்கவேர் தன்னில்வைத்து
விதமாகப் புடம்போடச் செந்தூரமாமே. (56)

நாகச் செந்தூரம்.

செந்தூரம் தின்றக்கால் தேகந்தங்கம்.
சிலைமகன்போ லாகுமடா தேகஞ்சித்தி
சந்தேக மில்லையடா சொல்லக்கேளு
சார்பான நாகத்தின் கட்டிக்கப்பா
மூந்தவே மருந்ததனைப் பூசிக்கொண்டு
மூசியாமற் பூவரசின் பட்டைதன்னில்
வெந்திடவே புடமிடவுஞ் செந்தூரந்தான்
விஷமான நாகம்போல் மேவிப்பாரே. (57)

நவச்சாரச் செந்தூரம்.

மேவியதோர் நோய்களுக்கு நாகம்போலே
விட்டுமே நாகச்செந் தூரந்தானும்
தாவியே எப்பிளைப்பு இருமலீளை
தப்பாது காஷநோய் சாந்தமாகும்
கூவியே நவச்சாரந் தன்னிலப்பா
குணமுடனே தான்பூசிக் காயவைத்து
பாவியே கருமணலிற் புடத்தைப்போடு
பாங்கான சாரச்செந் தூரமாச்சே. (58)

பல செந்தூரம்.

ஆச்சுதே சீனமுடன் காரஞ்சூடன்
அப்பனே சவுக்கார மிந்துப்போடு
போச்சுதே யிதுவெல்லா மருந்தைப்பூசி
புகழாக ரவியிலிட்டுக் காய்ந்தபின்பு
ஏச்சுதே வெள்ளாட்டின் புழுக்கைத்தூளில்
இட்டி நீ கீழ்மேலு மிட்டுவைத்து
வாச்சுதே மேல்மூடிச் சீலைசெய்து
மைந்தனே புடமிடச்செந் தூரந்தானே. (59)

செந்தூரஞ் சீனமது கடுப்புக்காகும்
சேரவே காரமது நீர்க்கட்டுக்காகும்
பந்தமில்லா இந்துப்பு வாய்வுக்காகும்
பகுமான சூடனது வாய்வுக்காகும்
சொந்தமுள்ள சவுக்காரம் வாய்வுகட்டிக்காகும்
சுகமாக அனுப்பான மறிந்துசெய்வாய்
வந்ததொரு யிம்முறையை வெளியாய்ச்சொன்னேன்
மகிழ்வாக உழைத்தவன்தான் செய்வான்பாரே. (60)

பார்சொன்னே னென்னைப்போ லார்தான்சொன்னார்
பாரதனி லெவருமே சொல்லவில்லை
சீர்பெறவே வெளியாகச் சொல்லிப்போட்டேன்
ஜெகத்திலுள்ளோ ரிதையறிந்து செய்வாராகில்
பேர்பெறவே மகத்தான சித்தராவார்
பேருலகிற் கீர்த்தியது மெத்தவுண்டு
நேர்பெறவே யிந்நூலை வெளிவிடாதே
நேர்த்தியுடன் பெரியோரைத் தேடிக்காணே. (61)

வெடியுப்பு ஜெயநீர்.

தேடிப்பார் வெடியுப்பு ஜெயநீர் தன்னைத்
தெளிவாகச் சொல்லுகிறேன் செவ்வையாக
ஆடிப்பார் கல்லானே பலமோபத்து
அரகரா புளியதனைக் கூடச்சேர்த்துக்
கூடிப்பார் சீனமொடு பூநாகந்தான்
கோர்த்துவிடு கற்பூரங் காரசாரம்
நாடிப்பார் வகைக்குவொரு களஞ்சதாக
நாட்டடா கூட்டியொன்ரு யரைத்துருட்டே. (62)

அறைந்துருட்டித் தீயதனிற் கொழுத்தினுக்கால்
அப்பவே சுண்ணும்பாய் நீறிப்போகும்
குறைவில்லை சொல்லுகிறேன் குழந்தாய்கேளு
கோடிபொரு ளீய்ந்தாலு மீய்ந்திடாதே
நிறைவுள்ள சுண்ணமது பதினுறுக்கு
நினைவாகக் கூட்டடா சாரமொன்று
மறைவில்லை பனிநீரில் வைப்பாயப்பா
மாருது சுண்ணமது காரந்தானே. (63)

காரந்தான் கடுங்கார மெத்தவப்பா
கழறுவேன் கோடிவித்தை யாடலாகும்
ஓரமின்றிச் சொன்னேனே யுண்மையையா
உற்றுப்பா ருனக்குள்ளே வாதமாடும்
பாரமல்ல யிவ்வேதை காணுதற்குப்
பரமான போகரிஷி ஞானம் நூறில்
சாரமாய்ச் சொல்லிவிட்டார் வெடியுப்பையா
சமுசயங்க ளில்லையடா நூலைப்பாரே. (64)

நூல்பாரு போகரிஷி வாதமெல்லாம்
நுணுக்கமாய்த் திறந்தாரே மறைவில்லாமல்
கால்பாரு நூல்பாரு கண்ணேசொன்னேன்
கானகத்துச் சித்தரெல்லா மெச்சுவார்பார்
பால்போலாம் போகரிஷி ஞானம் நூறு
பாருலகிற் பாபிகளுக் கொவ்வாதையா
சேல்கெண்டை தானீந்து விரால்கொண்டாற்போல்
சேவித்து யென்பெயரைச் சொல்லிவாங்கே. (65)

மேகச்சூட்டுக்குக் கியாழம்.

வாங்கடா யின்னுமொரு கருயானங்கேள்
வளமையுள்ள யென்குருவுஞ் சொன்னவித்தை
சாங்கமுடன் சையோக மிகுந்ததாலே
சாருமே உஷ்ணமது அதிகங்காணும்
பாங்கியர்மேல் மோகமது கொண்டபேர்க்கும்
பகருவேன் குடிநீராங் கியாழமப்பா
சோங்காமல் தாவிருக்க வாலிபர்க்குச்
சொல்லுவேன் நன்னாரி பலமைந்தாமே. (66)

நன்னாரி பலமைந்து மிளகிரண்டு
நற்சீரஞ் சோம்புடனே கொத்தமல்லி
பன்னுவேன் வகைக்குஅரைப் பலமதாகும்
பாங்கான சுக்கதுவும் பலமேலென்று
உன்னிதமாய் நெற்பொரி பன்னீர்புட்பம்
உறவாகத் தூளாக்கி வைத்துக்கொண்டு
நன்னயமா யரைப்பலந்தான் தூளெடுத்து
நல்லஜல மாழாக்கு மூன்றிற்போடே. (67)

போட்டுமே நாலிலொன்று சுண்டக்காய்ச்சிப்
பொங்கமுடன் வடியிட்டுச் சீனியோடு
தாட்டிகமா யாவின்பால் கூடச்சேர்த்துச்
சாப்பிடவே சூடதுதான் பறந்துபோகும்
வாட்டமின்றித் தினந்தோறு மருந்தலாகும்
வையகத்தில் பத்தியந்தா னில்லையையா
நாட்டமுடன் சையோகந் தினந்தோறுந்தான்
நடத்தலாம் மேகமது பிறவாதாமே. (68)

கற்பூர சிலாசத்துப் பற்பம்.

ஆமேதான் கற்பூர சிலாசத்தைத்தான்
அப்பனே என்சீடா அறிவுள்ளோய் நீ
நாமேதான் கற்பூர சிலாசத்தப்பா
நாயகனே பலமொன்று கெந்தகந்தான்
தாமேதான் பலமொன்று தாளிச்சுண்ணம்
தயங்காதே அரைப்பலந்தான் கூடச்சேர்த்து
ஆமேதா னரைத்தொன்றாய் ஓட்டில்வைத்து
ஆகாகா கொளுத்தியபின் சொல்லக்கேளே. (69)

கேளடா நிம்பழத்தின் சாற்ருலாட்டிக்
கெடியான சிலாசத்துக் கவசஞ்செய்து
நாளடா போக்காது புடமோகேளு
நவிலுவேன் குக்குடத்தில் நீறிப்போகும்
வாளடா பணவிடைதான் நவநீதத்தில்
வகைபெறவே மண்டலந்தான் காலதாகும்
பாளடா உண்டுவர மேகங்காந்தல்
பறக்குமே பற்பத்தின் மகிமையாலே. (70)

பற்பத்தி லனுப்பானஞ் சொல்லக்கேளு
பகருகின்ற கலியாணிப் பூசணிக்காய்
அற்புதனே நாலிலொன்று எடுத்துக்கொண்டு
அறைந்தபற்பம் பணவிடைதான் சீனியோடு
கற்பமாய்க் கலந்துண்ண ஆறுவேளை
கலக்கமில்லை பித்தமது நாற்பதும்போம்
உற்பனமாய் நீரிழிவு கண்டபேர்க்கு
ஓடுமே வாழையென்ற பழத்தில்தானே. (71)

தானான மண்டலந்தான் பழத்திற்கொள்ள
தடையில்லை நீரிழிவு தீமேகம்போம்
பானான நவநீதந் தன்னிற்கொண்டால்
பறக்குமே நீரடைப்பு சதையடைப்பு
தேனான மேகவெள்ளை யோடுதானும்
தேங்குகின்ற கல்லடைப்பு சொல்லாதோடும்
மானான தேகமது குளிர்ந்துகாணும்
மகிதலத்தி லிம்முறைதான் மெத்தநன்றே. (72)

நன்ருன யிம்முறைபோ லில்லையப்பா
நவிலவில்லை நாதாக்கள் மறைத்துச்சொன்னுர்
குன்றேகேள் கோடான கோடிசித்தர்
கொட்டினுர் வெகுகோடி மருந்தையெல்லாம்
தன்னியனே யான்சொன்னேன் மறைவில்லாமல்
தயங்காதே தாரணியி லுனக்காய்ச்சொன்னேன்
இன்னிலத்தில் மானிடர்கள் சையோகத்தில்
இடுக்கனடை யாதிருக்க யியம்புவேனே. (73)

முத்துப் பற்பம்.

இயம்புவேன் முத்துப்பற்பஞ் சுருக்கமப்பா
எழிலான முத்துச்சிப்பி தனையெடுத்து
நயம்பெறவே பத்தெருவிற் போட்டெடுத்து
நாயகனே கட்டுக்கொடி கவசித்தேதான்
சயம்பெறவே பத்தெருவிற் புடந்தான்போடு
சாங்கமுடன் கண்ணியிலே யொன்றுபோடு
வயமான கையானி லொன்றுபோடு
வாகான முள்ளங்கி யொன்றுபோடே. (74)

போடவே இலந்தையிலே ஒன்றுபோடு
போட்டபின்பு மண்டலந்தான் வெண்ணெய்யிற்கொள்
நாடவே மேகமது விட்டேயோடும்
நானிலத்தில் போகிக்கு வேண்டுமையா
வாடவே வேண்டாங்காண் சயரோகம்போம்
வளமையுள்ள மேனியது மின்னற்காணும்
நீடவே சிங்கியது கூறக்கேளு
நெடிதான கலைமானின் கொம்பதாமே. (75)

சிங்கிப் பற்பம்.

ஆமேதான் கொம்பதனைப் புடமேபோட்டு
அப்பனே கழற்காயி னிலையரைத்து
நாமேதான் சொன்னபடி புடமேபோடு
நவிலாதே நச்சுக்கீரை யதனிலொன்று
தாமேதான் மணத்தக்காளி யதனிலொன்று
தன்மையுள்ள ஆவின்பால் விட்டரைத்து
ஆமேதான் புடம்போட்டு எடுத்துப்பின்பு
அரகரா திரிகடுகிற் கொள்ளநன்றே. (76)

திரிகடுகு சூரணத்திற் கொண்டாயானால்
தியங்கியே வாயுவெல்லா மோடிப்போகும்
பிரியமுடன் நாற்பதுநாள் கொள்வாயப்பா
பிசகில்லை யான்சொன்ன மார்க்கமையா
உரியவனே ஆவின்னெய் யாவின்பாலை
உட்கொள்ளத் தேகத்துக் குறுதியப்பா
கரிமுகனுக் குரியவனு முருகன்றானும்
காட்டினு ரென்னுசா னகத்தீசர்க்கே. (77)

என்ஞசா னகத்தியர்க்குச் சொன்னவாறு
எடுத்துரைத்தா ரெந்தனுக்குப் போக்கையெல்லாம்
உன்னிதனே யிந்நூலும் பொய்யாதையா
உலகினிலே மட்டியவன் காணப்போமோ
நன்னயமாய் வாய்ஞானம் பேசியல்லோ
நாடுவார் நூலதனைக் கேட்பாரையா
பன்னுவா யில்லையென்று கருமிகட்குப்
பார்த்துநீ கொடுக்காதே நூல்காப்பாயே. (78)

பவள பற்பம்.

காப்பாரே பவளபற்பஞ் சொல்லக்கேளு
கண்மணியே விண்மணியே கருத்தாயப்பா
சீப்பாதே பவளமது பலந்தான்கொண்டு
சிற்பரனே நிம்பழத்தின் சாறுதன்னால்
கோப்பியமா யூறவைத்து ஐந்தாநாளில்
கொற்றவனே தானெடுத்துச் சொல்லக்கேளு
தீப்பான பத்தெருவிற் புடந்தான்போடு
திகழான வெந்தயக் கீரைச்சாறே. (79)

சாறேதான் விட்டரைத்துப் புடமேபோடு
சாங்கமுடன் பிரண்டைச்சாறு தன்னிலொன்று
வாறேதான் கையானின் சாறிலொன்று
வளமையுடன் பசளையிலே யொன்றுபோடு
கூறேதான் இதற்குநிக ருண்டோவென்று
கொடிதான காசங்க ளெல்லாமோடும்
தேறேதா னிப்போக்கு வெகுசுருக்கு
தெளிவுள்ளா யுந்தனுக்காய்ச் சொன்னேன்பாரே (80)

கருடக்கல் பற்பம்.

பாரடா கருடக்கல் பற்பங்கேளு
பாங்கான கருடக்கல் சுட்டெடுத்து
காரடா கீழ்க்காயை யறைத்துநன்றாய்க்
கண்மணியே கவசித்துப் புடமேபோடு
ஊரடா திரியாதே பண்ணைக்கீரை
உத்தமனே கவசித்துப் புடமேபோடு
சாரடா வரமூலி யதனிலொன்று
சார்பாகப் போட்டெடுத்தால் நீறிப்போமே. (81)

படிகாரப்பற்பம்.

போமடா யின்னுமொரு போக்குச்சொல்வேன்
பொறுமையுள்ள கண்மணியே புகலக்கேண்மோ
தாமடா படிகாரம் பலமேகொண்டு
தன்மையுள்ள நவநீத மேலுங்கீழும்
நாமடா குடுவையிலே வைத்துப்பின்பு
நலமான பத்தெருவிற் புடந்தான்போடு
வாமடா படிகாரப் பற்பமாச்சு
வளமையுட னெடுத்ததனைப் பதனம்பண்ணே. (82)

பலகறைப் பற்பம்.

பண்ணவே பலகறையாம் பற்பங்கேளு
பாலகனே பலகறையை நிம்பழத்தில்
தண்ணவே யூறவைத்து ஐந்தாநாளில்
தானெடுத்துப் புடமதுவே போட்டபின்பு
திண்ணவே பழச்சாற்று லாட்டியப்பா
தீர்க்கமுடன் புடம்போட்டு எடுத்துமேதான்
தண்ணவே யாவின்பால் விட்டேயாட்டி
நன்மைபெறப் புடம்போட்டு எடுத்துவையே. (83)

பாஷாணக் கட்டு.

வைத்துமே பாஷாணப் போக்குச்சொல்வேன்
வையகத்தில் மறைப்பின்றித் திறவுகோற்போல்
கைத்தவமாய்ப் பாஷாணம் பலமேவாங்கிக்
கழறுவேன் தேள்கொடுக்குச் சிறியதாக
தைத்துமே கிருமியென்ற தேக்கினோடு
சாதகமாய்ச் சார்பிழிந்து நாலுசாமம்
இத்தகையாய்ச் சுருக்கிட்டு எடுத்துப்பாரு
என்னசொல்வேன் பாஷாணக் கட்டதாமே. (84)

கட்டான கட்டதனைத் தாம்பிரத்தில்
காட்டிவிடு பத்துக்கு ஒன்றுவீதம்
திட்டான திட்டமதா யீய்ந்தபின்பு
தெளிவுள்ளாய் மதியதுதா னாறுக்கொன்று
சட்டமுடன் ருன்சேர்த்து எடுத்துப்பாரு
தாரணியில் வெள்ளிவித்தை யென்னசொல்வேன்
நட்டமது வாராது யிந்தப்போக்கு
நாயகனே காட்டாதே கருமிகட்கே. (85)

குன்மத்திற்கு.

காட்டாதே யாக்கோபு யென்போராகும்
 கண்மணியே உப்பதனைக் கழறக்கேண்மோ
தாட்டிகமாய்க் குன்மமென்ற ரோகமெல்லாம்
 தளரவே சோத்துப்பு யிந்துப்போடு
வாட்டமின்றி விளையலுப்புக் கரியுப்பையா
 வளமான பொட்டிலுப்பு நவச்சாரந்தான்
நாட்டமுட னுழமண் ணு சரக்கெல்லாந்தான்
 நாயகனே யோரிடையாய் திருத்துக்கொள்ளே. (86)

கொள்ளவே நிம்பழத்தின் சாற்றாலாட்டிக்
 கொற்றவனே பத்தெருவிற் புடந்தான்போடு
தள்ளவே கையானின் சாறிலொன்று
 தகைமையுடன் மேனிச்சா றதனிலொன்று
கள்ளமின்றிப் பிரண்டைச்சா றதனிலொன்று
 கருக்காகக் கெச்சக்கா யதனிலொன்று
வள்ளலே புடம்போட்டு எடுத்துமைந்தா
 வாகாகத் தேன்விட்டு ஆட்டிக்கேளே. (87)

கேளடா மெழுகதுபோ லுருட்டிமைந்தா
 கெடியான சுண்டைக்காய் வீதங்கொள்ள
நாளடா போக்காது பத்துநாளில்
 நாடாது குன்மமென்ற ரோகமெல்லாம்
வாளடா இம்மருந்து போலேயுண்டோ
 வளமான ரப்பமடா குன்மத்திக்குப்
பாளடா என்னுசான் சொன்னமார்க்கம்
 பாருலகிற் பொய்யாது மெய்யதாமே. (88)

மெய்யான இருவிரலை வைத்துப்பார்பார்
 மேன்மையுள்ளாய் ஆத்தாளின் கிருபைவேண்டும்
பொய்யாத ஞானமென்ற மார்க்கமையா
 புண்ணியனே நீபொருந்த யெல்லாஞ்சித்தி
நையாத மாந்தருக்கு உய்யாதையா
 நாடதனில் முனியாவாய் சித்தனுவாய்
கைதவமாய் ஆத்தாளின் ருளைவேண்டிக்
 கண்மணியே அந்தரங்க பூஜைபண்ணே. (89)

சித்தர்கள் மகிமைகூறல்.

பேச்சப்பா யாகோபு சொன்னேனையா
பொன்னகமாம் பொதிகமலை போயிருந்தேன்
வாச்சுதென்று மகாகோடி சித்தரெல்லாம்
வகையுடனே எனையழைத்து ஆசிகூறி
பேச்சப்பா வுபதேச மெனக்களித்துப்
பேருலகிற் சுகமாக வாழ்வாயென்று
காச்சலின்றி வரமளித்துக் கலந்துகூடிக்
கழறினார் நாதாக்க ளொன்றாய்த்தானே. (90)

ஒன்றாகச் சேர்ந்தல்லோ ஏதுசொல்வார்
ஓகோகோ இமயகிரி போவோமென்பார்
குன்றான இமயகிரி யிருபத்தொன்று
கொற்றவனே வரையுண்டு யார்தான்போவார்
என்றல்லோ கூறயிலே சித்தரெல்லாம்
எழுந்தாரே போகரிஷி முன்னதாக
க்ன்றான இமயகிரி யதனிற்செல்ல
கடினமில்லை யென்னோடு வருவீர்காணே. (91)

வருவீர்க ளெனவுரைக்கப் போகர்தானும்
வளமையுள்ள நாதாக்க ளெழுந்தாரையா
தருமதுரைச் சித்தரெல்லா மெனையழைத்தார்
தயங்கினே னெப்படிநான் வருவேனென்று
ஒருகுளிகை கெவனமது தந்தாரையா
ஓகோகோ வாயதனி லடக்கம்பண்ணி
குருவியது பறந்தாற்போல் சித்தரோடு
குறைவின்றி இமயகிரி வரைசென்றேனே. (92)

கிரியான சதுரகிரிக் குவடுக்குள்ளே
கிருஷ்ணன்முதல் நவகோடி ரிஷிகளெல்லாம்
உரிமையுடன் காண்பித்தார் போகர்தானும்
உரைப்பதற்கு நாவில்லை பாவுமில்லை
கரிகள்முதல் பலமிருகச் ஜெந்துவெல்லாம்
கணக்கிடவே முடியாது மகிமைதன்னை
சரிந்தவய தானோர்கள் பால்யராகச்
சாகாமற் றானிருக்க மூலியுண்டே. (93)

உண்டேதான் பிர்மாவின் பதிதானங்கே
உத்தமனே காலனுட பதியுமங்கே
சண்டமா ருதம்போன்ற அரக்கரங்கே
சார்பான கைலையங் கிரிதானங்கே
பண்டான சாத்திரத்திற் சொன்னதெல்லாம்
பாலகனே யங்குண்டு சிவகணங்கள்
கண்ணான நாதாக்க ளருளினாலே
கழறவென்றால் முடியாது என்னல்தானே. (94)

முடியாது முனிவருட மகிமைகூற
முன்னவனுஞ் சதாசிவனூர் பதிதானப்பா
படியான வரையதுதா னிருபத்தொன்றில்
பாங்குடனே தானிருந்தா ருமையினோடு
அடிமையென்று தாள்பணித்தோ மவரையப்பா
அருள்புரிந்தா ரெங்களுக்குச் சாம்பமூர்த்தி
கடினமது இமயகிரி யுயரங்கூறக்
காணவென்றாற் போகாது நூலைத்தேடே. (95)

நூலான போகரே ழாயிரத்தில்
நுணுக்கமுடன் தானறிவாய் மகிமையெல்லாம்
பாலான பாலதுபோல் பாடிவைத்தார்
பார்த்திபனே வரையதுதா னிருபத்தொன்றில்
சேலாகத் தானிருக்கு மளவையெல்லாம்
சேர்த்தொன்றாய்த் திரட்டிவைத்தார் நூலிலப்பா
மாலான மகாவிஷ்ணு பள்ளிகொள்ளும்
மகத்தான பெருங்கடலாம் போகர்நூலே. (96)

மகத்தான யிமயகிரி கடந்துமேதான்
மன்னவனே குளிகைகொண்டு சித்தரோடு
செகமயங்கச் சென்றேனே வடபாகத்தில்
தற்பானும் புசண்டரிஷி யடவிசென்று
அகமகிழ்ந்து அவர்பதத்தை வேண்டிநின்றோம்
ஆரப்பா நீங்களென்று வினவினார்பார்
மகத்தான பொதிகைமலைச் சித்தரென்று
மாமுனிக்குத் தானுரைக்க மகிழ்ந்திட்டாரே. (97)

இட்டாரே எங்களுக்கு ஆசிகூறி
இருங்களென்று தானுரைக்க யானெழுந்து
திட்டமுடன் சுற்றிவந்து தாள்பணிந்து
சிவசிவா யென்றெழுந்து நின்றேனையா
பட்டமாந் தழைக்கநீ பணிந்ததென்ன
பகருவாய் பாலகனே யெனப்புசண்டர்
சட்டையது போக்காத புசண்டநாதா
சாமிநீ ரெந்நாளிங் கடைந்தீர்தானே. (98)

தானான யென்குருவே யென்றுகேட்கச்
சாற்றினார் பிரளயந்தான் நூறுகண்டேன்
தேனான யாகோபு சொல்லக்கேளு
தெளிவுள்ளாய் பரமசிவன் தானழைத்தார்
மானான மானேநந்தி யழைத்தபோது
மைந்தனே யவ்விடந்தான் போயிருந்தேன்
பானுன் மனோன்மணியாள் பாகன்றானும்
பகருவாய் புசண்டாய்நான் கேட்டவாறே. (99)

புசுண்டர் சொல்வது.

கேட்டபடி தானுரைப்பா யென்றுநாதன்
கேட்டாரே யெந்தனையு மெவ்வாறென்னில்
நாட்டமுள்ள புசண்டரேயிவ் வுலகமெல்லாம்
நாதாக்கள் ரிஷிகள்முதல் பிர்மாவிஷ்ணு
நீட்டுபுக முலகெல்லாங் கடவுளான
ஜெகதீசன் யானழியும் வழியெவ்வாறு
தாட்டிகமாய் மறுபடியும் பிறக்கும்வாறு
சாங்கமுடன் தானியம்ப வேண்டும்பாரே. (100)

வேண்டுமென்று பரமசிவ னென்னைக்கேட்க
வெளியிட்டேன் யென்சாமி கடவுளானே
ஆண்டியெனு மென்தேவ சிவமேகேளு
அரகரா பிரளயந்தான் வருகும்போது
மாண்டுவிடு வார்சித்தர் யோகியெல்லாம்
மகாதேவா தேவர்முதல் பிர்மாவிஷ்ணு
தாண்டுவார் மானிடரு மழிந்துபோவார்
தற்பரனே யுலகமெல்லாம் ஜலமாய்ப்போமே. (101)

போகுமே சீவஜெந்து புற்பூண்டெல்லாம்
புண்ணியனே அடியேனுங் காக்கைபோல
ஏகுவே னுகாயந் தன்னில்நாதா
என்னசொல்வேன் பார்த்துக்கொண் டிருக்கும்போது
வாகுடைய வாழியிலே யாலின்மேலே
வளருதே யக்கினியாந் தம்பம்சுவாமி
காகுத்தன் நீரல்லோ கம்பந்தன்னில்
கலந்துகொண்டீ ரப்போது பார்த்தேன்தானே. (102)

அப்போது தம்பமது சிகப்புப்பச்சை
ஆகரா போலவல்லோ ஜோதிகண்டேன்
அப்போது மூன்றுமுக்கால் நாழிகைக்குள்
அதிலிருந்து பச்சைநிறப் பெண்ணணங்கு
அப்போது தாண்வெடித்து வெளியில்வந்து
அய்யனே கையமர்த்தி நின்றுள்பாரு
அப்போது அவளருகில் நீரும்வந்து
ஆண்டவனே நிற்கின்றீர் அறிவேன்றானே. (103)

ஆண்டவனே அவள்வந்து உலகமெல்லாம்
ஆகாகா வுண்டுபண்ணி பிர்மாவிஷ்ணு
தாண்டனே புற்பூண்டு சீவஜெந்து
தன்மையுடன் மனிதர்களை யுண்டுபண்ணி
ஈண்டனே யுந்தனையுங் கடவுளாக்கி
இடப்பாகந் தானமர்ந்தா ளந்தனுத்தாள்
ஆண்டவனே சத்தியவள் சிவமு நீரே
அய்யனே நீரவளு மொன்றுதானே. (104)

ஒன்றாகி யிரண்டாகி யேகமாகி
உலகெல்லாந் தானிறைந்த பொருளுமாகி
கன்றாகிப் பசுவாகிக் கடவுளாகிக்
கருதுகின்ற வைம்பத்தோர் லக்கமாகி
குன்றாகி யணுவாகி யைந்தெழுத்தாய்
கோடான முக்கோணம் நாற்பதாகி
நன்றான வாறெழுத்தா யெட்டெழுத்தாய்
நாயகனே பத்தெழுத்தாய் நின்றீர்தானே (105)

யாகோபு சொல்லுவது.

தானான சோதிமயம் நீர்தானென்று
　　தற்பரற்குத் தானுரைத்தார் புசண்டர்தானும்
கோனான புசண்டரவர் சொன்னசொல்லைக்
　　கொற்றவனே யுந்தனுக்குச் சொன்னேனப்பா
தேனான என்மகனே தெளிவுள்ளானே
　　தேசமதில் புசண்டர்போ லாருமில்லை
மானான அப்பாளி னருளினாலே
　　மகாகோடி யுகம்வரைதா னிருக்கலாமே. (106)

பவள பற்பம்.

இருக்கலா மின்னுமொரு போக்குக்கேளு
　　என்மகனே பவளபற்பஞ் சொல்வேனப்பா
பொருக்கவே பவளமது பலந்தானைய்யா
　　புண்ணியனே நிம்பழத்தின் சாறுதன்னில்
கருத்துடனே ஊறவைத்து யேழாம்நாளில்
　　கண்மணியே தானெடுத்துப் புடமேபோட்டு
மருமமில்லை மறுபடியும் பழச்சாற்றாலே
　　மைந்தனே தானரைத்துப் புடமேபோடே. (107)
போடவே யிப்படியே முறைதானைந்து
　　புடமதுவே தான்போட்டுப் பதனப்பண்ணு
நீடவே வெகுசுருக்கு யிந்தப்போக்கு
　　நீனிலத்திற் பொய்யாது மைந்தாசொன்னேன்
வாடவே வேண்டாங்காண் அறிவுள்ளானே
　　வையகத்தில் மானிடர்க்குச் சயரோகந்தான்
ஓடவே வழிபார்க்கு முண்மையாக
　　ஓகோகோ வுந்தனுக்காய் வரைந்திட்டேனே (108)

வெள்ளி வித்தை.

தானான என்குழந்தா யின்னுமொன்று
　　சாற்றுவேன் வெகுசுருக்கு வெகுசுருக்கு
கோனான கணேசருட வாகனந்தான்
　　கொற்றவனே மூஷிகத்தி னெலும்பைவாங்கி
வானான சுட்டசெம்பு தனையுருக்கி
　　வளமையுட னெலும்பினால் கிளறுவாய்நீ
தேனான என்மகனே சொக்கமாகும்
　　செகத்திலே வங்கத்திற் கேகுந் தானே. (109)

ஏகாமல் தானிருக்க வகைதான் கேளு
என்மகனே வெள்வங்கப் பற்பமீவாய்
போகாது வங்கமுதற் புடத்துக்குத்தான்
புண்ணியனே பொய்யாது மெய்யதாகும்
பாகான பாகமிது பாருளோர்க்குப்
பகராதே பத்திரமாய்ப் பாதுகார்ப்பாய்
சாகாமல் நீயிருந்து வித்தைபாரு
சடலத்தைப் போக்காதே வீணில்தானே. (110)

ஞானம்

வீணிலே போக்காதே விண்ணைப்பாரு
மேவிநின்ற ஆத்தாளின் பதிதானங்கே
ஊணியே உற்றுப்பார் பத்துதீக்ஷை
யொன்றாகிப் போகுமல்லோ நாட்டந்தானே
வாணியுட பாலுண்டு வையகத்தில்
வளர்த்திடுவா யாயுளை நீ வளமையாக
ஏணியென்ற வாசியை நீ பாய்ச்சிப்பாரு
என்னசொல்வேன ஜோதிமயங் காணுந்தானே. ()

ஜோதியதிற் சொக்கிடுவாய் சொரூபாரூபம்
தோனறுமே வாசியென்ற மனத்தினாலே
ஜாதிபேதம வையாதே தாணிமிது
சாற்றுவேன் மனந்தானே சிவந்தானையா
ஆதியென்ற ரவிமதியு மனத்தினாலே
ஆகார வெண்சாரை மனத்தினாலே
பாதிமதி சடையணிந்த தம்பிரானும்
பரிவாக உன்னுள்ளே நோக்கிப்பாரே. (112)

பாரப்பா உன்னுள்ளே ஜோதியொன்று
பகர்ந்தாரே மூச்சுடராய் மனத்தினாலே
சீரப்பா அரியயனு ராணுமொன்று
செப்பினார் ஜெகக்கியானி செவ்வையாக
நேரப்பா அதைக்கண்டு சித்தரெல்லாம்
நேர்த்தியுடன் பாடிவைத்தார் நீனிலத்தில்
கூரப்பா கொட்டிவிட்டார் கோளாறாகக்
கொற்றவனே தீர்த்தமென்றுங் கோவிலென்றே. ()

கொற்றவனே வாணருட சாத்திரத்தைக்
கோருதே மனயதுவே மாய்கைசிக்கும்
எற்றிசையில் நாதாக்கள் பாடிவைத்த
வடதனைக் கைவிடா துற்றுப்பாரு
நற்றவத்தோர் தனையடுத்து நயங்கள்பேசி
நாயகனே யவர்களுக்குத் தொண்டுசெய்து
அற்றவரோ நூலினுட வுளவைக்கூறி
அரகரா கரையேற வழிசொல்வீரே. (114)

சொல்லுவீ ரென்று நீ யவரைக்கேட்டால்
சொல்லுவார் நூலினுட வுளவையாவும்
கல்லுவாய் ஞானமென்ற பாதைதன்னைக்
கண்மணியே யான்சொன்ன வாறுபோல
வெல்லுவாய் மாய்கைதனை விட்டேநீயும்
வேதாந்த பூரணத்திற் சொக்கித்தூங்கி
நல்லதொரு மெய்ஞானி யாகிப்போவாய்
நாடதனி லுனைச்ஜெயிக்க யாராலாமே. (115)

போய்ஞானி.

ஆமடா உலகினிலே சாம்பற்பூசி
அப்பனே யுருத்திராட்ச மாலைபூண்டு
தாமடா பூங்காவி தன்னைப்பூண்டு
தற்பரன்போற் சடைபூண்டு குறடணிந்து
வாமடா பிரப்பங்கோற் கைபிடித்து
வளமான சாத்திரத்தைக் கையணிந்து
நாமடா நாதாந்தக் குருவேயென்று
நாடதனில் தான்மயக்கக் கூறுவாரே. (116)

கூறுவார் சாத்திரத்தின் பாடலெல்லாம்
கொற்றவனே நூலினுட வுளவைக்காணார்
வீறுடைய நூலையல்லோ பாடம்பண்ணி
விள்ளுவா ருளவதனைக் கண்டோன்போல
வாறுகே ளெனக்கென்ன தெரியுமென்பார்
வளமான வென்குருசான் கிருபையென்பார்
தேறுவேன் பார்தட்டிக் கழுதையென்பார்
தெளிவான மெய்ஞானி போற்சொல்வாரே. (117)

தெளிவான சுந்தரனே யெனவழைப்பார்
        தேசமதிற் சிக்காதே மாய்கைதன்னில்
வழிபோலச் சொல்வாரே சித்தன்போல
        வளம்பெரிய பூஜைக்கு வரைதான்வேண்டும்
அளிப்பாயென் றுரைப்பாரே யன்பன்போல
        ஆகாகா வாய்ஞானம் பேசுவான்பார்
பழிக்காதே யென்னைப்போற் பெரியோர்தம்மைப்
        பாலகனே சாபமது யெய்துந்தானே. (118)

எய்யுமே பத்திரமாய்த் தொண்டுபண்ணு
        என்மகனே யருள்தருவார் நமச்சிவாயம்
பொய்யாது என்வாக்கு யென்றுசெல்வான்
        புலையனல்லோ சிலகாலஞ் சென்றபின்பு
மெய்யான யென்மகனே யென்னவேண்டும்
        மேதினியி லுன்னைப்போல் தொண்டெனக்கு
செய்யார்க ளுலகிலே யென்றுசொல்லச்
        செப்புவான் பேராசை கொண்டுதானே. (119)

செப்புவான் பேராசை தன்னையூட்டிச்
        செப்பரிய வாதமதைச் செய்வேனென்பான்
தப்புகள்நான் செய்தாலும் பொறுப்பீரென்றுஞ்
        சமுசாரம் நானல்லோ பிழைக்கவென்றுங்
கப்பியதோர் பசியாலே கேட்கமூடன்
        கழறுவான் குடிகெடுக்கும் சங்கமன்றான்
அப்படியே யென்மகனே தருகுவேனுன்
        அப்போதே யரைப்பலந்தான் ரசமீவாயே (120)

ஈவாயென் றுரைக்கையிலே மூடசீஷன்
        எழுந்திருந்து அரைநொடியில் ரசமேதந்து
தேவாநான் கொணடுவந்தேன் பெற்றுக்கொள்வீர்
        தெளிவுளள யென்னாசா னெண்ணவேண்டும்
ஏவான யேவலது புரிவீரென்று
        என்சொல்வேன் சீடனவன் வினவும்போது
கோவான பொய்ஞ்ஞானி பெற்றபிள்ளை
        கூறுவான் வேஷகுரு சொல்லக்கேளே (121)

கேளடா யென்சீடா ஒன்றுமீவேண்டாம்
கிட்டயிரு காட்டுகின்றேன் வாதவித்தை
நாளடாபோக்காது நிமிஷந்தன்னில்
நாயகனே யென்றுசொல்லி யெழுகெடுப்பாய்
கேளடா பொய்க்குருக்கள் சொல்லும்போது
கொப்பெனவே தானெழுந்து மெழுகையீய
வாளடா மூசையிலே ரசத்தைவைத்து
வளமையாய்த் தானுருக்கி மெழுகைத்தானே. ()

மெழுகீய்ந்த பின்பல்லோ ரசந்தானையா
மேன்மையுள்ள பிறவியென்ற தங்கமாச்சு
கழுதையென்ற பொய்வேஷந் தரித்தகாமி
கழறுவான் ஒருவருக்குங் காட்டிடாதே
பழுதான வித்தையிது இந்தப்போக்கு
பாலகனே தானறியா மூடச்சீடன்
வழுத்துவான் குருமுடிக்க என்னவேண்டும்
வழங்குவீ ரெனவுமப்பான் சீஷன்றானே. (123)

தானான சீஷனவன் கேட்கும்போது
தயங்காதே குருமுடிக்கப் பொருள்தான்வேண்டும்
கோனான குருபானுங் கழுதையப்பா
கூறவே சீஷனவன் பொருள்தான்கொட்ட
தேனான யென்மகனே மூலிதன்னைத்
தேடுவோ மென்றல்லோ தெரியமற்றான்
கானான காடடைந்து வேஷம்நீக்கிக்
களைந்திடுவான் தாடிமீசை யெல்லாந்தானே. ()

மீசைமுதல் ரோமமெல்லாம் மடித்துவிட்டு
மீள்வானே மறுதேசம் போய்மயக்க
ஆசைவைத்து யிப்படியே யலைவான்பாவி
அப்பனே யவர்களிடஞ் சேராதேநில்
பாஷையது வேறாகப் பேசுவான்பார்
பணம்பறிக்கத் தங்கசத்து மெழுகிலேற்றி
காசையிலே மைப்பிரட்டாய்ப் பிழைப்பானல்லால்
கண்மணியே கதியில்லை நரகந்தானே. (125)

மெய்ஞானி.

கண்மணியே யவர்களிடம் யேமாருதே
கண்டுன்னை யடைந்தாக்கால் தூரமாய்நில்
விண்மணியே மெய்ஞ்ஞானி வருவாருண்டு
விள்ளுவேன் வருமபோது மகிமைதன்னை
மண்ணிலே பட்டமரந் துளிர்த்துப்போகும்
மகத்தான பிரம்மநிலை கண்டமேலாம்
பண்ணவர்கள் கூறவொண்ணு மகிமையப்பா
பார்த்திபனே யவர்தேக மின்னுந்தானே- (126)

மின்னுமே பித்தரைப்போல் திரிவாரப்பா
மேதினியில் நின்னேடே பேசார்பாரு
பன்னுவேன் நீயடுத்தால் கல்லினுலே
பாய்ச்சுவா ருன்மேலே பித்தரைப்போல்
உன்னுவாய் கருவாளி யானல் நீயும்
உகந்துகொள்வா யவர்மகிமை தன்னையப்பா
இன்னிலத்தில் கருவாளி காண்பானல்லால்
இணக்கமில்லாக் கருமியவர் காணர்பாரே. (127)

காணரே தன்னிலையில் நிற்பாரையா
கண்மணியே யவரைக்கண்டால் விட்டிடாதே
தோணரே மாய்கையினுல் மறைந்துகாண்பார்
தொல்லுலகில் நிலதமிட்டுக் கண்டுகொள்ளு
ஊணை வூணுறக்க மற்றஞானி
உத்தமனே யவர்பதத்தைத் தொண்டுபண்ணி
நாணமற் கதிபெறவே வழியைக்கேட்டால்
நவிலுவார் மனமுவந்து நாதர்தாமே. (128)

மறைப்புமை.

தாமடா மறைப்புமை சொல்லக்கேளு தகமையுள்ள யென்சீஷா தயவுள்ளானே, நாமடா நிழல்வணங்கித் திகைப்பூடப்பா நன்மையுள்ள சுழற்பூச்சி தொட்டால் வாடி, ஆமடா பிரம்மராக் காச்சியோடு அப்பனே பேய் மிரட்டி தாய்வணங்கி, பாமடா கரும்பூனைக் கண்ணும் பித்தும் பருந்தினுட பித்தோடு ஆந்தைப் பித்துங், காமடா காடையுட பித்துங்கூட்டு கண்மணியே செம் போத்துப் பித்துங்கூட்டே. (129)

கூட்டடா வால் நீண்டான் பித்துங்கூட்டு
குணமான அடைக்கலத்தின் பித்துங்கூட்டு
நாட்டடா கருநாயின் பித்துங்கூட்டு
நயமான கருங்கோழிப் பித்துங்கூட்டு
வாட்டமின்றிக் கௌதாரிப் பித்துங்கூட்டு
வளமான காக்கையென்ற அண்டங்காக்கை
தாட்டிகமா யதனுடைய பித்துங்கூட்டு
தன்மையுடன் ஊமத்தன் கருப்புமாமே. (130)

மத்தனுடன் கருநொச்சி கருங்கையான்றன் மகத்தான மயக்கிவேர் கருவேம்போடு, இத்தகைய சரக்கெல்லா மொன்றாய்ச்சேர்த்து என்மகனே யேழிஞ்சித் தயிலத்தாலே, சித்திபெறத் தானரைப்பாய் மைபோலாகச் சின்மயனே கஸ்தூரி புழுகினோடு, பத்தியதாய்ப் பச்சைக் கற்பூரமப்பா பகருகிறேன் கோரோசனை குங்குமப்பூ, மத்தித்துச் சிமிழதனிற் பதனம்பண்ணி மனோன்மணிக்குப் பூஜைநை வேத்தியஞ் செய்யே. (131)

பூஜைசெய்து லலாடமதி லணிந்துகொண்டு
புண்ணியனே நீயேக மறைப்பேயாகும்
காசையிலே கள்ளரடா வனேகம்பேர்கள்
கழறுவே னவர்கண்ணிற் புலப்படாதே
நேசமது செய்வதற்கு வருவார்கோடி
நீமகனே திலதமிட்டு வருவாய்பார்
ஆசைவைத்து யாருக்குஞ் சொல்லிடாதே
ஆகாகா இதுவென்ன மகிமைநன்றே. (132)

வெள்வங்க வட்டை.

நன்றான யின்னுமொரு போக்குச்சொல்வேன்
நாயகனே வெள்வங்க வட்டைகேளு
குன்றான கோடாசூழி யிலையரைத்துக்
கொற்றவனே வங்கத்திற் கவசஞ்செய்து
பன்றான புடமதுதான் எருவேபத்து
பாலகனே புடம்போட வட்டையாகும்
நன்றான வட்டையதைப் பதனப்பண்ணு
நாடதனிற் காட்டதே கருமிகட்கே. (133)

வங்கச் செந்தூரம்

காட்டாதே வட்டையை நீ சட்டிதன்னில்
கருத்துள்ளாய் மூச்சாம மெரிக்கும்போது
தாட்டிகமாய் கிளாவேரு சுங்கன்வேரு
தகைமையுடன் கத்தையதாய்க் கட்டிக்கொண்டு
வாட்டமின்றித் தான்கிளறச் செந்தூரந்தான்
வளமையுட னுட்டிரத்தம் போலேகாணும்
நாட்டமுடன் செந்தூரந் தனையெடுத்து
நாட்டடா மதிமேலே பத்துக்கொன்றே. (134)

மதிமேலே யீய்ந்தாக்கால் வயதோயெட்டு
மைந்தனே ஜீவனத்தைச் செய்துகொண்டு
விதியதனை வெல்வாயே விண்ணினுலே
விள்ளாதே சாத்திரத்தை வாய்ந்துபாரு
சதியான மேகவலை சிக்கிடாதே
தற்பரனுங் குருபதத்தைத் தொண்டுபண்ணு
கதிபெறவே யுலகினிலே ஆசானைப்பார்.
கண்மணியே மூனியாவாய் சித்தாவாயே. (135)

வெள்வங்க நீர்வாங்க.

மூனியாவா யின்னுமொரு வயணங்கேளு
மூனையான நிலாவிரையோ டெட்டியோடு
கனிவான யிலையதனைக் சூடுவைமில்லை
கருத்துள்ளாய் வெள்வங்கம் ரூபாய் தூக்கம்
இனிமையுடன் தான்வைத்து இலைமேற்போடு
என்னசொல்வே னென்மகனே வேதைதன்னை
வனிதையுட னிப்படியே தூக்கம்மூன்று
வளம்பெறவே வங்கத்துக் கீழ்மேற்செய்யே. (136)

செய்துமே யிருபதுதா னெருவிலையா
செய்பாக மாகவல்லோ புடமேபோடு
நையவே நீரேகிச் சுத்தமாகும்
நானிலத்தில் என்னசொல்வேன் வெகுசுருக்கு
பய்யவே யெடுத்துவிளை யாடுவாய்நீ
பாருலகிற் கழருதே மகிமைதன்னை
உய்யவே உந்தனுக்காய்ச் சொன்னேனல்லால்
உத்தமனே கருமிகட்கு விள்ளேன்நானே. (137)

வகார வித்தை.

விள்ளவே கருமான மொன்றுகேளு
விண்ணவனே பாஷாணம் ரசமவெண்காரம்
மெள்ளவே சீமைச்சுண்ண மிவையெல்லாந்தான்
மேன்மைபெற எடையதுதான் ரூபாயாகும்
கள்ளமில்லை வாழையென்ற பழத்திலேலே
கண்ணே நீ யரைத்துமே குடுவையில்வை
வள்ளலே அப்ரேகம் வாய்மேல்வைத்து
வழக்கமா யதன்மேலே செம்பைவையே. (138)

செப்பதுவும் அரைரூபாய்த் தூக்கம்தூக்கிச்
சேயேகேள் தகடாக்கி வைப்பாயப்பா
நம்படா அதன்மேலே ஓடுவைத்து
நாயகனே சீலைசெய்து புடமேபோடு
வம்பில்லை யிருபதுதா ளெவிற்போட்டு
வாகாகச் செம்பதனைப் பதனப்பண்ணு
உம்பர்கள்தா னறியார்கள் செப்புதன்னை
உத்தமனே வெருஞ்செப்பில் நாலுக்கொன்றே. ()

நாலுக்கு ஒன்றாக யீய்ந்தபின்பு
நாயகனே வெள்ளியது சரியாய்ச்சேர்த்து
பாலுக்கு உவமையல்லோ யிந்தப்போக்கு
பகருகிறேன் வெள்வங்கப் பற்பமீவாய்
மாலுக்குச் சமூசாரி செய்யும்வித்தை
மார்க்கமடா யிப்போக்கு போலவுண்டோ
வேலுக்கு நிகராவா யப்பா நீயும்
வெட்டவெளிப் பதிமேவி நில்லுநில்லே.

நில்லுநீ சுயத்தங்கம் செய்வதற்கு
நீணிலத்தில் தாமிரத்தை யுருக்கியப்பா
வெல்லுவாய் வார்பூண்டு பிழிந்தாயானால்
வேதாந்தத் தங்கமது மாற்றூறு
நல்லதொரு ரிஷிமுனிவர் செய்யும்வேதை
நாட்டிலே சமூசாரிக் கொவ்வாதப்பா
இல்லறத்தோர்க் குரைக்கவில்லை துறவிக்கப்பா
எடுத்துரைத்தேன் விநோதவித்தை வாதந்தானே.

வாதமது செய்வதற்கு யாராலாகும்
வகுத்தபிரான் றன்னருளா லாகுமோசொல்
பேதமது செய்துமல்லோ பிழைப்பார்பாரு
பேருலகில் சுயத்தங்கம் செய்வாரில்லை
வேதமது கற்ருேன்போல் பேசுவான்பார்
வேதாந்தங் கடந்துநின்ற முனியோசெய்வான்
காதமது யில்லையடா வாதங்காணக்
கருத்துள்ளோன் நோக்கினல் வாதந்தானே. (142)

மலை மகிமை கூறல்.

தானேதா னிமையகிரி வடபாகத்தில்
சாற்றுவேன் அமலமலை யொன்றுஉண்டு
கானேதா னம்மலைக்கு மேற்பாகத்தில்
கழறுவேன் தங்கமலை யொன்றுகண்டாய்
நானேதான் போய்க்கண்டே னப்பாகேளு
நாதாக்கள் வெகுபேர்க ளங்கேயுண்டு
வானேதா னவர்களையுஞ் சுற்றிவத்து
வணங்கியே தொழுதிறைஞ்சி நின்றேன்காணே. ()

வணங்கியதோ ரெந்தனையா ரென்றுகேட்டார்
வளப்பெரிய வகத்திசர் சீடனென்றேன்
இணங்கியே யெந்தனையு மாசிகூறி
இருவென்ருர் பொறுவென்ருர் நாதரப்பா
கணப்போது அந்தரமாய்த் தலைகீழாகக்
கடுந்தவங்கள் செய்தாரே யென்னசொல்வேன்
பிணம்போலத் தானிருந்தார் சணநேரந்தான்
பேசினுர் மறுபடியும் எந்தனேடே. (144)

பேசினுர் பார்த்துக்கொண் டிருக்கும்போது
பேர்பெரிய சிங்கமது வந்ததங்கே
மாசிலாச் சித்தர்முன்பு வணங்கிநின்று
மகத்தான கர்ச்சனைகள் செய்ததப்பா
தேசியிலே யுனேச்சார்ந்த மிருகமெல்லாம்
திரண்டோடி வரச்செய்வீ ரெனவுரைத்தார்
வாசியைப்போல் பாய்ந்தல்லே நரிகள்கூட்டம்
வாகான நரிக்கூட்டம் புலிதானுமே. (145)

புலிக்கூட்ட மூதற்கொண்டு மிருகமெல்லாம்
புண்ணியனே யழைத்துவந்த திச்சிவிங்கி
கலியான மிருகமெல்லாம் காதல்செய்யக்
கண்டேனே விஞேதயதை யென்னசொல்வேன்
வலிதான பவமகற்றும் வள்ளலானோர்
வணங்கியதோ ரென்னையுமே யழைத்துக்கொண்டு
சலியாது அடவிசென்று வெகுதூரந்தான்
சார்ந்தோமே யோர்மலையி னடியிற்றானே. (146)

மலையதிலே வோர்மூலி கண்டோமையா
மகத்தான் மூலியிலே புட்பங்கண்டோம்
கலையான புட்பமது வெடித்துமல்லோ
கைலாச வாசரைப்போல ரிடிவந்தார்பார்
அலையான கடல்போன்ற கருணையுள்ளோர்
ஆகாகா அவர்மகிமை யின்னுங்கேளு
வலையான பவக்கடலை யொழிக்கநாதன்
வளமான முடிமீதிற் சடைகண்டோமே. (147)

கண்டோமே மலர்போன்ற முகத்தையையா
கணக்கிடவோ முடியாது ஆயுள்தன்னை
சண்டமாருதம்போன்ற ரிடிதானேது
சாற்றுவார் யாரப்பா நீங்களென்று
அண்டியே தான்பணிந்து ஏதுசொல்வோம்
அப்பனே தங்கமலைச் சித்தரென்றும்
விண்டவுடன் எங்களுக்கு ஆசிகூறி
இருங்களென்று தானுரைத்தார் சொல்லக்கேளே.

கேளடா யெங்களுக்குத் தங்கமூலி
கெணிதமுடன் தானீய்ந்து பேசிச்சொன்னர்
தாளடா போக்காது புசித்தோமையா
நற்பாலா தேகமது தங்கமாச்சு
வாளடா ஞானவா னெங்களுக்கு
வழுத்திஞர் வெகுசுருக்குப் பாதைதன்னை
கோளடா யில்லையிது வாக்குப்பொய்யா
கொற்றவனும் புட்பரிஷி சொன்னவாக்கே. (149)

வாக்கான புட்பரிஷி யாச்சிரமத்தில்
வாகான மூலிகைதான் மகிமைமெத்த
நாக்கமலத் தாயாரி னருளையுன்னி
நாடினே னவர்பதத்தை மிகவாயெண்ணி
காக்கையிலே யவரிடத்தில் விடைதான்பெற்றுக்
கண்மணியே தங்கமலை வந்துசேர்ந்து
பார்க்கையிலே தங்கமலைச் சித்தர்பாதம்
பணிந்துமே விடைபெற்று வந்தேன்தானே. (150)

வந்தேனே யின்னமொரு வயனங்கேளு
வழுத்துவேன் வீரசுண்ணந் தன்னையப்பா
சொந்தமாய்ப் பொரிமூலி யறைத்துநன்றாய்ச்
சொகுசாக வீரத்திற் கேதுசெய்வாய்
கந்தனே கவசித்துப் புடமேபோடு
காட்டாதே பத்துப்பல மெருவேயாகும்
இந்தவகை செய்தாக்கால் நீறிப்போகும
என்மகனே கடுங்காரச் சுண்ணந்தானே. (151)

ரசச் சுண்ணம்.

தானான சுண்ணமதைப் பதனம்பண்ணு
தயங்காதே ரசச்சுண்ணஞ் சொல்லக்கேளு
கோனான கொடிப்பூண்டைத் தானரைத்துக்
கொற்றவனே தொன்னைசெய்து ரசந்தானப்பா
தேனான அரைப்பலந்தான் வார்த்துமூடித்
தெளிவாக அகலிலிட்டுக் கவசித்தேதான்
மானான எழுசீலை வலுவாய்ச்செய்து
மைந்தனே பத்தெருவிற் புடந்தான்போடே. (152)

அப்பிரேகச் செந்தூரம்.

போடவே புடமாறி யெடுத்துப்பாரு
பொலிவான சுண்ணமது காரமெத்த
நீடவே யப்பிரேகச் செந்தூரங்கேள
நீணிலத்தில் பிரமவேர்ச் சாற்பிழிந்து
ஆடவே யப்பிரேக மூன்றுநாள்தான்
அப்பனே யூறவைத்துச் சொல்லக்கேளு
நாடவே மலைதாங்கி யிலையரைத்து
நவிலுவேன் கவசித்துப் புடந்தான்போடே. (153)

புடமதுதான் போட்டபின் பெடுத்துப்பாரு
புதுமையடா யம்பிரேகச் செந்தூரந்தான்
தடமான செந்தூரங் குங்குமப்பூ
தாரணியில் வாதத்துக் குறுதியாகும்
மடமான சிவபூஜை மறந்திடாதே
மானிலத்தி லின்ன மூண்டு சிடிகைவேதை
இடமான யிடம்பொருளே வல்தான்வேண்டும்
இஷ்டமுள்ளோய் வாதமெல்லாங் கொட்டினேனே

கொட்டினேன் மூலிகையைக் காணுதற்குச்
சோடிப்பாய் சொர்ணவயி ரவரின்பூஜை
இட்டமுடன் பூஜிக்க மூலியெல்லாம்
இதுயிதுவென் றறைவாரே வயிரமூர்த்தி
கட்டமது படவேண்டாங் கருத்தாயப்பா
கழறுவே னிவரைவிட்டா லாசான்வேண்டும்
மட்டியிடஞ் சேராதே மைந்தாசொன்னேன்
மகாகோடி வித்தையெல்லாங் கொட்டினேனே. 155

வித்தையிது வொருவருக்குங் காட்டிடாதே
விண்மணியே கண்மணியே விளயபக்கேண்மோ
பத்தியுடன் நூலதனைப் பதனம்பண்ணு
பகராதே கருமியென்ற மாணபருக்கு
எத்தனையோ நூல்சொன்னார் சித்தரெல்லாம்
என்னாற்போல் திறமாகச் சொல்லவில்லை
நத்துவா யமபாளின் ருளையப்பா
நாதாந்தப் பேரொளியை நண்ணுவாயே. (156)

நண்ணுவா யடைந்தவரைக் கார்க்கவேண்டும்
நாடதனில் பொய்சொல்லா திருக்கவேண்டும்
எண்ணுவா யுலகெல்லாந் தன்னைப்போல
ஏழையைநீ கார்த்திடுவா யிணக்கமாக
விண்ணுலகோர் யாவருமே மெச்சுவார்கள்
வேதாந்தத் தாயினது அருளினாலே
கண்ணியமா யுலகினிலே புண்யவானாய்க்
கலக்கமற்றுத் திரிவாய்நீ யின்னுங்கேளே. (157)

மேகநாதக் குளிகை

இன்னுங்கேள் கருமான மொன்றுசொல்வேன்
எளிலான சகலரோ கத்துக்கெல்லாம்
பொன்னவனே மேகநாதக் குளிகைகேளு
பொலிவான் சையோக மிகுந்ததாலே
வன்னியது மிகவாகு மாந்தருக்கு
வருகூடு தான்மிகவாய் மேகமுண்டாய்
கன்னியினல் நோய்பிறக்கும் மேகம்போக்கக்
காட்டுகிறேன் குளிகைசர்க் கரைதானுமே. (158)

சக்கரைசுக் கேலமொடு மிளகுமாஞ்சில்
ஜாதிக்காய் பத்திரியுங் கிராம்புகோஷ்டம்
மிக்கஅதி மதுரமுடன் அமுக்கிருவும்
விதமான வால்மிளகு கசகசாவும்
தொக்கவங்க பலமிரண்டுஞ் சட்டியிட்டுச்
சுருதியெனும் பாலிலிட்டுப் பாகாய்க்காய்ச்சி
பக்கமுள்ள மூன்சாத்தை யதிலேயிட்டுப்
பாகாக யிறுகுபதம் பார்த்துக்கொள்ளே. (159)

பார்த்தெடுத்தீ சாராயந் தேனுமிட்டுப்
பதமாக வுத்தியள் வாகச்செய்து
சாற்றிடுவா யொருகுளிகை கொடுத்துப்பாரு
சதுரத்தில் வகனமுதற் பேதிநிற்கும்
காற்றுநவ மூலத்திற் கிராணிநல்ல
கடிதான செறியாமை வாந்திநிற்கும்
போற்றியே தேகத்தைப் பார்த்துத்தாக்கு
புகலறிய யாகோபு புகன்றிட்டாரே. (160)

கூவென்ற சொற்கேட்டு நபிமாரெல்லாம்
குண்டலியைத் தானசைத்துத் தீன்தீனென்றார்
ஆவென்ற சொற்கேட்டு நபிமாரெல்லாம்
அசனுசனும் வேறல்ல நீநானென்று
மாவென்று மொட்டியொன்று மெய்ந்துநல்ல
மக்கத்திற் போயிருங்க ளென்றுசொல்ல
ஈயென்ற சொல்லோடு மக்கந்தன்னிற்
இருந்தனடா கோடிவரை சொன்னேன்பாரே. ()

மெய்ஞ்ஞானம்.

சொன்மொழி தவறாமல் பூதானந்தர்
தொல்லையற்று நின்றதொரு மார்க்கமெல்லாம்
நன்னயமாய்க் கூறினு ரெந்தனுக்கு
நற்சீடா யென்குருவுஞ் சொன்னவாக்கு
உன்னதமாம் பூவுலகி லையாகேளு
ஒருக்காலும் பொய்யாது ஞானமார்க்கம்
கன்னியமா யெந்தனுக்கு உபதேசித்தார்
கண்மணியே யெட்டெட்டுச் சித்துதானே (162)

சித்தான கருவிகர ணங்களெல்லாந்
தெளிவான மாந்திரீக யோகமார்க்கம்
மூத்தான கைப்போக்கு வுளவுமார்க்கம்
முதலான வைத்தியநூ டன்னைச்சொன்னார்
கத்தனைத்தா னறியும்வகை காணச்சொன்னார்
கருவான மனோன்மணியாள் நிலையைச்சொன்னார்
எத்திசையிற் பகைவரெல்லாம் நடுங்குமார்க்கம்
எளிதான சூக்குமத்தைக் காண்பித்தாரே. (163)

காண்பித்தார் முன்னமே யையாநானுங்
கருவறியா மூடர்கள்தன் மொழியைக்கேட்டு
மாண்பர்கள்தா னலையுமந்த மார்க்கந்தன்னை
மண்டலத்திற் கண்மூடுஞ் ஜெபங்கள்சொன்னார்
வீண்காலங் கழித்தல்லோ விருதாவாக
விட்டுவிட்டுப் பிரட்டிஜெப மாலைதன்னைக்
காண்டுவிட்ட நபிமார்போ லட்சாலட்சங்
கணக்கான வுருவதனைச் செய்திட்டேனே. (164)

செய்தேனே கணேசருட பூஜைசெய்தேன்
ஜெயமான வாலைதனைப் பூஜித்தேன்யான்
வைதேனே யறுமுகவர் தன்னைவேண்டி
வகையாக வயிரவர்தன் ஜெபத்தைச்செய்தேன்
கைதவமா யெண்ணியல்லோ காளிபூஜை
கனமான குறளிகுட்டி சததிபூஜை
மெய்யென்று மாடனு ரிருளன்பூஜை
மேலான பூஜையெல்லா முடித்தேனனே. (165)

முடித்துமே பலனொன்றுங் காணவில்லை
யொருபொருளு மறியாமற் போனேனப்பா
கடித்துமே பற்களெல்லா முதிறவேதான்
கலங்கினேன் கண்ணீர்விட் டழுதேன்சேயே
நொடிப்பொழுதி லூரெல்லாந் திரிந்தலைந்தேன்
நோயுற்ற மனிதனைப்போ லேங்கிநின்றேன்
தடிபிடித்த பித்தர்களைப் போலேயையா
தற்பரனை யறிந்தகுரு வந்தார்தானே. (166)

தானான குருவவரை நமஸ்கரித்துத்
தாரணியில் மூன்றுதரம் வலமாய்வந்தேன்
கோனான யென்குருவா மூர்த்திநாதர்
கோடான கோடிபொரு ளெனக்குயீய்ந்தார்
நானான மமதையதை யொழித்தேனையா
நலமாகப் பன்னிரெண்டு வருடங்கார்த்தேன்
தேனான மனோன்மணியாள் நிலையைக்கண்டேன்
தெவிட்டாத தெள்ளமுத முண்டிட்டேனே (167)

உண்டேனே மனதிற்குட் தெய்வங்கண்டேன்
உற்றபொரு ளிருக்குமிட மாராய்ந்தேனான்
கண்டேனே நிலவகனைக் கண்டுகொண்டேன்
காணாத கருவியெல்லா மென்னுக்குள்ளே
விண்டேனே யெட்டிரண்டு மறிந்துகொண்டேன்
வேதாந்த வெட்டவெளி யதனைக்கண்டேன்
சண்டமா ருதம்போல வாசிமார்க்கந்
தயங்காமல் நாதவிந்து கண்டேன்பாரே. (168)

பாரேதான் பன்னிரெண்டு வருடமையா
பாங்கான கற்குகைக் குள்ளிருந்தேன்
நேரேதான் மறுபடியு மெழுந்துவந்தேன்
நிலையான அகஸ்தீசர் தன்னைக்கண்டேன்
சேரவே எந்தனுக்கு உபதேசங்கள்
செப்பினா ரவாருளைப் பெற்றேனப்பா
ஊரேதான் திரிந்தலைந்து வருகும்போது
உண்மைப்பொரு ளறிந்தஷண் முகத்தைத்தானே

முகமான அறுமுகவர் தன்னைக்கண்டேன்
முடிவான பொருளெல்லாங் காண்பித்தார்பார்
தகமையுள்ள நந்தீசர் தன்னைக்கண்டேன்
தன்மையுட னெந்தனுக்கு உபதேசித்தார்
ஜகமுழுதுஞ் சுற்றியே சித்தர்பாதம்
சங்கையற வேண்டுமெனத் தெரிசித்தேன்யான்
அகமகிழ்ந்து அருபியென்ற ஜோதிபாதம்
அடைந்தேனே கொலுமேடை யதனில்தானே ()

தானான கண்மணியே தயவுள்ளானே
தரணிதனில் பொய்க்குருக்கள் வருவார்கோடி
கோனான குருவென்று கூறிக்கொண்டு
கோடிபொரு ளறிந்தவன்போல் குணங்கெடுக்க
தேனான மனோன்மணியாள் பதிகண்டோன்போல்
தெவிட்டாத தெள்ளமுத முண்டோன்போல
தானான மமதையை யொழித்தோன்போலத்
தரணிதனி லுனைமயக்க வருவார்காணே. (171)

காணவே பொருள்தனை யுபதேசிக்கக்
கருவான குருவொன்று காட்டுவேன்பார்
தோணவே யுந்தனுட உளவுமார்க்கம்
தோய்ந்தபொருள் யாவற்றுஞ் சுருட்டிக்கொண்டு
வேணபடி பொய்பேசி வெருட்டுவான்பார்
விருதாவா யவர்களிட மேமாறுதே
வீணான வீணருடன் சேர்ந்தாயானால்
விழலுக்குத் தானிறைத்த நீராவாயே. (172)

நீரான யெந்தனுட நூலைப்போலே
நேர்மையுடன் யென்னூலுஞ் சொல்லவில்லை
போரான பதினெட்டுச் சித்தரெல்லாம்
பிரபலமாய்ப் பரிபாஷை யாகச்சொன்னார்
தேராத பேரெல்லா மெந்தநூலில்
தெளிவாகக் கண்டுகொள்வார் மார்க்கமெல்லாம்
ஓராறு யீராறு வரைதான்காண்பார்
ஓகோகோ யெந்தனுட நூலைக்கொள்ளே. (173)

வாசி

கொள்ளவே வாசியது மார்க்கஞ்சொல்வேன்
குணமுள்ள குழந்தாய் நீ கேளுகேளு
விள்ளவே யுந்தனுக்காய்ச் சொல்வேனப்பா
விண்மணியே கண்மணியே சொல்லக்கேளு
மெள்ளவே சந்திரனர் கலையில்வாங்கி
மெதுவாகச் சூரியனர் கலையிற்றுக்கு
கள்ளமிலா மனதையடா நோக்கிப்பாரு
கருவான கருவிள்மே கலந்துசேரே (174)

சேரென்று சொன்னதொரு அய்யா அய்யர்
ஜெயமான மனநாட்ட மெங்கேயையா
வாரென்று கேட்டதொரு எந்தனுக்கு
வகைபெறவே காட்டுமையா வலமாய்வத்தேன்
கூறென்று கேட்டாயென் குழந்தாய்கேளு
கூறுகிறேன் பார்வையென்ற மனக்கண்ணாகும்
தேருகின்ற யென்சீடா செப்பக்கேளு
சிறந்தவுச்சி மேல்நோக்கிப் பார்த்திடாயே. (175)

பார்க்கையிலே ஜோதிமின்ன லங்கேகாணும்
பாங்கான செங்கலாய் நின்றபீடம்
தாக்கையிலே யரியரனு மானுமங்கே
சார்பாக நின்றதொரு தேவரங்கே
நோக்கையிலே யண்டமங்கே பாருமங்கே
நொடிதொடிக்கு மாத்தாளி யிலேதானங்கே
பார்க்கையிலே பகாரிய கருவியங்கே
பாலகனே யென்சொல்வே ளுட்டந்தானே. (176)

ஆட்டமா மாட்டமதை யறிந்தோர்ஞானி
அரகரா ஆத்தாளின் மகிமைமெத்த
பூட்டான பூட்டெல்லா மிதிலேதோயும்
புண்ணியனே கண்டறிந்தோன் நாதனையா
நாட்டமுள்ள சதாசிவத்தைக் காண்போருக்கு
நாயகனே பிறப்பிறப்பு மற்றுப்போச்சு
தாட்டிகமாய்க் கோடான கோடியுண்டு
தயாபரியைப் பூஜித்து யிருக்கலாமே. (177)

யாகோபு ஊமையை வினவல்.

இருக்கலா மென்றுசொன்ன குருவேயையா
எளிலாக யின்னமொரு விண்ணப்பந்தான்
தருக்கமாய்க் கேட்கிறே னென்று சொல்லித்
தயாபரனே யெண்ணு மூளவேசொல்வீர்
செருக்கான ஊமையென்று லென்னையையா
ஜெயம்பெறவே யெந்தனுக்குச் சொல்வீர்நாதா
கருக்கான யெழுத்ததனைக் காட்டியேதான்
கலங்காம லென்னை நீ தேற்றிடீரே. (178)

கலங்கியே கேட்டாக்கால் சித்தரெல்லாம்
கருவான ஊமையதைச் சொல்லமாட்டார்
துலங்குமந்த பதினெட்டுச் சித்தரையா
தொல்புவியிற் சொல்லாமல் மறைத்துவைத்தார்
இலங்குகின்ற யாகோபு சொன்னவாக்கு
எளிலான ஊமையதை சொல்வேன்கண்ணே
நலங்கிடைக்கும் ஊமையது மகாரந்தான்டா
நலமில்லா யீனருக்கு உரைக்காதென்னே. (179)

எட்டிரண்டை வினவல்

உரைத்ததொரு என்குருவே அய்யா அய்யா
உண்மையுள்ள எட்டிரண்டு மென்றுலென்ன
கரைத்தபுளி போலவல்லோ சொல்வேன்சேயே
கருவான அகாரமது எட்டதாகும்
நிரைத்தபொருளானதொரு உகாரந்தாண்டா
நிலையான லக்கத்தில் ரெண்டதாகும்
வரைந்திட்டே னுந்தனுக்காய் மைந்தானுனும்
வகையறியா மடையருக்குக் காட்டிடாயே. (180)

கணேஷர் பூஜை

காட்டாதே யின்னமொரு சித்துசொல்வேன்
கண்மணியே கணேஷருட பூஜைமார்க்கம்
நாட்டமுடன் ஓம் அய்யும் கிலியுமென்று
நலமான சவ்வும்கண பதியேவாவா
பூட்டடா லட்சமுரு தன்னைப்போடு
பொருமையுள்ள கணேஷரவர் சித்தியாவார்
தாட்கமலந் தன்னை நீ போற்றியல்லோ
தயாபரனை வணங்கிநன்றாய் வாத்தைக்கேள். ()

கேட்கையிலே மூலத்தி லெழுந்தஜோதி
கெதிபெறவே யுந்தனுக்கு அருள்செய்வார்பார்
நாட்டையிலே அவர்பதத்தை மறக்கவேண்டாம்
நாடுதனி லாடுகின்ற சித்தெட்டெட்டு
தாட்டிகமா யிவரருளா லாடலாகும்
தன்மையுள்ள ஷண்முகத்தின் மூத்தோனாலே
தாட்சிக்த மூன்வருக்கும் பிள்ளையையா
தப்பாது அவர்பெருமை மெத்தவுண்டே. (182)

உண்டான கணேஷருட பூஜைமார்க்கம்
ஓகோகோ நாதாக்கள் மறைத்துச்சொன்னார்
கண்டேனே கண்டபடி சொன்னேன்மைந்தா
கருவாகக் கண்டல்லோ சொக்கிப்பாரு
தண்டான யந்திரத்தின் வகைதான்சொல்வேன்
தளராதே யறுகோணந் தன்னைப்போடு
செண்டான வைதோறுஞ் சூலம்போடு
செயலாக உச்சியிலே சகாரம்போடே. (183)

போடேநீ மறுவரையில் ரகாரம்போடு
பொங்கமுட ணதன்பிறகு அகாரம்போடு
நாடேநீ சொல்லுகிறே னண்பனென்று
நாதாந்தப் பேரொளியின் யந்திரத்தைத்
தேடாம லதன்பிறகே ணகாரம்போடு
தெளிவாக வதன்பிறகே பகாரம்போடு
சாடுகிறே னதன்பிறகு வகாரந்தான்டா
சாங்கமுட னாறெழுத்தின் வகைதானச்சே. (184)

வகையான அறுகோண மத்திபிள்ளாய்
வண்மையுடன் பிரணவமாந் தன்னைப்போடு
தொகையான அம்இயஉம் மெனறுமாட்டு
தொல்லையற வசிவசி யென்றேபோடு
தகைமைபெற கங்கண பதியேயென்றும்
தளராமல் நயயென்று தன்னைப்போடு
சரமூழுது மூன்பேரே யோங்குமப்பா
தப்பாது யந்திரத்தின் மகிமைதானே. (185)

தானென மந்திரமும் யந்திரந்தான்
தப்பாமற் கோர்வையதாய்ச் சொன்னேனையா
தேனென தெள்ளமுதே தெளிவாய்ச்சொன்னேன்
ஜெபிப்பாயே நான்சொன்ன மார்க்கமாக
காணென காலகத்துச் சித்தரெல்லாம்
கண்மணியே கோர்வையதாய்ச் சொல்லவில்லை
நானேதான் விவரிக்க லானேனென்றால்
நலமான மகாநை வேத்தியந்தானே. (186)

சிவசுப்பிரமணியர் பூஜை.

நலமான யின்னமொரு சுத்தபூசை
நாயகனே யுந்தனுக்காய்ச் சொல்வேன்பாரு
தலமான ஏழுவரை நெடுக்கேபோடு
தப்பாம லேழுவரை குறுக்கேபோடு
நிலமான வரைமுப்பத் தாறுமாச்சு
நிலையான வரைக்குள்ளே எழுத்தைக்கேளு
சலமான சரவண பவனேயென்று
சார்பான வெழுத்ததனைத் தாக்கிப்போடே. (187)

போட்டபின்பு இரண்டாவ தரையையப்பா
பொங்கமுடன் பிடித்தல்லோ மாறிப்போடு
நாட்டமுட னரைதோறு மெழுத்தைமாறு
நலங்கிடைக்கு மாறெழுத்தின் பெருமையாலே
தாட்கமலந் தனைத்தேட வேண்டுமென்றால்
தளராதே சரவண பவஓம்சவ்வும்
தாட்டிகமா யிவ்வெழுத்தை ஜெபிப்பாயானால்
தன்மையுள்ள ஷண்முகத்தைத் தரிசிப்பாயே. (188)

வயிரவர் பூஜை

தரிசிப்பாய் விசுத்தியிலே கலந்துபாரு
தற்பரமாய் மூலத்தில் கணேஷரைப்பார்
வரிசையுடன் வைரவனார் பூஜைசேளு
வளமான வைங்கோணந் தன்னைப்போடு
கரிசையுடன் வரைதோறுஞ் சூலம்போடு
கண்மணியே நமசிவாய வென்றுமாட்டு
பரிசையாய் மத்தியிலே பிரணவந்தான்
பாலகனே பிரணவமா மத்திகேளே. (189)

பிரணவமா மத்தியிற் சிவ்வென்றுபோடு
பிணங்காமல் ஜெபிக்கின்ற மந்திரந்தான்
காரணமாம் ஓம்நரீம் ஸ்ரீம்கிரீம்வா
கருவான சுவர்ணபயி ரவனேவாவா
தாரணமா மிந்தவகை யுருதான்லட்சம்
தயங்காமற் ஜெபித்திடவே சித்தியாகும்
திரணமா யிவர்பெருமை சொல்லப்போமோ
ஜெயமான வயிரவரின் றன்மைதானே. (190)

வாலை பூஜை.

வயிரவரைப் பூஜிக்கச் சுவர்ணந்தன்னை
வளமைபெறத் தருவாரே யுந்தனுக்குக்
கைதவமாய்ச் சொல்லிவிட்டே னிந்தசித்தைக்
கண்மணியே ஜெபித்துநீ பாருபாரு
செய்தவமா யின்னுமொரு சித்துக்கேளு
செயலான வாலைமனோன் மணியாள்பூஜை
வைரமதாய்ச் செய்கின்ற கோர்வையப்பா
வளமான ஓம்கிலியுஞ் சவ்வென்றுமே. (191)

ஆமேதான் ரீங்லீ வாவாவென்று
அடைவாக ஆக்ஞையிலே ஜெபித்துப்போடு
நாமேதான் சொன்னபடி யம்பாளாட்டம்
நலமாகக் கண்கொண்டு பார்க்கமாட்டா
போமேதான் செய்வினைகள் பறந்துபோச்சு
பொல்லாத நமனரைச் ஜெயிக்கலாகும்
தாமேதான் நினைத்தபடி யெல்லாமாடும்
தகைமையுள்ள ஆத்தாளின் மகிமைதானே. (192)

மகிமையா மாத்தாளின் கிருபையாலே
மண்டலத்தில் வாதசித்தி யோகசித்தி
சகியாத ஞானசித்தி மாந்திரீகம்
தப்பாது யெட்டெட்டுஞ் சித்தியாகும்
நிகிதமாய் நாட்டிவைத்த நூல்தானுகும்
நீணிலத்தி லினருக்குக் காட்டிடாதே
கிதமாய் மாண்பரையா கோடாகோடி
லக்கான பரிசனங்கள் வகாரப்போக்கே. (193)

வாதிகள் வரலாறு.

போக்கான போக்கல்லோ குறுக்குப்போக்கு
புண்ணியனே சுட்டலைந்தோர் கோடாகோடி
தாக்கியே நூல்பார்த்துப் பேசிக்கொண்டு
தன்மைபெற மூப்பூவை மூடிப்போமென்பார்
சாக்காகச் சித்தாது நூலைச்செய்வார்
தப்பாத நூலதனி லுளவைக்காணர்
நோக்கியே சொல்லுகிறே னுந்தனுக்கு
நுணுக்கமுள்ள மூப்பூவின் வகைகாணரே. (194)

காணரே மூப்புவப்பு தன்னைக்காணர்
கருவறியா மாண்பரையா மட்டிமாண்பர்
தோணரே குறுக்குவழி தனையுங்காணர்
தொல்புவியிற் துருசுக்குரு மூடிப்போமென்பார்
நாணவே ரசக்கட்டுச் செய்வோமென்பார்
நலமான ரசமென்ற பொருளைக்காணர்
ஊணரே துருசுவந்த வகையைக்காணர்
உலகினிலே கெட்டலைந்து போனமாடே. (195)

போனரே மாடிழந்து கண்ணிழந்து
போரான கரியதனைச் சுட்டேகெட்டார்
தேனை உந்தனுக்காய் இயம்புவேன்பார்
தெளிவான குறுக்குவழி வகாரப்போக்கு
கோனை என்குருவே ஐயாஐயா
கொற்றவனே விண்ணப்ப மையாவொன்று
மோனை மூப்புஅப்பு வென்றுலென்ன
மொழிந்ததொரு துருசினது வகைதான்கூறே. ()

வகையான வகையதனைக் கேட்டபிள்ளாய்
வளமைபெற உந்தனுக்காய்ச் சொன்னேன்பாரு
தொகையான நாதவிந்து மூப்புஅப்பு
சொருபமாய் விளங்கிநின்ற துருசேஜோதி
தகையாகச் சொல்லுகிறேன் மைந்தாகேளு
நலம்பெறவே உந்தனுக்கு விளங்கவேதான்
தகைமைபெற வாதத்தின் குறுக்குப்போக்கு
தன்மையுள்ள மைந்தாபின் சொல்லக்கேளே. (197)

வங்கச் சுண்ணம்.

கேளடா வங்கத்தின் சுண்ணமார்க்கம்
கெலியான குமரியதைக் கொண்டுவந்து
நாளடா போக்காமல் தாரந்தானும்
நலமாகப் பலமொன்று தூக்கிக்கொள்ளு
வாளடா குமரியதைப் பிளந்துரெண்டாய்
வளமைபெறக் காரத்தின் பொடித்தூள் தூவி
கோளடா யில்லாமல் மூடி நன்றாய்க்
கொற்றவனே குழித்தைல மிறக்கிக்கொள்ளே. (198)

கொள்ளடா அவ்வெடைக்குத் தில்லைப்பால்தான்
குணமாக ரேசித்துக் கருவங்கந்தான்
வள்ளடா பலமொன்று தூக்கிக்கொண்டு
வளமாக முன்சொன்ன தயிலத்தாலே
நள்ளடா சுருக்கதுவே நாலுசாமம்
நாயகனே தான்கொடுக்கச் சுண்ணமாகும்
கள்ளடா யில்லையிது செப்பிற்றானும்
கருவாகப் பத்துக்கு மூன்றாயீயே (199)

ரசிதப் போக்கு.

ஈயவே வயததுதா னென்பதாகும்
இயலான ரசிதத்தின் போக்குச்சொல்வேன்
நேயமாய்ச் சங்கென்ற பாஷாணந்தான்
நேர்மையாய்ப் பலமொன்று தூக்கிக்கொண்டு
காயமாம் ரசமதுவே யொன்பதாகும்
கருவான வெடியுப்பு ஒன்பதாகும்
சாயமாம் இந்துப்புப் பலங்காலாகும்
சாங்கமுடன் சிற்றண்டக் கருவாலாட்டே. (200)

கருவான வெண்கருவா லாட்டிமைந்தா
கருவிளமே குயவனிடஞ் சென்று நீதான்
திருவான பணவெடைதான் மூன்றுவட்டம்
தியங்காமற் செய்துவந்து தீராகேளு
குருவான கழஞ்சுஎடை ரசிதமப்பா
கொற்றவனே வாய்சரியாய்த் தகடடித்து
மருவான சரக்கெல்லா மொந்தையிற்றான்
மன்னவனே தான்போட்டுத் தகடுவையே. (201)

வைத்தபின்பு மேல்மூடிச் சீலைசெய்து
வளமான எட்டெருவிற் புடந்தான்போடு
இத்தகைய முறைபாடு செய்தபின்பு
இயலாக ஐந்துக்கு வொன்றுதாக்கு
கத்தனைப்போல் ரசிதமது வித்தையப்பா
கண்மணியே தாம்பிரந்தான் வெள்ளையாகும்
வைத்ததொரு பாகமெல்லாஞ் சொல்வேனையா
வளமான கெவுரியுட வேதைதானே. (202)

பஞ்சபாணச் செந்தூரம்.

தானான பஞ்சபா ஷாணப் போக்குத்
தகைமையுடன் சொல்லுகிறேன் உந்தனுக்காய்
தேனான தெள்ளமுதே காரீயந்தான்
தெரிவிப்பேன் கெவுரிவெண் காரத்தோடு
வானான ஜாதிலிங்கம் கெந்தியோடு
வகையான மனோசிலையாந் தன்னோடொக்க
கானான ரசத்தோடு யிவைகளெல்லாம்
கருவாக வகைக்குஒரு பலந்தான் தூக்கே. (203)

பல்மான செருப்படைச் சாறோடொக்கப்
பாலகனே பழச்சாறு சமனாய்ச்சேர்த்து
நலமாகச் சரக்கெல்லாஞ் சேர்த்தரைத்து
நாயகனே அயடப்பி யதனிற்போட்டு
தலமாகச் சீலைமண் ணேழுஞ்செய்து
தப்பாது பத்தெருவிற் புடந்தான்போடு
நிலமான செந்தூரம் பவளம்போலாம்
நிஷ்களங்க மானதொரு வேதைதானே. (204)

வேதையா மதிமேலே முப்பதுக்கு
வேணபடி குருவொன்று தன்னையீய
பாதையாம் வயதறிவு மெட்டதாகும்
பாலகனே நாலுக்கு ஒன்றுதங்கம்
சாதையாய் நீசேர்க்க யெட்டதாகும்
தப்பாது குருசொன்ன வாக்குமைந்தா
வேதையா மின்னுமொரு போக்குக்கேளு
வெளியான கருவங்க வெட்டைதானே. (205)

கருவங்க வெட்டை.

வெட்டையாம் காரீயந் தனைக்கொணர்ந்து
வகையாக யிலைகாட்டுத் தமட்டனையா
சட்டமுடன் தானரைத்து வங்கத்திற்குச்
சாங்கமுடன் கீழ்மேலும் பொதிந்துநன்றாய்
திட்டமாய் மேற்சொன்ன சாறுதன்னைத்
திறமாகக் குடுவையிலே வார்த்துமேதான்
நட்டமது வாராது சீலைசெய்து
நாயகனே பத்தெருவிற் புடந்தான்போடே. (206)

பேடேதான் புடமைந்து போட்டாயானல்
பொங்கமுடன் கருவங்கம் வெட்டையாகும்
நீடேதான் மதிமூன்று செம்புநான்கு
நிஷ்களங்க மானதொரு குருவொன்றீய
வாடேதான் வகையாகச் செய்தபின்பு
வளமாக ஐந்திற்கு ஒன்றுதங்கம்
சாடேதான் வயததுவு மெட்டேயாச்சு
தப்பாது சமுசாரிக் கானதாமே. (207)

வேறு கருவங்கவெட்டை.

தாமேதா னின்னுமொரு வெட்டைகேளு
தளராதே கருவங்கம் வெட்டையாகும்
நாமேதான் சொன்ன நிலா வரைதானும்
நலமாகத் தானரைத்துக் கவசம்பூண்டு
ஈமேதான் பத்தெருவிற் புடந்தானையா
ஈரைந்து செப்புக்குக் குருவொன்றீய
ஆமேதான் சொன்னபடி சேர்த்துப்பின்னல்
ஆறுக்குத் தங்கந்தா னென்றுஈயே. (208)

ஈயவே வயததுவு மேழுமாகும்
ஈடான கோடிவித்தை யென்னசொல்வேன்
நேயமுட னிந்நூலைக் கைவிடாதே
நெருங்காதே யீனருக்குக் காட்டிடாதே
காயமாம் யான்சொல்லும் வேதையெல்லாம்
கண்மணியே தப்பாது கருக்கிப்பாரு
சாயமாம் உப்புச்செந் தூரந்தன்னைச்
சார்பாகச் சொல்லுகிறே னுந்தனுக்கே. (209)

உப்புச் செந்தூரம்.

சொல்லுகிறேன் செயநீரின் உப்புமைந்தா
சோங்காமற் கொண்டுவந்து கொழுந்துசீக்காய்
வெல்லுவாய் சாறதனு லாட்டிப்பிள்ளாய்
வெறுக்காதே யப்புஉப்பு ஒன்றேயாகும்
நல்லவே வில்லைதட்டிக் காயவைத்து
நலமாக ஓட்டிலிட்டுச் சீலைசெய்து
கல்லுவாய் ஏழெருவிற் புடந்தானையா
கருவாக வைம்பது புடந்தான்போடே. (210)

புடமான ஆறெருவிற் புடந்தானைந்து
புகழான செந்தூரம் பவளம்போலே
திடமான மதிமேலே பத்துக்கொன்று
திறமாகத் தானீய வயதுயெட்டு
தடமான தாம்பரத்தின் மீதேயாகுந்
தயங்காதே தங்கம்ஒன்று கூடச்சேரு
மடமான மடமதனைக் கட்டிக்கொண்டு
மயங்காதே பாத்துக்கு அன்னம்போடே. (211)

தாளக பற்பம்.

பாமான யின்னுமொரு போக்குச் சொல்வேன்
பாங்கான தாளகத்தின் வகைதான்மைந்தா
வரமாகப் பலமொன்று தாளகந்தான்
வகையான ரசமிடைதான் ரூபாவாகும்
தாமான வெண்கார மிடையேரூபா
தளராதே நற்சங்கச் சாறுமைந்தா
திறமான நற்சங்கு சாறூடொக்கத்
தியங்காதே வகைக்குவோ ருழக்குத்தானே. (212)

உழக்கான சரக்கெல்லா மொன்றாய்ச்சேர்த்து
உறுதியா யிருபத்து நாலுசாமம்
வழக்கமாய்ச் சாறுவிட் டாட்டிப்பின்பு
வகையாகத் தானுலர்த்தித் தூளதாக்கி
செழக்காகக் குப்பிதனி லடைத்துமைந்தா
செம்மையாய் எழுசீலை தன்னைச்செய்து
முழக்குகிறேன் அடிகனத்த சட்டியுள்ளே
மூன்றுவிரல் மணலதனைப் பரப்பிடாயே. (213)

மணலதன்மேற் குப்பிவைத்துப் பற்பமாக்க
மயங்காதே மூடியபின் கழுத்துமட்டும்
சணப்பொழுதில் மணல்போட்டுச் சட்டிமூடித்
தயங்காதே கணபதியைப் பூஜைசெய்து
கணக்காக அடுப்புமேல் சட்டிவைத்துக்
கண்மணியே சொல்லுகிறேன் கருத்தாய்க்கேளு
தணலான தணலதனை மூட்டுமார்க்கம்
தப்பாது ஒருசாமங் கமலந்தானே. (214)

கமலமா மக்கினியை மூட்டிப்பின்பு
கருத்தாகப் பதிஞெரு சாமமைந்தா
அமல்போலே காடாக்கினி தன்னைப்போலே
அடைவாகத் தானெரிக்க வேண்டுமையா
தமரவே வேண்டுமையா இரண்டுநாள் தான்
தப்பாது பற்பத்தின் பெருமைசொல்வேன்
நிமலனுர் நீர்போலே பூக்குமப்பா
நிஷ்களங்க மானதொரு பற்பந்தானே. (215)

தானுன மதிமேலே பத்துக்கொன்று
சார்பாகக் குருவதனை யீய்ந்துபின்னுல்
தேனுன தங்கமது ஒன்றுகூட்டத்
தெவிட்டாத மாத்ததுதா னென்னசொல்வேன்
வானுன வயததுவே யொன்பதாகும்
வருத்துரைத்தே னுந்தனுக்கு யிந்தமார்க்கம்
மானுன கண்மணியே மகிபாகேளு
மானிலத்தில் ஜீவனத்தைச் செய்துகொள்ளே (216)

தாம்பிர வேதை

கொள்ளே நீ சாத்திரத்தை யாராய்ந்தேதான்
குணமான மௌனமாந் தன்னிற்சேரு
தெள்ளமுத மானசிகா மணியேகேளு
தேசத்தில் சித்தரெல்லா மாடுமார்க்கம்
கள்ளமிலா துந்தனுக்குச் சொல்வேனப்பா
கனமான தாம்பிரமாம் வேதையாகும்
மெள்ளவே ரசமதனைச் சேர்தான்கொண்டு
மேன்மையுள்ள கருங்கையான் தன்னைவாங்கே. ()

வாங்கியே கருந்துளசி தன்னேடொக்க
வகையான கருப்பு ஊமத்தையப்பா
தாங்கவே மலைமுடுகு கண்டங்கத்திரி
தப்பாது ஊமையென்ற பூண்டதாகும்
நாங்களெனு மமதையதை யடக்குமூலி
நலமான வில்வித்தோ டக்கிப்பூண்டு
ஓங்கிவளர் சோதியென்ற மூலியாகும்
ஒகோகோ நாதாக்கள் சொன்னவாறே. (218)

வாருகச் சொல்லுகிறே னப்பாகேளு
வளமான மலைதாங்கி வேரோடொக்கத்
தேருன நாய்வணங்கிக் காஞ்சோரிதான்
தெளிவான உத்தாமணி முருங்கையோடு
மாருகச் சொல்லவில்லை திகைப்பூடோடு
மன்னவனே சிறுசெருப் படைபூவல்லி
பேருன காட்டாமணி சிகப்பதாகும்
பெருமையுள்ள சிறுமூலி விஷ்ணுந்தானே. (219)

சிவமான பன்றியது தோண்டியப்பா
சிறப்பில்லா பீநாறி மூலியோடு
தவமான மாணிக்கப் பூண்டதாகும்
தளராதே யிவையெல்லா மரைத்துநன்ருய்
கவனமாய் ரசமதனை யுட்பொதிந்து
கண்மணியே கெஜபுடந்தான் சதுரமாகும்
உவமையில்லா ரசங்கட்டிச் செந்தூரிக்கும்
உண்மையுள்ள செந்தூரப் போக்குக்கேளே. (220)

கேளப்பா செந்தூரந் தனையெடுத்துக்
கெடியான நவலோகந் தன்னிலேதான்
வாளப்பா சேருக்கு ஒருமாவீதம்
வகையாகத் தான்கொடுக்க மாற்றுக்கேளு
தாளப்பா வாயிசத் தெட்டுமாத்து
தயங்காதே யேமத்தின் சொரூபத்தாலே
நாளப்பா போக்காது நிலையில்நின்று
நாயகனே சித்துவிளை யாடுவாயே. (221)

ஆடவே யாரறிந்து செய்யப்போருர்
அப்பனே சிவயோகி செய்வான்பாரு
நீடவே யோகிக்குக் கிட்டுமல்லால்
நீனிலத்தில் சமுசாரிக் கெட்டாதையா
வாடவே திரிகின்ற பேயருக்கு
வகையான யிவ்வேதை கிட்டாதப்பா
ஆடவே முன்சொன்ன வேதையெல்லாம்
அப்பனே சமுசாரிக் கெய்துப்பாரே. (222)

பாரே நீ வேதையிலே தங்கஞ்சேர்த்தால்
பாலகனே யவ்வேதை கிட்டுமையா
சீரேதான் தாயில்லாப் பிள்ளையுண்டோ
ஜெகத்திலே செப்பார்க ளிம்மறைப்பை
தேரேதான் வயதுபத் தரைக்குமேலே
தெளியாது சமுசாரி யானபேர்க்கு
சாரே நீ சொல்லுகிறேன் கிடிகைவேதை
சாங்கமுடன் தாய்சேரு யேமந்தானே. (223)

உப்புமணிச் செந்தூரம்.

ஏமமாம் உப்புமணிச் செந்தூரங்கேள்
எளிலான ஆவாரம் பூவரைத்து
தாமதமில் லாமலே ரெண்டுபாத்திரம்
தயவாகத் தான்செய்து கரியுப்புவைத்து
நேமமாய்த் தான்மூடிச் சீலைசெய்து
நேர்மையுடன் புடமதுவே நூற்றியெட்டு
வாமமாய் ஐந்தெருவிற் புடந்தான்போடு
அப்பனே மறுபுடந்தான் சொல்லக்கேளே. (224)

சொல்லுவேன் ஆறெருவிற் புடந்தான்போடு
சோராமல் புடத்துக்கு யெருவொன்றேத்து
வெல்லுவா யிப்படியே நூற்றியெட்டு
விளம்பியதோ ரெருவரையி லேத்திப்போடு
கல்லவே செந்தூரம் பவளம்போலாம்
கருவான தாம்பரத்தின் மீதேதாக்கு
நல்லவே பத்துக்குக் குருவொன்றீய்ந்து
நலமான தங்கமது ஒன்றுசேரே. (325)

சேர்க்கையிலே வயதுதா னென்னசொல்வேன்
சேர்வையடா யிருநான்கு மாற்றேயாச்சு
பார்க்கையிலே இவ்வேதை பசுமைமெத்த
பாலகனே வறுமையெனும் பிணியேபோச்சு
நார்க்கமலத் தாயாரி னருளினாலே
நாயகனே யுந்தனுக்குக் கூறலானேன்
மார்க்கமின்னுஞ் சொல்லுகின்றேன் மைந்தாகேளு
மானிலத்தோர் பிழைக்கும்வகை இதுதான்காணே.

லிங்கச் செந்தூரம்.

காணவே லிங்கச்செந் தூரங்கேளு
கருவான கண்மணியே கழறுவேன்யான்
தோணவே ஆதாளை வன்னியோடு
தொல்லையறச் சார்பிழிந்து படிஒன்றேகால்
வேணபடி அயக்குண்டா தன்னில்வார்த்து
வேடிக்கை கிருஷ்ணவின் அபிரேக்கையா
காணவே அதின்மீதில் வைத்துப்பின்பு
கருவான அதின்மத்தி லிங்கம்வையே. (227)

வையப்பா அடுப்பேற்றித் தீயைமூட்டி
வகையாக மாதளையாம் விறகினாலே
செய்யப்பா அக்கினிதான் கமலமாகும்
செயலாக மூன்றுநாள் யெரித்தபின்பு
பொய்யய்யா இல்லையடா சொன்னசாற்றால்
பொங்கமுடன் சுருக்கதுதா னொருநாளாகும்
மெய்யப்பா பேய்க்குமட்டி பழத்துள்வைத்து
மேன்மைபெற வாய்மூடிச் சொல்லக்கேளே. (228)

கேளேநீ கரியதுதான் பத்துசேரு
கெடியான அணல்மூட்டி லிங்கம்வைப்பாய்
பாளேதான் விளுடியது பத்தேயாகும்
பாங்குபெறத் தானெடுக்கச் செந்தூரந்தான்
காணேநீ பவளம்போல் சிவந்துகாணும்
கருவான தகையெடுத்து யதியின்மேலே
வானேநீ பத்துக்கு ஒன்றுதாக்க
வயததுவும் பத்தாகும் வழிகாட்டாதே. (229)

குஷ்டத்திற்கு அவுஷதம்.

காட்டாதே வினைப்போக்கு மூலியப்பா
கழறுவேன் கையானின் மூலியோடு
நீட்டுவேன் கருங்கையான் மூலியாகும்
நீடான சொல்லியடா மலைவேம்போடு
ஊட்டுவேன் சிவனாரின் வேம்போடொக்க
உகந்துகேள் நிலவேம்பு வெடிக்குஞ்சூரி
வாட்டமின்றி இவையெல்லா மொன்றாய்ச்சேர்த்து
வாகாக யிருப்புலக்கை யதனாற்சாடே. (230)

சாடுவாய் ரசமதுவே நாழிவாங்கு
சார்பாக எண்ணெய்தான் நாழிமூன்று
கூடுவாய் ரசமதுதான் சுண்டக்காய்ச்சு
குணமுள்ளாய் பணவிடைதான் மண்டலங்கொள்
ஓடுமே குஷ்டமுதல் நோய்களெல்லாம்
ஓகோகோ நாதாக்கள் மறைத்துச்சொன்னார்
சாடினேன் உந்தனுக்காய்த் தயங்காதே நீ
தள்ளடா புளிபுகையும் உப்புந்தானே. (231)

உப்பான இவையெல்லாம் தள்ளினோர்க்கு
உத்தமனே தேகமது காந்திமின்னும்
தப்பில்லை நாற்பதுநாள் பாலோடன்னம்
சட்டமுட னுண்டாக்கால் குஷ்டமேது
ஒப்பில்லை எம்மருந்து மிதற்குவையா
உத்தமனே யென்னசொல்வேன் மகிமைமெத்த
செப்பினேன் பத்தியந்தான் நன்றாய்க்காரு
சேயெனை நீ யண்டியதாற் கூறினேனே. (232)

தங்க பற்பம்.

கூறினேன் வார்மூலி அரைத்துநன்றாய்க்
கூசாமல் தங்கமதைத் தகடடித்து
வீறியனே தகட்டுமேற் கவசஞ்செய்து
விளங்கவே மண்சீலை யொன்றேபோதும்
தேறுவாய் புடமதுதான் கெஜமேயப்பா
தெகட்டில்லை தங்கமது வெளுத்து நீறும்
சாறுவாய் பற்பமது வெண்மைமெத்த
தளராதே பற்பமதைப் பதனம்பண்ணே. (233)

பண்ணப்பா இன்னமொரு மார்க்கமையா
பகருகிறேன் புத்தியுடன் பண்பாய்க்கேளு
நண்ணப்பா தேசமெங்குஞ் சுற்றும்போது
நானேதான் கிஷ்கிந்தை நகரம்வந்தேன்
கண்ணப்பா மலையினடி வாரந்தன்னில்
கர்த்தராம் வீரமாமுனியைக் கண்டேன்
நண்ணப்பா கண்டவரை வலமாய்வந்து
நமஸ்கரித்தேன் நவச்சாரஞ் சொன்னார்கேளே. ()

நவச்சாரக் கட்டு

கேளப்பா வொருபலந்தான் சீனிக்காரம்
கெடியான சரக்குபொரி காரமொன்று
ஆளப்பா மதமடக்கி நீரில்நேராய்
அரைத்துபலங் காலதுதான் நவச்சாரத்தில்
நீளப்பா பொதிந்துசித்திர மூலமாட்டு
நிலமையாய்க் கவசமிட்டு சீலையைந்துசெய்து
நாளப்பா கோழிப்புடம் போடக்கட்டும்
நவச்சாரக் கட்டதிலே பலங்கால்வாங்கே. (235)

நவச்சார மெழுகு.

வாங்கியே வெடியுப்பு பலந்தானென்று
வளமான பழுப்பெருக்கஞ் சார்விட்டாட்டி
தாங்கியே ரவியில்சேர்த் துலரக்காட்டி
சட்டியிற் கோழிக்காரம் பரப்பித்தூளாய்
ஓங்கியே யதினடுவே யுபபைவைத்து
உத்தமனே சிறுதீயாய் யெரிக்கமேலும்
தூங்கியே போகாமல் கோழிக்காரம்
சுகமான பொடிபோட மெழுகதாமே. (236)

ஆமப்பா கட்டினதோர் நவச்சாரந்தான்.
அருமையிது கைகண்ட கட்டதாகும்
ஆமப்பா வொருக்காலுங் கசிந்திடாது
அக்கினியில் போட்டுப்பார் உருகியாடும்
ஆமப்பா அநேகவிதங் கட்குமுண்மை
அவனிதனில் சொக்கமொரு பலத்துக்கேதான்
ஆமப்பா மஞ்சாடி மெழுகுபோடு
ஐயிரண்டு வயதுகண்டோம் ஆய்ந்துஆடே. (237)

இரசக்குரு.

ஆடப்பா பதங்கரசம் விராகனுகும்
　　ஆனதொரு கெந்தகமூஞ் சரியாயாட்டி
நீடப்பா மண்டூகங் கொண்டுவாய்க்குள்
　　நிறையாகச் சரக்குதனைப் போட்டுவைத்து
நாடப்பா கயிர்கோர்த்து உலர்த்திநன்ருய்
　　நலமான குழிப்புடத்தில் தைலம்வாங்கி
போடப்பா சுத்திசெய்த தாம்பூரமெட்டு
　　புகழான சொக்கம்ரெண்டு விராகனுச்சே. (238)

ஆச்சப்பா உருக்குமுகந் தனையறிந்து
　　ஆகாகா தைலமதில் துளிதான்குத்து
போச்சப்பா பீடையென்ற தெல்லாமிப்போ
　　பொய்யல்ல மெய்யிதுதான் புகழ்ந்துகேளு
நீச்சப்பா சித்தர்சொன்ன சித்துமெத்த
　　நினைவாகச் செய்பாகங் கைபாகங்கள்.
ஆச்சப்பா விள்ளாதே வயதெட்டாகும்
　　அருமையா மித்தொழில்தா னமூர்தஞ்சாத்தே.(239)

சாத்தரிய பாஷாணக் கட்டியொன்று
　　தான்வாங்கிப் பீங்கானில் முலைப்பாலிட்டு
போத்தரிய பொரிகாரம் விராகனென்று
　　பொடித்திட்டு வெண்கட்டி ரவியில்வைக்க
மாத்தரிய பால்குடிக்கு மிரட்டிநன்ருய்
　　மைந்தனே யுணர்ந்த பின்பு வாங்கிக்கொண்டு
ஆத்தரிய விலாங்குமீன் பிடித்துவந்து
　　அதின்வாயிற் பாஷாணம் போட்டுத்தையே. (240)

தைத்தபின்பு உப்பிடித்து சட்டிதன்னில்
　　சரியாக அரையிட்டு அதின்மேல்மீன்தான்
வைத்துமே உப்பிட்டு உலைதான்மூடி
　　வாய்சந்து சீலைசெய்து அடுப்பிலேற்றி
தைத்துகம லாக்கினியா யிரண்டுசாமம்
　　தானெரித்துப் பின்பு அதை ஆறவாங்கிப்
பத்திரும்புக் கரண்டிதன்னில் பலந்தானிட்டுப்
　　பன்றிநெய்யி லரைப்படிதான் சுருக்குக்காட்டே. ()

காட்டியே வங்கபற்பங் களஞ்சியொன்று
கனமான கட்டினபா ஷாணமொன்று
ஆட்டியே சுண்ணும்பு ஜலத்தைவிட்டு
அள்ளியொரு களஞ்சிவெள் வங்கங்காய்ச்சி
நீட்டியே உருக்குமுகத் திடவும்வாங்கும்
நேர்துருத்தி நாலுநா ழிகைதானூது
வாட்டியே யெடுத்திதற்குச் சரியாய்ச்சூதம்
வளமான மேற்படி நீர் வார்த்தரைத்தே. (242)

அரைத்துவில்லை பிடித்துலர்த்தி வோட்டில்வைத்து
அதின்மேலுஞ் சில்லிட்டிச் சீலைசெய்து
வரைத்துநன்ருய் காடையொரு புடத்தைப்போடு
வாகாக யெடுத்திடவே மெழுகுமாகும்
உரைத்தசெம்பு சுத்திசெய்து நாற்களஞ்சி
உத்தமனே மண்சாடி வுருகும்போது
கரைத்திடுவா யொன்பதுக்கு வயதுமாறும்
காசினியில் ரத்தின நூ லிதுதானுச்சே. (243)

ரத்தினமாம் வீரமுனி சொன்னவாக்கை
நாயகனே யென்சீடா யாக்கோபென்று
சித்தான சித்தெல்லா மறிந்தவாசான்
சிற்பரன் பூதாநந்தர் திறமாய்ச்சொன்னூர்
முத்தான யென்சீடா உந்தனுக்காய்
முறையிட்டே னெந்தனுட னூலிலையா
எத்திசையில் நாதாக்கள் மறைப்பையெல்லாம்
எடுத்துரைத்தேன் கைபாக மிதுதான்பாரே. (244)

பாரே நீ எனதாசான் பூதர்போலப்
பக்குவமாய் ஞானவழி தன்னைச்சொல்லார்
யாருமே யவர்போலச் சொல்லவில்லை
அவனியிலே சித்தரெல்லா மறைப்பாய்ச்சொன்னூர்
தேருமே யவர்மொழியை யின்னஞ்சொல்வேன்
ஜெகத்தினிலே ஞானவழி சிறப்பாய்ச்சொன்னூர்
காருமே யின் னூலைப் பதனம்பண்ணு
கண்மணியேகாட்டாதே கழறுவேனே. (245)

ஞானங் கூறல்.

காட்டார்கள் ஞானமென்ற சூக்குமத்தைக்
கருத்தாகச் சொல்லுகிறேன் கண்ணேகேளு
பூட்டான யென்னுத்தா லிருக்குந்தானம்
புகழுகிறேன் புண்ணியனே கண்ணியாகேள்
நாட்டுகிறேன் பிறப்பிறப்பு மற்றுப்போக
நான்கூறும் வாறதனைக் கவனமாய்ப்பார்
தாட்டிகமாய்ச் சொல்லுகிறேன் தாணிமீது
தன்மையாய் யென்னைப்போ லார்சொல்வாரே. (246)

ஆருமே சொல்லார்க ளவனிமீது
ஆகாகா யென்னசொல்வேன் செப்பக்கேளு
பாருமே மூலமுத லாறுஸ்தானம்
பாங்குபெறச் செங்கனலாய் நின்றபீடம்
தேருமே யாகாயந் தன்னைக்காணு
தெவிட்டாத தாயாரின் பதியைக்காணு
கோருமே விற்புருவ மையமேல்நில்
கோடிபொரு ளீய்ந்தாலுஞ் செப்பிடாதே. (247)

செப்பாதே ரவிமதியைத் தெளிந்துபாரு
சிவாசிவா ஞானமென்ற மனதையூணு
தப்பாமல் காலாலே நிறுத்தியூது
தயங்காதே தற்பிரம சூட்சமேகேள்
ஒப்பமுடன் சந்திரனை யிறுத்திக்குப்பி
ஓகோகோ சூரியனில் மெள்ளவாங்கு
உப்பான அப்பதுவு மொடுங்கிற்றானல்
ஒருபொருளும் அழியாது உண்மைகேளே. (248)

கேளடா சூரியகலை யதனில்தாக்கு
கெடியாக நாற்பதுநாள் பழக்கம்பண்ணி
கோளடா யில்லாது சொன்னேன்சொன்னேன்
குறிப்பாகப் பழக்கமுத லானபின்பு
நாளடா போக்காது விண்ணைப்பாரு
நாயகனே மும்மூர்த்தி தேவரங்கே
பாளடா பரமங்கே காணுங்காணும்
பட்சமுடன் யெனையழைக்குந் தாயாரங்கே. (249)

தாயான பஞ்சகர்த்தா ளாட்டமங்கே
 தளராதே யெழுவகையின் தோற்றமங்கே
சேயான யென்னையா செப்பக்கேளு
 ஜெகமதிலே யாடுகின்ற சிவனுமங்கே
நாயாகத் திரியாதே பிரணவந்தான்
 நவிலுகிறே னைந்தெழுத்தின் பெருமைதன்னை
பேயாகத் திரியாதே பிரணவந்தான்
 பேர்பெற்ற கணேஷரவர் பீஜமாச்சே. (250)

ஆச்சப்பா நகாரமது பிர்மாவாகும்
 அறியார்கள் மகாரந்தான் மாலேயாகும்
பேச்சப்பா சிகாரமது ருத்திரனாகும்
 பேருலகில் வகாரந்தான் மயேஷனாகும்
காச்சப்பா யகாரமது சதாசிவந்தான்
 கழருதே யாறுதல மிதுவேயாகும்
பாச்சப்பா பொய்பேசித் திரியாதேநீ
 பாருலகில் கருவாளி காண்பானாமே. (251)

ஆமேதா னித்தகைய மார்க்கமெல்லாம்
 அடுக்காகக் காண்பித்தேன் கண்டுகொள்ளு
நாமேதான் சொன்னபடி யூமையைத்தான்
 நாயகமே கண்டோர்கள் புண்யவானாம்
தாமேதான் உப்பு அப்பைக் காணவேணுந்
 தாட்டிகமாய்க் காணாத மடையருக்கு
வேமேதான் வாதமது கிடைக்குமோசொல்
 வெட்டவெளி கண்டோர்க்குக் கிட்டுந்தானே. (522)

தானான ஞானிக்குப் பத்தியந்தான்
 தடையறவே சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
தேனான பெண்ணினுட மோகமாகா
 தெரிவிப்பேன் தூக்கமுதற் சோம்பலாகா
பானான வறுசுவையைத் தள்ளவேண்டும்
 பாலகனே தானென்ற மமதைகூடா
மானான யென்னையா மகிழ்வாய்க்கேளு
 மாறாதே மதியைவிட்டு யேகிடாதே. (253)

ஏகாதே மனமதுவே வாசியாகும்
　　எட்டாதே வெட்டவெளி மனதிலேதான்
போகாதே மனமதுவே யோகமாகும்
　　புகலுகிறேன் ஞானமது மனமேயாகும்
சாகாதே சந்தேகங் கொண்டிடாதே
　　சார்பான நற்பதவி மனதினாலே
வாகாகச் சொல்லுகிறேன் மனமேமந்திரம்
　　வகையறியா மாணிடராங் கூட்டந்தானே. (254)

கூட்டியே மனமதுவே நில்லாவிட்டால்
　　குணமில்லை கருத்தையொன்றாய்ச் சேர்க்கவேணும்
தாட்டிகமா யியம்பிவிட்டேன் மறைப்பையெல்லாம்
　　தாரணியி லென்னைப்போ லாருஞ்சொல்லார்
பூட்டான பூட்டெல்லா மிதிலேகாண்பாய்
　　புண்ணியனே சொல்லிவிட்டே னுளவையெல்லாம்
காட்டாதே யொருவருக்குங் கைபாகங்கள்
　　கண்மணியே யம்மையவள் கார்ப்பாள்தானே. (255)

சாபநிவர்த்தி கூறல்.

அம்பரத்தி லாடுகின்ற ஆத்தாள்பாதம்
　　அரகரா அர்ச்சித்து மூலிசாபம்
பம்பரம்போல் போக்குதற்குப் பக்கீர்யானும்
　　பகருவேன் குருவினுட கடாக்ஷத்தாலே
தும்புருவர் சித்தர்களுஞ் செப்பவில்லை
　　தொல்லுலகி லுந்தனுக்காய்ச் செப்புவேன்பார்
வெம்பியதோர் ரோகங்கள் நீங்கிப்போகும்
　　வேதாந்த மந்திரத்தின் மகிமைதானே. (256)

மந்திரத்தைச் சொல்லுகிறேன் மைந்தாகேளு
　　மகிழ்வாக மூலிவகைக் கெல்லாமொன்று
தந்திரமா மாதித்த வாரந்தன்னில்
　　தயாபரனே மூலியிட மேகியேதான்
சுந்தரனே வடமுகமாய் நின்றுகொண்டு
　　துன்பமறக் கணேஷரை நீ தியானஞ்செய்து
வந்திப்பாய்ச் சூரியனில் மெள்ளவேதான்
　　வாசிதனைப் பாய்ச்சிடுவாய் கலைமாறுதே. (257)

மாருமல் சதாசிவத்தின் பதியில்நின்று
மாட்டுவாய் மனக்கண்ணால் நமசிவாயம்
வாருக வைத்துவிடு வரைகடோறும்
வகைபெறவே யுற்றுப்பார் மனங்கொண்டாப்போல்
தோருத மூலியடா சாபம்போச்சு
தோற்றுமடா நீநினைத்த சித்தெல்லாந்தான்
வீருன வீரியனே பஞ்சமூத்திரை
விருதுபெறத் தியானமதை மறந்திடாதே. (258)

மறவாதே சொன்னதெல்லாம் அய்யா அய்யா
மாட்டினார் நவரத்தின மெந்தனுக்காய்
திறந்துமே யுளவதனைக் காட்டும்போது
திறமாகத் தர்க்கமது செய்துகேட்டேன்
இறந்துமே போகாத வழியைக்காண
இயம்பினார் வழியோடே யெந்தனுக்கு
மறப்பான மானதமாம் பூஜைமார்க்கம்
மாட்டுவாய் மனக்கண்ணால் மாளும்நோயே. (259)

மாளுமே வியாதியெல்லாஞ் சொன்னேனைந்தா
மகத்தான சாத்மீகத் தோருக்கப்பா
கேளுமே பொய்சூது வில்லாமைந்தா
கேசரமாய் நிற்கின்ற வெழுத்தையெல்லாம்
வாளுபோல் வீசினார் ஞானமார்க்கம்
வகையறியாச் சண்டாளர்க் கெய்துமோசொல்
தாளுமே பணிந்ததொரு யெந்தன்கண்ணே
சாற்றினேன் நவரத்தின சுருக்கமாமே. (260)

நவரத்தினங் கூறல்.

ஆமேதான் கண்நிறைந்த பூரணத்தால்
அரகரா வியாதியெல்லாம் நீங்கும்நீங்கும்
போமேதான் கண்மணியே மனக்கண்ணாலே
பூரித்து நேசித்தைந் தெழுத்தைநாட்டு
மாமேதான் கண்மணியே கும்பகத்தில்
மாட்டுவாய் மனக்கண்ணால் மாளும்வியாதி
காமேதான் கண்நிறைந்த பூரணத்தைக்
கண்டவுடன் வியாதியெல்லாம் பறக்கும்பாரே. (261)

சீடன் கேட்குதல்.

பாரென்றீர் பூரணத்தை முன்னேமூர்த்தி
பார்க்கும்வகை யெப்படியோ பகரவேண்டும்
போமென்றுஞ் சொன்னீரே புண்ணியமூர்த்தி
போகும்வகை யெப்படியோ புகலவேண்டும்
மாரென்றுஞ் சொன்னீரே மவுனமூர்த்தி
மாற்றும்வகை யெப்படியோ மார்க்கஞ்சொல்வீர்
காரென்றுஞ் சொன்னீரே கம்பமூர்த்தி
காலடிக்கே நமஸ்காரங் காட்டுவீரே. (262)

குரு சொல்லுதல்.

காட்டுவேன் கண்மணியே கலங்காதே நீ
கனகசபை பூரணத்தின் கருத்தாம்பார்வை
மாட்டுவாய் கண்மணியே நாதவிந்து
மகத்தான மூலத்தின் வட்டமிட்டு
நாட்டுவாய் கண்மணியே ஐந்தெழுத்தை
நானிலத்தில் மானிடர்க்கு நோய்கள்வந்தால்
ஓட்டுவாய் நசிமூல தேவாவென்று
ஓட்டையிலே ஓர்மனதா யோடும்பாரே. (263)

பார்வையென்று லப்பாநெற் றிக்கண்பார்வை
பற்றற்றோர் பார்க்கின்ற பார்வையப்பா
சேர்வையென்றால் கண்மணியே ஞானச்சேர்வை
சினமற்றோர் செய்கின்ற சேர்வையப்பா
கோர்வையென்றால் கண்மணியே அண்டக்கோர்வை
கோர்த்தாக்கால் மணிகளெல்லாங் கொட்டுண்டேபோம்
பார்வையிலே கண்மணியே யண்டத்தேற்றிப்
பற்றியே பூரணத்தை மருவியேறே. (264)

ஏறுவாய் மூலத்தில் வட்டமிட்டு
யென்னசொல்வேன் சதுரத்தில் நகாரமிட்டு
தேறுவாய் மகாரத்தில் பிறையொன்றிட்டு
திட்டமாய் முக்கோணத்தில் சிகாரமிட்டு
கூறுவாய் வகாரமிட்டு சட்கோணத்தில்
குறிப்பாக விந்துவிலே யகாரமிட்டு
சேறுவாய் நதிதனிலே தீர்த்தமாடிச்
சிவாசிவா பூரணத்திற் சொக்கித்திரே. (265)

தீர்க்கையிலே விண்ணிலோங் காரமோது
திடமாகும் நாதவிந்து கோசபீஷம்
சேர்க்கையிலே உயிரெழுத்தைச் சேர்த்துஓது
சிறந்தவன்னி வாய்வுநீர் மண்விண்ணோது
பார்க்கையிலே தியானத்தால் நாட்டப்பாரு
பாருலகி விதைவிடவே ருட்டமில்லை
கார்க்கையிலே ஐந்தினையும் வேண்டிப்போற்றிக்
கைகண்ட பூரணத்திற் கலந்துநில்லே. (266)

நில்லுவுட லாவிபொருள் தத்தஞ்செய்து
நின்செயலே என்செயலோ யில்லையென்று
சொல்லுவாய் கண்மணிசாஷ் டாங்கஞ்செய்து
சோதிமணி மாத்திரைதான் சொக்கியீவாய்
வெல்லுவாய் பொய்களவு கொலைகட்காமம்
மேதினியி லுயிர்களைத்தன் னுயிர்போலெண்ணு
வல்லவனு யிருப்பதற்குச் சொல்லிவிட்டேன்
மதியினு லறிந்தந்த ஆதியாரே. (267)

உபதேச அத்தமயம்.

ஆதியிலே அருவுருவாய் நின்றுளாத்தாள்
அரகரா கம்பவொளி யானுளாத்தாள்
வீதியிலே சிவபரமு மானுள்கன்னி
வில்லொளியி லாகாய மானுள்வாலை
ஜோதியிலே காத்தனல்நீ ரானுள்சத்தி
சொரூபநிலை தானறிந்து சொல்லப்போமோ
சேதியிலே யிச்சேதி யாருஞ்சொல்வார்
தீட்சையைநீ காப்பாற்றிச் செய்துகொள்ளே. (268)

காப்பாரே யெங்குமொன்றாய்க் கியானியப்பா
கருத்தையொன்றாய்ச் சேர்ப்பாரேயோகியப்பா
சீப்பாரே கோழியைப்போல் மனதுள்ளப்பா
சின்மயமாய் வெளியில்நின்று சித்தமொன்றாய்
பார்ப்பாரே ஆருட ஞானியப்பா
பளிங்கென்ற வாகாய மப்பால்சென்று
சேர்ப்பாரே ஆவியெங்கு மாகவப்பா
செங்கனலாய் நின்றவண்ட கோலுவில்தானே. ()

தானன கொலுவில்நின்று யேகமாகி
தன்மயமாய் வொளிசொருப மானாப்பா
தானன வொளிகொலுவில் மயமாய்ப்போனார்
தாங்காதே யம்மயமாய் நீயுமாவாய்
தேனன அவர்களுக்குப் பிறப்போயில்லை
தெவிட்டாத தெள்ளமுத முண்டதாலே
கோனன குருபதத்தில் தொண்டுசெய்து
கும்பிட்டு அந்தரங்கக் குறியில் நில்லே. (270)

நில்லப்பா மணியாடுங் கொலுவினுள்ளே
நிர்மலமாய் நின்றவரை யார்தான்காண்பார்
சொல்லப்பா வுந்தனுக்காய்ச் சொன்னமார்க்கம்
சுகமாக நல்லபிள்ளை யறியவேண்டும்
இல்லப்பா உன்வீட்டில் இருக்கும்வஸ்து
இதையறியா மானிடர்க ளலைகிறார்கள்
வெல்லப்பா நாலுபிள்ளை வுண்டோன்சித்தன்
வெளியிட்டு விபரமதாய் விள்வேன்பாரே. (271).

பாரே நீ பிரிதிஅப்பு தேய்வுசேரில்
பார்மகனே நாலுபிள்ளை யுண்டாச்சப்பா
ஊரே நீ திரிந்தலைந்து சிசுக்கள்தேடி
உரலதனில் போட்டிடிக்கா துண்மைசொன்னேன்
தேரே நீ நாலுபிள்ளை யறிந்துகொண்டு
தியங்காதே மர்மத்தைத் தெரியச்சொல்வேன்
ஏரே நீ நாலுபிள்ளை யறிய வேண்டில்
யேகாந்தக் குருவதனை வணங்கிக்கேளே. (272)

சீடன் வினவல்.

கேளென்றீர் யென்குருவே சொல்லவேண்டும்
கிடைத்தபொருள் நீயிருக்க எங்கேபோவேன்
மேலென்றீர் யென்குருவே யானந்தவாழ்வே
மேதினியி லும்மைவிட யாருங்காணேன்
கேளென்று எனக்குமிகச் சொன்னதாலே
கேட்டனையா யென்பேரில் பட்சம்வைத்து
வாளென்றீர் ஞானவா ளெனக்குத்தந்து
வழிகாட்டி உளவதனை வழங்குவீரே. (273)

சீடனுக்குக் கூறல்.

வீருன வீரியனே மெய்யுள்ளோனே
விரித்துநீ கேட்டதினல் யானுஞ்சொல்வேன்
சீருன சின்மயனே யறிவுள்ளோனே
சீக்கிரமாய் வன்னியிலே பிறந்ததொன்று
மாருன மாறலிது வறிந்துகொள்ளு
மயங்காதே தேகசவுந் திரியுமப்பா
பேருன பேர்செய்யும் சமயமய்யா
பிழைக்கவே இதையறிந்து பரிவாயேரே. (274)

ஏருமே நாலுபிள்ளை யொன்றுபட்டு
யேகாந்த வெளிக்குள்ளே பதியைக்கண்டு
சேருமே மனதை நீ யலையொட்டாமல்
செப்பினே னதையறிந்து தெளிந்துநில்லு
ஆருமே யிளப்பங்கே தோணுதப்பா
அரகரா அதிபதியை யறிந்து கொண்டு
பாருமே யன்னையும் நீ பற்றிக்கொண்டு
பரப்பிரமப் பூரணந்தான் பரிந்திகாரே. (275)

காராமல் போனதென்ருல் பொய்யாய்ப்போச்சு
கருத்தினிலே நோக்காட்டால் காணமாட்டாய்
சேராமல் போனதென்ருல் இகலோகத்தில்
ஜெனனமப்பா ஜெனனமப்பா தெரிந்துசேரு
போராமல் வொளிக்குள்ளே புகுந்தமானுர்
பூவுலகில் பிறப்பிறப்பு இல்லையப்பா
பாராமல் வாசியை நீ பாய்ச்சிப்பாரு
பாருலகில் ஜெனனந்தான் பறந்துபோச்சே. (276)

போச்சப்பா ஆவியெங்கு மாகவப்பா
போராட்டஞ் செய்யாதே காயமிங்கே
ஆச்சப்பா கருநெல்லி கற்பத்தாலே
அரகரா வெண்சாரை அடைந்ததாலே
பாச்சப்பா ஞானக்கண் ணுனக்குத்தந்தேன்
பாடிவைத்தேன் வேதாந்த ரகசியத்துள்
வீச்சப்பா ஞானவா ளெடுத்து நீயும்
வீதிசுத்தி பஞ்சமுத்திரை தியானம்பாரே. (277)

சீடன் வினவல்.

பாரென்றுஞ் சொன்னீரே யாகோபையா
 பாருலகிற் றிரிந்தலைந்து உம்மைக்கண்டேன்
சேரென்று நீரெனக்கு வழியுஞ்சொல்லிச்
 செப்பினீர் கருநெல்லிச் சாரையென்று
ஊரென்றுங் காடென்றுந் திரிந்தாலுண்டோ
 உண்மைசொல்லு மலையேறிப் பார்த்தாலுண்டோ
தேரென்று யெனக்குநீர் சொல்வீரய்யா
 தேசிகரே பொன்னடிக்குத் தெண்டந்தானே. (278)

சீடனுக்குக் கூறல்.

தெண்டமென்று கேட்டதொரு பிள்ளாய்கேளு
 திறப்பேன்பார் நீலமணிக் கட்டைநன்றாய்
விண்டந்தான் கருநெல்லி கற்பமிங்கே
 விரித்தேன்பார் வெண்சாரை மனதில்கண்டாய்
அண்டபதி ரண்டமெல்லா மாடிநிற்கும்
 அரகரா கருநெல்லி வெண்சாரைகண்டாய்
உண்டறிந்தார் சித்தரெல்லா மிந்தக்கற்பம்
 உரைத்தேன்பார் உண்மையிது விண்ணில்சேரே. ()

விண்ணிலே யிருவிரலை வைத்துப்பார்பார்
 வேதாந்த மூடியறிந்து வெளிகண்டோர்கள்
வன்னியிலே இருவிரலை வைத்துப்பார்பார்
 வழிரெண்டை வொன்றாக்கி வொளிகண்டோர்கள்
உன்னிலே ஆடுகின்ற பொருள்தானப்பா
 ஓகோகோ உலகமெல்லாம் ஒளிதான்கண்டாய்
தன்னிலையைத் தானறிந்தால் ஞானியாவான்
 சாகரத்தின் நிலையில்நின்று தாக்கிப்பாரே. (280)

தாக்கையிலே கனகசபை கோலங்காணும்
 தளதளென்று மின்னல்மின்னுந் தாரகத்தில்
கார்க்கையிலே ஆயிரத்தெட் டிதழின்நேரே
 கரகமலர் விரலைரெண்டு மேதுவாய்விட்டு
நோக்கையிலே பளிச்சென்று மின்னல்மின்னும்
 நோகாமல் ஜெகஜோதி மணிசொரூபம்
பார்க்கையிலே பஞ்சவர்ணக் கோலங்காணும்
 பரப்பிரம சொரூபத்தில் பளிங்குகாரே. (281)

காரப்பா வன்னிக்குள் வெளியினுட்டம்
　　கருத்தை யொன்ருய்ச் சேர்த்தல்லோ கண்டார்சித்தர்
ஏரப்பா ஓர்மனதாய்ப் பிராணுயஞ்செய்து
　　ஏகவெளி வொளியின்மேல் நாதவோசை
ஆரப்பா யிதையறிந்து நிற்கப்போருர்
　　அரகரா ஞானியல்லோ அறிந்துநிற்பான்
ஏரப்பா பூரணத்தில் மனதையோட்டி
　　யேகவெளி தரிசனத்தை விளம்பினேனே. (282)

விளம்பினேன் தரிசனத்தை வெளிவிடாதே
　　வீணருடன் சேராதே விழலாய்ப்போகும்
தளம்பினே னென்றுரைத்த பிள்ளாய்கேளு
　　தட்டிவிடு யகர அவ்வ லகாரனைப்பற்றி
அளம்பினேன் மேருவினில் வைத்தேனப்பா
　　அரகரா பசியாளி யறிந்துவுண்பான்
களம்பினே னிக்கர்ப்பம் வுண்டுயானும்
　　கயிலையங் கிரிவொளியில் கலந்தேன்முத்தி. (283)

முத்தியாம் வொளிமயத்தில் சேர்ந்தோர்க்கெல்லாம்
　　முனிவர்சித்தர் இவ்வொளியில் கலந்துநின்ருர்
சத்தியாம் வுகாரவிந்து கொலுவில்நின்ருர்
　　சதாநாட்ட மதிலிருந்து சார்வுசொன்னேன்
வெத்தியாம் அகாரசிவம் விந்துசேர்த்து
　　வெளிவிட்டேன் வெளிமயத்தில் சேர்வாயப்பா
வத்தியாம் தீபவொளி சேர்ந்தால்முத்தி
　　வாழ்த்துவா யின்னூலில் முடித்தேன்காணே. (284)

முடித்திட்டீர் பூரணப்பால் யெனக்களித்தீர்
　　முத்திதரும் மார்க்கத்தை முழுதுஞ்சொன்னீர்
எடுத்திட்டீர் எனக்குச்சொல் ரசந்தானையா
　　என்னசொல்வேன் ஒருசேதி யிரங்கிச்சொல்வீர்
விடித்திட்டீர் மறைத்ததெல்லாந் திறந்துசொன்னீர்
　　விபரமாய் உயிர்கொடுக்கும் வுளவைச்சொல்வீர்
தொடுத்திட்டீர் நவரத்தினம் நன்ருய்ச்சொன்னீர்
　　தோஷமில்லை உயிர்கொடுக்கும் நிலைசொல்வீரே. ()

சீடனுக்குக் கூறல்.

வீரேழு லோகமெங்கும் நிறைந்துவொன்ருய்
விநோதமுள்ள சஞ்சீவி மூலைத்துத்தானுய்
பாரேழு லோகமெங்கும் படர்ந்துதப்பா
பதியினிடம் பசுவாகி யிருந்துவுண்யாய்
சேரேழு பலைக்குமேல் நின்ருற்காணும்
செப்பினேன் சஞ்சீவி வேர்தானங்கே
வேரேழு லோகமெங்கும் பாய்ந்துகப்பா
வேதாந்த வெளியில்கலந் துண்ணுவுண்ணே.(286)

உண்ணப்பா வுயிர்நிலைதான் கண்டுகொண்டு
வுற்றுப்பார் தசதீட்சைவொன்ருய்ப்போச்சு
பண்ணப்பா அந்தரங்க பூஜைநன்ருய்ப்
பக்குவத்தோ டேயிருந்து பதியில்சேரு
அண்ணப்பா அங்கிருந்து விளைந்ததல்லால்
அரகரா அறியார்கள் வுலகத்தோர்கள்
கண்ணப்பா மேல்நோக்கி யோட்டிப்பாரு
கண்ணொளியை விண்ணொளியில் கலந்துபோடே .()

போடுவாய் விஸ்வரூபம் பூரணதிரேகம்
பொருந்துவாய் யொளிக்குள்ளே நாதங்கேட்கும்
கூடுவாய் மணிநாதம் கேட்டுக்கொண்டே
குறிவொட்டி நாதவொளி சொக்கிப்பார்த்து
நாடுவாய் பரமங்கே காணுங்காண்பாய்
நாதமாம் வொளியில் சொக்கும் சிவந்தானப்பா
ஓடுவாய் சிவந்தாண்டி அண்டம்சேர்வாய்
ஓகோகோ மெய்ப்பொருள்தான் வொட்டிப்பாரே .()

சீடன் வினவல்.

ஓட்டிமிகப் பாரென்று யாக்கோபையா
ஒருபொருளும் மொளிக்காமல் உண்மைசொன்னீர்
கூட்டிமிக விஸ்வரூபம் நன்ருய்ச்சொன்னீர்
குறியோட்டும் வுளவைமிகக் கூறிப்போட்டீர்
நாட்டிமிக நயனவொளி யறியச்சொன்னீர்
நாதபரம் சிவந்தாண்டி அண்டச்சேவை
காட்டிமிகச் சொன்னீரே குருவே அய்யா
கைவுள்ளங் கனிநெல்லி கண்டுஉண்ணே. (289)

உண்ணிமிகச் சொன்னீரென் குருவே அய்யா
வுற்றபொருள் யெனக்குரைத்தீர் வுண்மையாச்சு
பண்ணிமிகச் சொன்னீரே நூல்கடோறும்
பட்க்ஷம்வைத்து யென்மீதில் பண்பாய்ச்சொன்னீர்
சென்னிமிசை கரங்கூப்பித் தெண்டனிட்டேன்
செப்பினீர் என்னிடத்தி லிருக்குதென்றீர்
எண்ணிமிக யெனக்குநீர் சொல்வீரையா
என்னிடத்தி லிருந்தவொன்றை யெனக்குக்காட்டே

சீடனுக்குக் கூறல்

காட்டென்று கேட்டபிள்ளாய் கேளுகேளு
கனகமணி மாடத்தில் காட்டுவேன்யான்
ஒட்டென்று வுனக்குமுன்னே சொன்னேனப்பா
ஒருமனதாய் மணியில்சேர்ந் துத்துப்பாரு
பூட்டென்ற பூட்டெல்லா மிதிலேகண்டாய்
புண்ணியனே நீயருந்து பொய்யோயில்லை
ஆட்டென்ற ஆட்டெல்லா மிதிலேசொல்வேன்
அழகுமணி மாடமதி லறிவிப்பேனே (291)

அறிவிப்பேன் அறிவுள்ளாய் அறிந்துகொள்ளு
அப்பனே மாடத்தில் வெளிதான்கண்டாய்
விரிவிப்பேன் கருமணிதான் கண்டாயப்பா
யிம்மணியில் நின்றிலங்கும் பரத்தைக்கண்டாய்
தெரிவிப்பேன் பத்துக்குள் சிவத்தைப்பாரு
தேசிகனே அவர்சிரசு அண்டமாச்சு
குறிவிப்பேன் இக்குறிதான் கொள்வாருண்டோ
குருமக்க ளானுக்கால் குறிகொள்வாரே. (292)

வாரெல்லாம் வழியாகச் சொன்னேனப்பா
வழியறியா வேஷகுரு வருவார் கோடி
கூரெல்லாங் குறியாமல் குளறுவார்கள்
குருமக்கள் நானெனவே கூறிக்கொண்டு
பாரெல்லாந் திரிந்தலைந்து பணம்பரிப்பார்
பாலகனே யவர்களிடஞ் சேராதேநில்
ஊரெல்லாந் திரிவார்கள் குருக்களென்று
வுண்மைப்பொருள் கேட்டாக்கால் பதுங்குவாரே. ()

பதுங்குவார் பாசாண்டி வேடத்தோர்கள்
பரதேசி நானெனவே வேடம்பூண்பார்
ஓதுங்குவார் ஓரெழுத்தின் பொருளைக்கேட்டால்
ஒருமொழியுஞ் சீராகச் சொல்லமாட்டார்
சுதுங்குவார் சிவசொரூபங் காட்டென்றக்கால்
சுடுகாட்டுப் பிணமபோலே சொக்கிக்கொண்டு
வதுங்குவார் வந்தவழி தெரியவேதான்
வழியுரைத்தால் குருவெனவே வணங்கிநில்லே. ()

நில்லப்பா பெரியோர்கள் வருவாருண்டு
நின்னோடே பேசார்தன் நிலையில்நிற்பார்
செல்லப்பா அவரை நீ விட்டிடாதே
செப்புவார் யென்னூலில் மொழிந்தபாஷை
கல்லப்பா வானாலுங் கறைந்துபோகும்
கண்டுகொள்ளு அவர்மனது கறையாதப்பா
சொல்லப்பா ஓர்சொல்லும் பொய்வராது
சொன்னாக்கால் ஆதியந்தஞ் சொல்வார்போற்றே. ()

போற்றப்பா பித்தரைப்போல் திரிவார்ஞானி
பொய்க்குருக்க ளல்லமெய்க் குருவேயாகும்
ஆற்றப்பா வுன்மனது யவர்வாக்காலே
அதீதமாய் சொரூபமதில் அடைவாயப்பா
ஏற்றப்பா மணிவிளக்கு உள்ளேசென்று
யென்றைக்கு மவியாத விளக்கைக்கண்டு
சாற்றப்பா பூரணத்தைத் தெரிந்துகொள்ளு
சரிசொன்னேன் நீயதனில் கலந்துகொண்டே. ()

கொண்டங்கே நீயதனில் கலந்துபோற்று
கோடிமுப் பதுமூன்று தேவரங்கே
தொண்டரங்கே தொழுவங்கே பூஜையங்கே
துரைராஜர் அறுபதின்பேர் கொலுவினுள்ளே
பண்டங்கே பானங்கே யயன்மாலங்கே
பலநூலும் போற்றுகின்ற பொருள்தானங்கே.
அண்டரங்கே யட்சரங்க ளெல்லாமங்கே
அதீதமப்பா யானுனக்கு அரைந்திட்டேனே.(297)

அறைந்திட்டே னிந்தநூ லதீதமப்பா
ஆரறியப் போரார்க ளவனியுள்ளே
திறந்திட்டே னுலகோர்க்கு வெளியதாகத்
திவ்யதச தீட்சையெல்லாந் தெரியநன்றாய்
சொறித்திட்டேன் வாடாத புஷ்பமாக
சொர்னசுய வறிவுடைய பிள்ளைகட்காய்
வறைந்திட்டேன் வொளித்ததெல்லாம் வெளியதாக
வாதிவயித் தியர்கண்டால் வாழ்த்தும்நூலே. (298)

நூலேணி யிதுவல்லோ போவதற்கு
நுணுக்கமதாய்க் காலைவைத்து நுழைந்துயேறு
காலேணி சோலையிலே வைத்தேனப்பா
கண்டேறு அண்டம்ரெண்டுங் கொண்டுபோகும்
மேலேணி மூப்பாலுக் கப்பாலப்பா
மெய்ஞ்ஞானி யப்பாலுக் கப்பால்நிற்பார்
பாலேணி சித்தருக்கும் ஞானிக்காகும்
பாடினேன் குருவாக யின்னூல்தானே. (299)

அதீதமயம் 32 கூறல்

தானேதா னறிவதற்கு வகையைக்கேளு
தட்டிவிடு யான்சொன்ன மார்க்கம்போல
நானேதா னியம்பிவிட்டேன் மார்க்கமாக
நாட்டப்பா வுன்மனதை சிவத்தினோடு
மானென்ற அதீதமய முப்பத்திரண்டிற்கும்
மகிழ்வாக அதின்விபர சூட்சந்தன்னை
வானோர்க ளறிவார்க ளெந்தநூலை
வழங்குகிறே னுந்தனுக்கா யாதிபோற்றே. (300)

ஆதிபரஞ் ஜோதியா யமர்ந்தாளம்பாள்
அரகரா வம்பாளைப் போற்றிச்செய்து
சோதிபரம் பரையான சொரூபத்தாயை
ஜொலிக்குகின்ற ரூபியைத்தான் தொழுதுபோற்று
நீதிபரம் பரையான மணியைக்கேளு
நீணிலத்தில் சாஸ்திரத்தில் மறைத்ததெல்லாம்
சேதிபரம் பரையாக நிலைக்கச் சொல்வாள்
திறமாக தேவிக்குக் காப்புக்கட்டே. (301)

காப்பிட்டுக் கர்த்தரைத்தான் தொழுதுபோற்றிக்
கனகசபை யுடையோரை நமஸ்கரித்து
கூப்பிட்டு வுலகோர்கள் பிரமைதீரக்
கூறுவேன் உபதேச சூட்சந்தன்னை
சாப்பிட்டு யிளைப்பாறி யிருங்களென்று
சமுசயங்கள் தீர நன்றாய்ச் சாற்றுவேன்கேள்
ஆப்பிட்ட தென்றுசொல்லித் துள்ளவேண்டாம்
அடுக்கடுக்காய் விபரமெல்லா மறைகுவேனே.(302)

அறைகிறே னாதிமுத லகாரந்தன்னை
அப்பனே அகாரமது சிவமதாச்சு
வறைகிறேன் தீமூல மப்பூவாச்சு
மகாப்பெரிய சூதரச மொன்றுமாச்சு
நிறைகிறேன் வாசிக்கும் வங்காரமாச்சு
நிசங்கண்டு போவதற்கு ஆதிகற்பம்
சொரிகிறேன் தீட்சைக்கு முதல்நந்தியாச்சு
சொர்னசுய நபிமாரைச் சொக்கிக்கேளே. (303)

சொக்கிமிகப் பார்த்தோர்க்கு மூதலெழுத்துமாச்சு
சொல்லவொண்ணா முதல்மூல மிதுவேயாச்சு
நெக்கிமிக அகாரதீட்சை செய்தபேர்க்கு
நிலைகண்டால் முதல்பாழா மென்றுமாச்சு
வெக்கிமிகப் போவார்கள் சமையத்தோர்கள்
வெளியாக யிதிலொன்றைக் கேட்டபோது
புக்கிமிகச் ஜெனனத்தில் வுளல்வார்மாண்பர்
புண்ணியனே ரேசிக்கும் பொருள்தானாச்சே. (304)

பொருளான வெண்சாரை யாகிப்போச்சு
பொய்யில்லாக் கருஞ்சாரை யதிலேயாச்சு
அருளான பொருள்கண்டால் சாரமாச்சு
அப்பனே சாகாக்கா லிதுவேயாச்சு
சுருளான மச்சேந்திர மாகிப்போச்சு
சுழல்காற்று யிதுவாச்சு வாயுவாய்போச்சு
இருளான மருளர்சொல்லைக் கேட்டுமைந்தா
இயங்காதே மயங்காதே இன்னங்கேளே (305)

சீடன் வினவல்.

இன்னங்கே ளென்று சொன்னீர் குருவேஐயா
இயல்பான அகாரமுதல் யாவுஞ்சொன்னீர்
முன்னங்கே ளகாரமதை சிவமதென்றீர்
முனிநாதர் எப்படியோ முழுதுஞ்சொல்வீர்
பின்னங்கே நதிமூல மப்பூவென்றீர்
பிசகாமல் ஒவ்வொன்றின் சேதியெல்லாம்
பொன்னெங்கே யெந்தனுக்கு விபரமாகப்
பொருள்சொல்லும் பொன்கோடிக் கொக்குந்தானே.

சீடனுக்குக் கூறுதல்,

ஒக்குந்தான் கொக்குப்போல் பார்த்தபோது
ஓமென்ற விந்துவட்டத் துள்ளேசென்று
சொக்குந்தான் சொர்னவிந்து சிவமதாச்சு
சொற்பமென்று எண்ணுதே அகாரமாச்சு
மெய்க்குந்தான் உச்சியுள் நாவுயேலே
மேலொழுகு மமுதந்தீ மூலமாச்சு
சிக்குந்தான் சிவன்சிரசில் கெங்கைவைத்தார்
சின்மயமே சிவகெங்கை யகாரமாச்சே. (307)

ஆச்சையா அடியேனுக் கனுக்கிரகித்தீர்
அடியேனுங் கண்டுமதைக் கொண்டேனையா
பேச்சையா சூதரசமென்றுஞ் சொன்னீர்
பெருமையுள்ள யிவ்விரண்டும் பேசவேண்டும்
வீச்சையா விவேகிகள்தான் யெழும்பொட்டாமல்
விந்துவென்ற பாம்பையுண்டால் சூதமாச்சு
பாச்சையா வுந்தனுக்குச் சொன்னேனையா
பற்பலவாய்த் தெரிந்ததனுல் ரசமாய்ப்போச்சே. ()

ரசமாகத் தெரிந்ததுதான் அகாரமாச்சு
ரவைரவையாய்த் தெரித்தரசம் ஒன்ருய்ச்சேர்த்து
நிசமாய்ச்சேர்த் துண்பார்க்குச் சூதமாச்சு
நினைவையெழும் பொட்டாமல் வுண்டதாலே
எசமானுய்ப் போகாதே சொன்னேனென்று
எவர்கள்வந் தாலுமுன்னே வணங்கிநில்லு
விசமாய்கை யிதுவய்யா அறிந்துகொள்ளு
விபரிப்பேன் வங்வகார வாறுகேளே. (309)

வாருய்நீ வழியாகச் சொல்வேனப்பா
வழியறியா லோகர்செய்யும் வாதுபோல
போருய்நீ மூச்சிழுத்து மூறடாதேகேள்
பொருளான ரேசகந்தா னென்றுசொல்லி
தேருய்நீ கபாலந்தான் தெரித்துப்போகும்
தேசிகனே வாசியோக வழிகளெல்லாம்
கூருய்நீ யிதுவாசி யோகபென்பார்
குறியோட்டி யின்னூலைப் பதனஞ்செய்யே. (310)

செய்துபார் யின்னூலை செவ்வையாகச்
செப்புமிந்த ஞானத்தின் சூட்சந்தன்னைக்
கொய்துபார் பற்பலவாய்ப் பேரெட்டாமற்
குழந்தாய்நீ கேட்டதினுல் கூறுவேன்யான்
உய்துபார் வாய்வதுதான் மனமாய்ப்போச்சு
உத்தமனே யம்மனந்தா னகாரமாச்சு
எய்துபார்த் துண்டாக்கா லாதிகற்பம்
என்மகனே வாய்வதினுல் வகாரமாச்சே. (311)

ஆச்சுதப்பா வாய்வான மனதைமெள்ள
அறிவினுல் வழிமாரா வசமாக்கிக்கொள்
ஏச்சுதப்பா யிச்சையிலே மனம்போனுக்கால்
என்னசொல்வேன் சுழல்காற்றி லகப்பட்டாப்போல்
போச்சுதப்பா துரும்பாகிச் சுழலுங்கண்டாய்
போனமனம் சுழண்டாக்கால் பொருந்துமோசொல்
பேச்சுதப்பா நுல்களெல்லா மிந்தவார்த்தை
பேய்மக்காள் மூச்சிழுத்து ரேசிப்பாரே. (312)

ரேசிப்பார் ரேசகந்தா னென்றுசொல்லி
எந்தனுட நூல்பாராத் தோடத்தாலே
வாசிப்பார் நூல்பேசும் வழியைக்காணுர்
வந்தபடி பேசியல்லோ வழக்குச்செய்வார்
பூசிப்பார் ஜெகக்கியானி யின்னூல்கண்டும்
புவிவிட்டுப் போகாதே புகழ்வேன்கண்டாய்
நேசிப்பார் தவசிகளு மிந்தநூலை
நினைவாக யான்சொல்லும் வாசிகேளே. (313)

வாசிபா ரிதுவாசி ரேசிப்பாய்கேள்
வண்டபிண்ட சர்வத்தில் நிறைந்துநீயும்
யேசிப்பாய் ஓங்காரத் துள்ளே நின்று
யெவ்வுயிரில் நிறைந்ததப்பா கண்டுவாங்கு
காசியப்பா யென்று சொல்லிப் போய்விடாதே
கங்கைநதி தீர்த்தமென்ற சங்கைவேண்டாம்
யோசிப்பாய் மூச்சிழுக்கச் சொல்லவில்லை
ஓமைந்தா யுந்தனுக்கே யுரைத்தேன்தானே. (314)

உரைத்தனப்பா அகாரத்தின் விபரமெல்லாம்
உள்ளபடி சொன்னேன்பார் கண்டுகொள்ளு
மறைத்தப்பா வுந்தனுக்குச் சொல்லவில்லை
மார்க்கமிது மயங்காதே மர்மஞ்சொன்னேன்
குறைத்தப்பா யின்னூல்போற் சொல்லாதப்பா
குருபுத்திர ரின்னூலைச் சரணஞ்செய்வார்
நிறைத்தப்பா யான்சொல்வேன் கேளுகேளு
நிகரில்லை நிராமயந்தா நுகாரங்கேளே. (315)

கேளேதா றுகாரத்தின் வாரெல்லாம்நீ
கேசரம்போற் சொல்லுமிந்தச் சூத்திரந்தான்
பாளேபி ராந்திகளும் நீங்கச்சொல்லும்
பஞ்சிவிட்ட தீப்போலப் பகருமின்னூல்
கோளேதான் சொல்லாது யின்னூல்தன்னில்
கோஷ்டமினிச் செய்யார்க ளின்னூல்பார்த்தோர்
மேலேநீ மெஞ்ஞானி யாகிப்போவாய்
மேதினியில் பந்தமதில் சிக்காய்காணே. (316)

காணேதா நுகாரமதைச் சொல்லிவாரேன்
கண்மணிவிண் ணுச்சுகரு நெல்லியாச்சு
ஊணேதான் ஓங்கார மாகிப்போச்சு
உமைக்கூட்ட மட்சாரந்தான் உருதியாச்சு
தேனேதான் கயிலாய மாடமாச்சு
தேங்கொளிதான் கயிலாய மாகிப்போச்சு
தானேதா னுந்தனுக்குச் சொன்னேனப்பா
நாட்டிப்பார் வைகுண்ட நிசவீடாச்சே. (317)

வீட்டுக்குள் விளக்கொளிவு தானுமாச்சு
விதுசிகர சத்தியலோக மாகிப்போச்சு
எட்டுக்குள் எழுதாட்டால் காணப்போமோ
யேகநிரா மயமான சொரூபந்தன்னை
நாட்டுக்குள் நாயோட்டு மந்திரமாச்சு
நானுனக்காய்ச் சொன்னேனப்பா நடந்துபாரு
கோட்டுக்குள் ஒருவனல்லோ அறிவானித்தை
கோடிசித்து க்ஷணத்துக்குள் ளாடுவானே. (318)

ஆடிப்பார் அகாரயதை யுகாரத்தில் நாட்டி
அரகரா உகாரரெண்டுஞ் சேர்ந்தாலப்பா
பாடிப்பார் நிராமயந்தா னென்றுசொல்லிப்
பளிங்கேழாம் பூமியின்மேல் நின்றுதப்பா
ஓடிப்பார் சொரூபவெளிக் குள்ளேநன்றுய்
ஒன்றுகேள் நாதமங்கே கேட்குங்கேட்கும்
கூடிப்பார் குருபுத்திராள் சேரச்சொன்னேன்
குருக்குவழி நேர்யிதுதான் கூடுநன்றே. (319)

சீடன் வினவல்.

நன்றென்றீர் யென்குருவே தாந்தமூர்த்தி
நாதாந்த வுகாரமதற் கிவையுஞ்சொன்னீர்
கன்றென்றீர் கருநெல்லி வுகாரமென்றீர்
கணக்காகச் சொல்லுமையா விண்ணென்றீர்முன்
ஒன்றென்றீர் ஓங்காரச் சத்தமென்றீர்
உகாரகயி லாசமென்ற வகையைச்சொல்வீர்
சென்றென்றீர் யான்சேரச் சொல்வீரையா
செவ்வையாய் ஒவ்வொன்றின் சேதிசொல்லே. ()

சீடனுக்குக் கூறல்

சொல்லேநீ தானென்று கேட்டபிள்ளாய்
சொற்பமல்ல உகாரமது கற்பமல்லோ
மெல்லவே நோக்கிப்பார் உண்மைதோன்றும்
மேன்மைருத்திர சிரசதனுல் விண்ணதாச்சு
வெல்லேதான் கைலாயங் கொலுவாய்ப்போச்சு
வேதாந்தஞ் சொல்லிவிட்டேன் உன்கண்மையம்
தில்லேதான்மைய வுமையருட ஸ்தானமாச்சு
நிரம்நீலம் திலர்தமப்பா கருநெல்லிசேரே. (321)

சேர்நெல்லி சோலையாய் நிலைத்துப்பார் நீ
செப்பியசத் தியலோகம் வைகுண்டங்காணும்
பார்நெல்லி சோலைபோய்ப் பஞ்சவர்ணம்
பாங்கான பூரகந்தான் அதிலேசெய்வாய்
வேர்நெல்லி சோலைபோய்த் தேடவேண்டாம்
வெளிவிட்டேன் உகார அகார உளவையெல்லாம்
ஆர்நெல்லிச் சோலைபோய் நிலைக்கப்போறூர்
அரகாா அறிவுள்ளா யறிந்துநாடே. (322)

நாடறிந்து சோலையிலே நாடிப்பார்பார்
நற்குறியை யுனக்குரைத்தேன் நாதத்துள்ளே
வீடறிந்து விளையாடு வுனக்குச்சொன்னேன்
விதைபுருவ மையமென்றே விள்ளும்நூற்கள்
ஆடறிந்து ஜோடிகலை யாமல் நின்று
அந்தந்தச் செயலறிந்து ஆடிப்பாரங்
கூடறிந்து கூடுதான் கம்பத்தாட்டம்
குறிமையம் பூரகஞ்சேர்த் துண்டால்தானே. (323)

சேர்த்துண்டால் பூரகந்தான் செப்பிப்போட்டேன்
சேயெம்மை யண்டியதால் செம்மையாய்த்தான்
கோர்த்துண்டால் எவ்வாரோ யென்றுகேட்பாய்
குறையாமல்நிறையாய்த்தான் கூறிப்போட்டேன்
பார்த்துண்டால் வேணுமென்றே சொல்லிவைத்தேன்
பதிவாக அதிதமெல்லாம் பாட்டுக்குள்ளே
ஆர்தொண்டு செய்தங்கே பார்க்கப்போறூர்
அதிதமுப்பத் திரண்டினிலே யறிந்துகொள்ளே. ()

அறிபிள்ளாய் பரிபாஷை சொல்லவில்லை
அந்தந்த நூல்களிலே மறைத்துச்சொன்னூர்
தெரிபிள்ளாய் விரிவாகச் சொன்னேனின்னூல்
தேங்கொளியைத் தட்டிவிடு தேஜோனந்தம்
வெரிபிள்ளாய் வெட்டவெளி யாகச்சொன்னேன்
வேகவென்றால் வேறில்லை பாருபாரு
குறிபிள்ளாய் நெறிபிள்ளா யன்புள்ளாய்நீ
கும்பகங்கொள் கொலுதாண்டு பதியதாமே. (325)

பதியதுவே பார்தோர்க்கு அங்கொன்றில்லை
பார்ப்பவர்கோ ருறவோரும் பெற்றோரில்லை
விதியதுவே யதிலொருவர் கண்டோரில்லை
விம்மட்டம் மட்டென்று சொல்லப்போமோ
கெதியதுவே யதுவரையான் சென்றுபார்த்தேன்
கேள்பிள்ளாய் கனசரா சரமதண்டம்
மதியதுவே யடங்கலுந்தா னதிலயிக்கம்
மகா அபத்த மதுநித்தியம் பரிசுத்தந்தானே. (326)

பரிசுத்த மானவிடங் காட்டிவிட்டேன்
பாருலகு மனித்தியமது நித்தியமப்பா
இருசுத்த மானகொலுத் தாண்டிமேல் நீ
இடமதுவே பொருளதுவே யேகிநில்லு
நெறிசுத்த மாகவங் கிருமவுனம்
நேர்நிரா கார்ஜோதி பேச்சங்கில்லை
குறிசுத்த மானசுகஞ் சொக்கித்தூக்கங்
குவித்து நீ யங்குநில்லு கும்பந்தானே. (327)

சீடன் வினவல்.

தானமது தனிக்கும்ப மெனக்குரைத்தீர்
தங்குமிட மதுவெனவே தனிமையானேன்
மோனமது யென்னையங்கே யிருக்கச்சொன்னீர்
மொளியிலெமைக் கலக்கவைத்தீ ரொத்துக்கொண்டேன்
தேனமுது கலந்துண்ட வின்பம்போலோர்
தேவரீ ரிடம்பொருளு மேவல்சொன்னீர்
கோனமதுள் மேல்நோக்கிப் பார்த்தேனுண்மை
குறிகலை யாமலும்மைப் போற்றுவேனே. (328)

போற்றியுமைப்பொற்பூவா லர்ச்சித்தேன்யான்
பொன்னுலகங் கண்ணாலே கண்டபோதே
ஆற்றிநீ யென்மனதைப் பொன்போலையா
அடுக்காறுங் கண்டப்பால் நின்றேன்யானும்
ஏற்றிநீ ரொருதீப மெங்கும்ஜோதி
யெங்கும்யே கோயமதா யிருந்திட்டேன்யான்
மூற்றியே மும்மூல மெனக்குச்சொன்னீர்
முதற்பாக மென்குருவே யதுமெய்வாழ்வே. (329)

சீடனுக்குக் கூறல்.

அதுவாய்நீ யதுவாக வங்கே நிற்பாய்
அவ்வருளே யுன்வாக்கு வழியேயோக்கும்
பொதுவாயுந் தன்வாக்கு பொய்யாதப்பா
போற்றும்புவி பொற்சிலைபோ லங்கேநில்லு
மெதுவாய்வந் துனையழைப்பார் நீபோகாதே
மெல்லவே தேடிவந் துனைப்பணிந்து
யெதுவாய்வந் துனைக்கேட்டா லதுவைச்சேவி
என்மகனே ஜனங்களுன்னை வணப்பிப்பாரே (330)

வணப்புவார் வகண்டமதாய்க் கண்டபிள்ளாய்
வண்டமது கண்டங்கே வழிவேறில்லை
தினமங்கே சேர்வையா யிருநான்சொன்னேன்
திங்கள்ரவி பூரணம்போ லெங்கும்பாரு
ஜெனமிங்கே வந்துன்னைப் பணிகுவார்கள்
சேர்வையது பார்வையதாய் சேவித்தேநில்
மனமங்கே வைத்திடுநீ மற்றென்றில்லை
மண்ணுலகில் முனியாவாய் நினைத்ததாமே. (331)

ஆம்நினைத்த வாரெல்லா மதினுலாகும்
அவ்வருளின் விளையாட்டை யறியப்போமோ
போம்நினைத்த வாறெல்லாம் மனந்தானப்பா
போகவிட்டால் பொருள்கிட்டா பொருந்திநில்லா
நாம்நினைத்த வாறெல்லாம் நம்மாலில்லை
நானுனக்காய்ச் சொன்னேனப்பா நன்பனென்று
ஓம்நினைத்த வாறெல்லாஞ் சித்திசொன்னேன்
ஓம்அங்உங் வுண்மையாய் நம்பினோர்க்கே. (332)

நோக்கதிலே நுட்பமதாய்ச் சொல்லிப்போட்டேன்
நுட்பமதாய் ஓங்கார உளவைச்சொன்னேன்
தாக்கதிலே தனிக்குமிடம் சொல்லிப்போட்டேன்
தாரகத்தி னிலையதுவே தயங்காதேநில்
போக்கிலே மனதையனு தினமுமப்பா
பொன்போலே யுன்மனதை யதிலேதாக்கு
ஆக்கதிலே யுன்மனதை யலையோட்டாமல்
அங்உங்ஓம் என்றதுவுஞ் ஜெயமதாமே. (333)

ஜெயமாகும் பூரணத்தின் மகிமையாலே
செய்காரி யங்களெல்லாஞ் சித்தியாகும்
லயமாக்கு வுன்மனதை யதனுலாக்கு
லரிக்குமுத லெழுத்தெனவே யறிந்துகொண்டு
வயமாகும் யகாரத்துள் சென்றுநன்ருய்
வளவிட்டுச் சொல்லவொண்ணு வாணன்ஜோதி
சுயமாகும் பிரகாச அருபாருபம்
சுளுவாயான் அங்உனக்காய் வெளிவிட்டேனே. ()

விட்டேன்யான் மாணுக்கா யுனக்காய்ச்சொல்ல
விதுசூது யில்லையப்பா விவேகத்தோனே
பட்டேயான் விட்டபோ தகண்டம்போல
பாரில்சித்தர் பரிபாஷை யாகச்சொன்ஞர்
தொட்டேயான் காட்டிவிட் டதுபோல்சொன்னேன்
துலங்குநவ ரத்னவொளி தீபம்போல்தான்
கட்டாக யினிவுனக்காய்ச் சொல்வேனப்பா
கனகமய மும்மூர்த்தி சொருபந்தானே. (335)

சொருபத்தின் வரலாறு அப்பாகேளு
சொல்லாது யென்னூல்போ லெந்தநூலும்
இருபத்தின் மார்க்கமதா யின்னூல்போல
இந்நூற்குள் சர்வநூ லயிக்கியமப்பா
குருப்தத்தின் வழிநம்பி வந்தோர்க்கெல்லாம்
குறிகாட்ட யிடம்பொருளு மேவல்தந்தேன்
அருபத்தின் சொருபமதை யடியார்காண
அகக்கண்ணுந் தந்தேன்பா ரதனுல்கரணே. (336)

காணப்பா நான்சொன்ன மார்க்கந்தன்னைக்
கழருதே கருமிகட்கு யிந்தச்சூட்ஷம்
வேணபடி பொய்பேசும் வீணரோடு
வீணிலே திரியாதே அப்பாவென்று
தோணவே சொல்லிவிட்டேன் வெளியதாகக்
தோய்ந்தபொருள் யாவற்றும் பால்போலாக
ஊணிப்பா ரின்னூலை வெளிவிடாதே
உத்தமனே யாருக்குங் கொடுத்திடாதே. (337)

ஆருமில்லை வடபாக மக்கத்தேதான்
அங்கிருக்கும் வேளையிலே நூலைச்செய்தேன்
கோறிநின்றேன் குருபாதந் தொண்டுபண்ணிக்
குவலயத்தில் வாதத்தின் திறவுகோலுங்
கூறினேன் தனியாக நானூருந்தான்
குறிப்பாகப் பஞ்சமித்திர மூன்னூறுஞ்சொன்னேன்
காரியமாய்ச் சுண்ணமூன் னூறுஞ்சொன்னேன்
காட்டாதே காயகற்பம் பத்துதானே. (338)

பத்தான களங்கமூன் னூறுஞ்சொன்னேன்
பாலகனே ஆயிரத்தி யிருநூறுசொன்னேன்
சித்தான அறுநூறு சுண்ணஞ்சொன்னேன்
ஜெகமீதிற் செந்தூரமூன் னூறுஞ்சொன்னேன்
மூந்தாகக் காணுதற்கு ஞானஞ்சொன்னேன்
மூடிவாகச் சூஸ்திரத்தின் சுருக்கஞ்சொன்னேன்
எத்தாகப் பாடிவிட்டேன் தூம்பரவித்தை
எடுத்துரைத்தே னிருபதுநூற் கோர்வையாமே. ()

ஆமடா யென்னைப்போ லார்தான்சொல்வார்
அரகரா உளவையெல்லா மெடுத்துரைத்தேன்
தாகமடா வகத்தீச ரெந்தனுசான்
தடையறவே யுளவையெல்லா மெனக்குச்சொன்னார்
நர்மடா வவர்வுளவுங் கைபாகங்கள்
நாட்டினே னின்னூலில் மெத்தவுண்டு
ஆமடா கருவான தெல்லாஞ்சொன்னேன்
அன்பாகக் கார்த்திடுவாய் நூலைத்தானே. (340)

தாம்பிரவேதை.

நூலான நூலதனைப் பதனம்பண்ணி
நுணுக்கமதாய்ச் சொல்லுகிறே னின்னங்கேளு
பாலான தாம்பிரமாம் வேதையப்பா
பகருகிறேன் கருங்கையான் கருவூமத்தன்
சேலான கருவுள்ளி மூன்றுமொக்கச்
சேர்த்தரைத்துச் செம்புக்குக் கவசஞ்செய்து
மாலாகப் பத்தெருவிற் புடந்தான்போடு
மகத்தான செம்பதுவு மூறல்போமே. (341)

போனபின்பு மூசையிலே வைத்துருக்கிப்
 போக்கோடே கண்விட்டு ஆடும்போது
மானமுள்ள யென்னையா கருங்கையானின்
 மகத்தான சாறதனைப் பிழிந்துபாரு
தேனமுதம் பத்தரையாம் தங்கமாச்சு
 சேரடா முப்பதுக்கு ஒன்றுதங்கம்
வானவருஞ் சித்தர்களு வாழ்த்துவார்பார்
 வையகத்தி லென்னைப்போலே சித்தன்பாரே. (342)

பாரடா துருசினிட போக்குச் சொல்வேன்
 பதறாதே துருசதுவே பலமதாகும்
நேரடா ஜெயநீரா லரைத்துமைபோல்
 நேர்மையுடன் பில்லைசெய்து ரவியில்வைத்து
கோரடா சிவகாந்தை வண்டுமூலி
 கோர்த்தரைத்துப் பில்லைக்கு கவஷஞ்செய்து
பாரடா பத்தெருவிற் புடந்தான்போடு
 பாலகனே யென்னசொல்வேன் சுண்ணமாச்சே. ( )

சுண்ணத்தின் காரமதை யென்னசொல்வேன்
 சூட்சமந்தா னிவ்வேதை சிடிகைவேதை
பின்னமது வாராது யிந்தப்பாகம்
 பிழைப்பதற்கு மதிமேலே பத்துக்கொன்று
சொன்னபடி குருவதனைப் பாய்ச்சிடாய்நீ
 தொல்லையறும் வயதுபதி னாறதாகும்
என்னமோ சொன்னேனென் றெண்ணவேண்டாம்
 யென்னுசா னகத்தீசர் சொன்னவாக்கே. (344)

வாக்கான அவர்வாக்குப் பொய்யாதப்பா
 வையகத்தி லவர்போலே வுண்டோசித்து
போக்குதனை விள்ளாதே கருமிகட்குப்
 புத்தியுள்ளாய் பூஜித்துப் பதனம்பண்ணு
நாக்கமலத் தாயாரி னருளையுன்னி
 நடத்தடா யான்சொல்லும் வேதையெல்லாம்
தாக்குவே னின்னமூண்டு சிடிகைவேதை
 தயங்காதே சொல்லுகிறே னன்றாய்க்கேளே. (345)

நன்றான ரசத்தின்செந் தூரங்கேளு
 நாயகனே ரசமதுவே பலந்தான்கொண்டு
குன்றான குன்றுதனி லிருக்குமூலி
 குணமுள்ளாய் னேற்பூண்டு வரைத்துநன்றாய்
பன்றான ரசமதனை யுட்பொதிந்து
 பட்சமுடன் எழுசீலை வழுவாய்ச்செய்து
நன்றான கெஜபுடந்தான் வைத்துப்பின்பு
 நவிலுவேன் புடமாறி யெடுத்துப்பாரே. (346)

எடுத்துப்பார் ரசங்கட்டிச் செந்தூரிக்கும்
 யேகாந்த தரிசனமோ சிகப்புமெத்த
தொடுத்திட்டேன் மூலியுட பரிட்சைகேளு
 சொல்லுகிறேன் தேள்மீதில் சார்பிழிந்தால்
மடிந்துபோம் தேளதுவு மூலியாலே
 மாட்டுகிறே னரவத்தின் முன்னெறிந்தால்
கடிந்துமே போகாது தடையாய் நிற்கும்
 கண்மணியே யதையெடுத்தா லேகுந்தானே. (347)

ஏகுமே பேர்சொல்லி வேர்பிடுங்கில்
 என்னசொல்வேன் மாரணமாங் கருமமாடும்
வாகுடனே நாதாக்க ளருளினாலே
 வரைத்திட்டேன் சாத்திரத்தின் மறைப்பையெல்லாம்
சாகாத வரம்பெற்றேன் ஆசானாலே
 தாரணியில் வாதவித்தை யோகவித்தை
போகாமல் சடலத்தை யிருத்திக்கொள்ளும்
 புண்ணியனே யவ்வித்தை தான்கண்டேனே. (348)

கண்டேனே ஞானமுதல் மாந்திரீகம்
 காரியமாய் வயித்தியத்தி னுளவுங்கண்டேன்
சண்டமா ருதம்போலே யிறப்போர்தம்மைச்
 சாகாமல் பிழைப்பதற்கு வுளவுங்கண்டேன்
எண்டிசையில் தானிருக்கு மூலியெல்லாம்
 என்குருவா மகத்தீச ரருளாற்கண்டேன்
விண்டேனே யுந்தனுக்காய் விபரமெல்லாம்
 விருப்பமதாய்ச் சொல்லுகிறே னின்னங்கேளே. ()

சொல்லுகிறேன் செந்தூரம் பத்துக்கொன்று
சொகுசாக மதிமேலே யீய்ந்துபாரு
வெல்லுவாய் வயததுவு மொன்பதாகும்
வேகமடா செந்தூரப் போக்குக்கண்டாய்
நல்லவித்தை யிவ்வேதை கைவிடாதே
நாடதனில் கிடைக்காது யிந்தப்போக்கு
வல்லமையா யாடிப்பார் சொன்னதெல்லாம்
வகையறியா மூடருக்கு யெய்தாதென்னே. (350)

எய்யாது யின்னமொரு போக்குச்சொல்வேன்
யெழிலான ரசிதமது வித்தைகேளு
பொய்யாது குருபரனார் சொன்னவாக்கு
பூவுலகி லுந்தனுக்காய் யியம்புவேன்பார்
மெய்யாகத் தாம்பரத்தை வுருக்கிநீதான்
மேன்மையுள்ளாய் வெட்பூண்டின் சாரில்தோய்த்து
கைதவமாய் யேழுவிசை யுருக்கிச்சாய்க்கக்
கண்மணியே தாம்பரந்தான் வெளுத்துப்போமே. ()

போமடா அதின்பிறகு சொல்லக்கேளு
புகழான வயதுபதி னறதாகும்
தாமடா வங்கபற்பஞ் சொல்லக்கேளு
தயவான வார்பூண்டை யரைத்துநன்றாய்
வாமடா வங்கத்திற் கவசஞ்செய்து
வகையாகப் பத்தெருவில் புடந்தான்போடு
நாமடா யியம்பியதோர் வங்கந்தானும்
நாயகனே திருநீறாய் நீறிப்போமே. (352)

நீறிப்போம் பற்பமது பத்துக்கொன்று
நிலையாகத் தாம்பரத்துக் கீய்ந்துபாரு
வீறியனே செம்பதுதான் சுத்தியாச்சு
வீணிலே போக்காமல் நாலுக்கொன்று
காரியமாய்த் தங்கமது சேர்த்துப்பாரு
கண்மணியே வயததுவே யொன்பதாகும்
நாரியர்பால் போகாதே தர்மஞ்செய்து
நன்றாகச் சாஸ்திரத்தை யாய்ந்துபாரே. (353)

பாரே நீ ஜீவனத்தைச் செய்துகொண்டு
பண்பாக யெந்தனுட நூலைப்பாரு
ஓரே நீ யொருவருக்குங் காட்டாதப்பா
சிற்பரனுந் தற்பரனைத் தியானம்பண்ணு
ஊரே நீ திரியாதே யுற்றுப்பாரு
ஓகோகோ அப்பாளி னுட்டம்பாரு
காரே நீ கண்மணியே பதியில்சொக்கு
கருத்தாக நாதவிந்தைக் கண்டிடாயே. (354)

கண்டிடா யின்னமொரு கருவைச்சொல்வேன்
கழருதே செம்பினுட சுத்திகேளு
விண்டுபார் செம்பதுவைத் தகடதாக்கி
விண்மணியே உத்தாமணி யிலையரைத்து
சண்டமா ருதம்போலக் கவசஞ்செய்து
சாங்கமுடன் பத்தெருவில் புடந்தான்ரெண்டு
கண்டபடி மேனியிலைப் புடமிரண்டு
காட்டாதே ஊமத்தைப் புடமொன்ருச்சே. (355)

புடமதுதான் தீர்த்தபின்பு குருச்செம்பாச்சு
புண்ணியனே தங்கமது நாலுக்கொன்று
தடம்போலச் சேர்த்துப்பார் வயதேழாச்சு
தாரணியி லிவ்வேதை செய்துகொண்டு
வடமான கசடருக்குக் காட்டொணுது
வாகாகச் ஜீவனத்தைச் செய்துகொண்டு
மடமான ஸ்தம்பத்தை நோக்கிப்பாரு
மைந்தனே வாதமது சிக்கும்பாசே. (356)

சிக்குந்தா னின்ன மொரு போக்குச்சொல்வேன்
சேயெம்மை யண்டியதால் செவ்வையாக
ஓக்குந்தான் கவுதும்பைத் தூண்டிமூலி
ஓகோகோ வரைத்துநன்ருய்த் தங்கத்திற்கு
புக்கியே கவசித்துப் புடமேயொன்று
போட்டுயெடு திருநீருய் நீறிப்போகும்
தக்கபடி சொன்னேனே யுந்தனுக்காய்த்
தயங்காதே வசீகரத்தின் குணத்தைக்கேளே. (357)

குணமாகச் சொல்லுகிறேன் வாதவித்தை
குவலயத்தில் சொல்லாது யென்னூல்போல
மணமான நூலப்பா யெந்தன்னூலு
மார்க்கமெல்லாந் தெரியுமடா யிந்தநூலில்
சணமான வேதையடா செம்புசுத்தி
தாரணியில் செம்பதனைத் தகடதாக்கிக்
கணப்பொழுதில் நீயேகிச் சுருட்டிமூலி
கண்மணியே கொண்டுவந்து சொல்லக்கேளே. ()

கேளேதா னறைத்துநன்றாய்ச் செப்புக்கப்பா
கெடியாகக் கவசித்து மாணுக்கா நீ
நாளேதான் போக்காமல் யெருவோபத்தில்
நாயகனே புடம்போட வூறல்போச்சு
காணேதான் பத்தரையா மாத்துமாச்சு
காட்டாதே ஜீவனத்தைச் செய்துகொண்டு
வாளேதான் நான்சொன்ன சித்தியெல்லாம்
வையகத்தில் ஆடிப்பார் அருமைதானே. (359)

அருமையாம் வெள்வங்க நீர்தானேக
அப்பனே காடியிலே கொண்டுவந்து
பொருமையாய் வங்கத்தைத் தானுருக்கிப்
போக்கோடே சார்பிழிந்தால் நீர்தானேகும்
தருமமது நடத்தியப்பா தரணிதன்னில்
தற்பரனைத் தியானித்துச் சொக்கிப்பாரு
கருமத்தில் சிக்காதே வேதைபார்த்துக்
காரியமாய்க் கண்மணியே விண்ணைப்போற்றே. ()

போற்றடா பிரமத்தின் தியானம்பாரு
பொன்னுலக வதிசயமோ யென்னசொல்வேன்
நாற்றிசையில் நாதாந்த சித்தரெல்லாம்
நமனுரைத் தான்விலக்கிக் கொலுவில்நின்றார்
காற்றடா வாசியைத்தா னேக்கிப்பாரு
கருவினமே கொட்டாவி சுழியைப்பாரு
சாற்றடா சிறுவாசல் தன்னைநோக்கித்
தற்பரனார் பதியேகும் பாதைதானே. (361)

பதியான தம்பத்தைக் கண்டுதேறு
பாங்குபெறச் சுழி நிலையி லோட்டிப்பாரு
கதியான உள்நாவு அண்ணுவில்தாக்கு
கற்பகமே உச்சியென்ற பதியைக்காணு
சதியான தமனுரின் பதியைத்தாண்டு
சாதகமாய் நாட்குநாள் பழக்கம்பண்ணு
உதிக்குமே பஞ்சவர்ணக் கூத்துக்காணும்
ஓர்மனதாய் நீயிருந்து சொக்கிப்பாரே. (362)

பாரேநீ தசதீட்சை யொன்ருய்க்காணும்
பாருலகில் பஞ்சகர்த்தா ளாட்டமாட்டம்
சீரேதான் வழிபிசகா வண்ணம்பாரு
சிற்பரனு மாசானைத் தீசர்பாதம்
காரேநீ தொண்டுபண்ணித் தியானம்பாரு
கண்மணியே காட்டுவார் கலங்காதே நீ
ஊரேதான் றிரிந்தலைந்து போகாதப்பா
உற்றபொருள் தெரிந்துகொண்டு செய்துகொள்ளே

யேமவித்தை.

கொள்ளடா விள்ளாதே யேமவித்தை
கூறுவேன் வார்மூலி கொண்டுவந்து
உள்ளபடி மதியதனை யுருக்கியப்பா
வுத்தமனே கண்டுவிட்டு ஆடும்போது
நள்ளடா சார்பிழிந்து யெடுத்துப்பாரு
நானிலத்தில் யென்னசொல்வேன் வயதேதென்ருல்
கள்ளமது யில்லையடா யிருபத்தைந்தாம்
கண்மணியே யேமத்தின் வயதுதானே. (364)

அயத்தங்கம்.

தானுன அயத்தங்கஞ் செப்பக்கேளு
சரியாகத் தான்சொல்வேன் மகிமைமெத்த
தேனுன யென்சீஷா வட்டப்பத்திரி
தேவனெனுங் குருமுனிதான் சொன்னவாக்கு
கானுன கானகத்தி லிருக்குமூலி
கண்மணியே மதுரைக்கு மேற்கேயையா
கோனுன சதுரகிரி குகைதானென்று
கொற்றவனே யதில்வசிப்பார் குமாரசித்தே. (365)

சித்தான மகாசித்து குமாரதேவர்
செருக்கின்றி யம்மலேயில் துவாபரத்தில்
பத்திசெய்ய வந்தனரா மின்னுள்மட்டும்
பாலகனே யிருக்கின்றூர் நாட்டத்தோடு
கத்தனைப்போல் ஜொலிக்கிறதே தேகமப்பா
கற்பகம்போல் வளருகின்ற தையாவாவுள்
இத்தகைய சித்தருக்கு மலேயினோம்
இலங்குதே வட்டப்பத் திரிதான்காணே. (366)

காணுமே யாங்கூறு மூலியெல்லாங்
காட்டுவார் குமாரசித்தைத் தொண்டுபண்ணுல்
தோணுவார் பணிந்தவர்க்கு யென்னூலுங்காட்டிச்
சொல்லுவா ரென்னூலில் மொழிந்தபாஷை
வாணுவமாம் அயத்தை நீ காய்ச்சியப்பா
வட்டப்பத் திரிச்சாரில் தோய்க்கத்தோய்க்க
நாணுமே யிரும்பதுதான் தங்கமாச்சு
நாதாந்த யோகிக்குச் சொன்னபோக்கே. (367)

நாதாந்த சித்தருக்கா மிந்தவித்தை
நலமில்லா சமுசாரிக் கெய்யாதப்பா
வேதாந்த ரிஷிகட்குச் சொன்னவித்தை
விண்ணுலகம் மண்ணுலகஞ் சொலிக்குமேமம்
வாதாடும் பதினெட்டுச் சித்தரப்பா
வகையதனைச் காண்பிக்கப் பயந்தாரையா
மூதேவிச் சண்டாளக் கருமிமாண்பார்
முன்னேனைத் தேடினல் கிடைக்கும்பாரே. (368)

பாரேதான் திரிந்தலேந்து வருகும்போது
பாங்கான சதுரகிரி மேற்கேயையா
ஓரேதான் ரோமரிஷி யாச்சிரமந்தான்
திகழான மலேயாறு குகைகள்மூன்று
காரேதான் குகைக்குள்ளே ரோமர்தானுங்
கனிவாக வீற்றிருப்பார் கர்த்தாபோல
தேரேதான் வரைசுற்றிக் காவலப்பா
தேர்ச்சியுள்ள கரடிபுலி சிங்கந்தானே. (369)

சிங்கமுடன் செந்நாயுங் கருநாயுந்தான்
ஜெகமதிக்கும் அரக்கரோ டனந்தம்பேர்கள்
இங்கிதமாய்ப் புலியோடு காளிதானும்
இயலான குறலிகுட்டி சுடலைசாத்தான்
பொங்கமுடன் மாடனு ரிருளனோடு
புகழான வீரபத்திரன் முனிகருப்பன்
சங்கையின்றிக் காவலப்பா வவரைச்சுற்றித்
தயாபரனே யென்சொல்வேன் மகிமைதானே. (370)

தானான ரோமரை நீ காண்போமென்றால்
சதுரகிரிக் குகைதனிலே காணலாகும்
தேனான தியானமது செய்யவேண்டும்
தேசத்தில் அவாருள்தான் கிட்டுமப்பா
கோனான ரோமரிஷி தன்னைக்காண
குறுமுனியென் னுசானை வேண்டிக்கொண்டால்
மானான வென்சீஷா போய்வாவென்று
மகத்தான மூலிகையைக் காண்பிப்பாரே. (371)

மகத்தான மிருகத்தின் வணங்கிமூலி
மாட்சியுடன் கைகொடுத்து மிருகத்தின்மூன்
அகத்தியனுர் சீடன்யான் யாக்கோபென்று
அரையடா மிருகமெல்லா மோடிப்போகும்
ஜகத்திலே பூதகண மெல்லாமோடும்
சார்ந்துநீ ரோமரிஷி தன்னைக்கண்டு
வகமகிழ்ந்து யெந்தனுட பெயரைச்சொல்லு
வரிசையுடன் றுனழைப்பார் வளமைதானே. (372)

வளமையுட னழைப்பாரே யெந்தனுசான்
வாகாகச் சொல்லிவிட்டார் யாகோப்பென்று
இளமையடா யென்வயது பதினறப்பா
என்மகனே குருமுனிதா னறைந்தார்போல
களங்கமின்றிச் சென்றேனே ரோமரண்டை
கருத்துவந்து யெனையழைத்தார் கருணையாக
உளவான போக்கெல்லாங் காண்பித்தார்பார்
உத்தமனே ஞானமொடு வாதந்தானே. (373)

வாதந்தான் மூன்சொன்ன வயப்போக்கையா
வளமையுடன் வட்டப்பத்திரி சிவப்பதாகும்
நீதமுட னம்மலேயி லிருக்குதையா
நேர்மையுடன் கொண்டுவந்து செப்பக்கேளு
சாதகமாய்த் தானரைத்து வாய்தனக்குச்
சாங்கமுடன் கவசித்துப் புடந்தானேயா
தோதகமாய்க் கெஜபுடந்தான் போட்டுப்பின்பு
தேருமலதையெடுக்கத் தங்கந்தானே. (374)

தங்கமது சிவயோகிக் கெய்தும்பாரு
தாரணியில் மாந்தருக்கு எய்யாதப்பா
சங்கையின்றிச் சொல்லிவிட்டே னுந்தனுக்காய்ச்
சார்பான சித்தரெல்லா மிதிலேதோயும்
கங்கையொடு திங்களணி சங்கரன்முன்
காட்டினர் குருமுனிக்கு ஞானமெல்லாம்
புங்கசித்தி யெட்டுடைய குருமுனிதான்
புகட்டினு ருலகிலுள்ள சித்துத்தானே. (375)

சித்தான கருவிகர ணங்களெல்லாம்
செப்பினர் குருமுனிதா னெந்தனுக்கு
எத்திசையு மென்னூலுக் கெதிர்நூலுண்டோ
என்னுசான் முதற்கொண்டு சித்தரெல்லாம்
நத்தினு ரென்னூலே வெகுவாயப்பா
நாயகனே மறைப்பில்லே யென்றுசொல்லி
மூத்தான ஞானமுதல் மாந்திரீகம்
முன்னின்ற வாதமொடு வைத்தியந்தானே. (376)

தானுன வறுபத்து நாலுசித்து
சாற்றினேன் மறைவின்றி திறவுகோற்போல்
தேனுன கண்மணியே நூலேயப்பா
தேசத்திற் கருமிகட்குக் காட்டாதையா
கோனுன குருவதனே வணங்கிநில்லு
கோடிபொரு ளீய்ந்தாலும் நூல்கொடாதே
ஆனலும் ஆகாகா நானூறுபோல
அறையவில்லே சத்தாகு மிந்தநூலே. (377)

சத்தான வைத்தியம்பன் னிருநூருகத்
தான்சொன்னே னுந்தனுக்கு வெளியதாக
மூத்தான வைத்தியசிந்தா மணியேழ்நூறும்
முறையாகக் குருநூலம் பதுவுஞ்சொன்னேன்
சித்தானவைத்தியம் நானூறும் சொல்லிச்
சிறப்பாகக் கைபாக முழுதுஞ்சொன்னேன்
வித்தான வைத்தியமுன் னூறுஞ்சொல்லி
விளங்கவே சூஸ்திரமுப் பதுஞ்சொன்னேனே. ()

சொன்னதுவு மிதுவரையோர் கோர்வையாகும்
சுகமாக வாதவித்தை தெரிவதற்கு
நன்னயமாய்க் களங்குமுன் னூறுசொன்னேன்
நலமான பஞ்சமித்திரம் மூன்றுநூறும்
பின்னமிலாச் செந்தூர மூன்றுநூறும்
பேணியே நூற்றியன் பதுவுஞ்சென்னேன்
கன்னல்போ லதைக்குறுக்கி அன்பதுந்தான்
கழறினேன் நாதாக்கள் மெச்சத்தானே. (379)

மெச்சுகின்ற இடைபாகம் பதினாறும்
விதவிதமாய்ச் செய்பாகம் பதினாறுந்தான்
அச்சமின்றிச் சொல்வே னிதுவோர்கோர்வை
யாகவே சொன்னபின்பு சுண்ணக்காண்டம்
பச்சமுடன் அறுநூறு சுண்ணக்காண்டம்
பகர்ந்துமே அதைக்குறுக்கிச் சுருக்கமாக
இச்சையுடன் சுண்ணமுன் னூறுஞ்சொன்னேன்
இயல்பாக இன்னமுந்தான் சொல்லுவேனே. (380)

சொல்லுவேன் சுண்ணமுன்னூ றைச்சுருக்கிச்
சூஸ்திரமாய் நூற்றியைம்பதுவுஞ் சொன்னேன்
வல்லமையா யதன்சூஸ்திர மைம்பதுவும்
வகையாகத் தண்டகமும் நூறுஞ்சொன்னேன்
நல்லதொரு சாஸ்திரங்க ளாறுஞ்சேரில்
நலமாகக் கோர்வைநூ லாகும்பாரு
மெல்லவே யென்னூலைக் கோர்வைசெய்து
வேண்டியே பார்த்தோர்க்குப் பொன்னும்பாரே. ()

திராவகம்.

பொன்னான திராவகமாம் வகாரத்திற்குப்
புகலவில்லை பதினெண்சித் தாதியெல்லாம்
பன்னான சூடனவச் சாரஞ்சீனம்
பாரன்ன பேதிவகை பலந்தானென்று
தன்னான வெடியுப்புப் பலந்தான் நாலு
சாதகமாய்க் காரமது பலந்தான் நாலு
மின்னான மூத்திரமோ படி நாலுக்குள்
விளங்கவே மருந்தெல்லாம் பொடித்துப்போடே. ()

போட்டேதான் கிண்டி நன்று யுறவுசெய்து
புகழான வாலைதனி லடைத்துக்கொண்டு
வாட்டவே திருகுகள்ளி விறகால்தீயை
மாட்டுவாய் சாமத்துள் வருநீரெல்லாம்
ஆட்டெல்லா மிதிஞட்டு வழலையாட்டு
அப்பனே வெளியாக உனக்குச்சொன்னேன்
காட்டாதே யிம்முறையை யொருவருக்குங்
கைமுறையை நன்றாகச் சொல்லக்கேளே. (383)

கேளப்பா யிந்நீரே தீநீரப்பா
கெடியாகப் படியரைபீங் கானில்விட்டுத்
தூளப்பா புகையூறல் சூரணித்துத்
துடியாகப் படியரைக்கால் போட்டுக்கிண்டி
ஆளப்பா கடிகைரெண்டு சென்றுற்கேளு
ஆகாச வழலையென்ற பூநீரோடு
வாளப்பா யெத்தனையோ வென்றெண்ணதே
மாட்டதிலே படியரைக்கால் விளங்கத்தூவே. (384)

தூவினபின் அடிச்சுண்ணங் களஞ்சுபோடு
சுகமான ரத்தமதாந் தூரத்தோர்க்கு
மேவினபின் தெளிவுதனை யிருத்துவாங்கி
வெய்யலிலே பட்சம்வைக்க உப்பாம்பாரு
பாவினதோர் கற்சுண்ண முப்பாய்ச்செய்து
பாச்சப்பா சிவத்துக்குச் ஜீவனுச்சு
தேவிதனைச் சுத்தமே செய்தபுண்பு
செப்புவேன் மறைப்பெல்லாஞ் செய்திகேளே. (385)

கேளடா சாராயம் படிதானென்று
கெடியான பூவழலை படிகாலிட்டு
வாளடா சூடனுட னீறுதன்னை
வகையாகக் களஞ்சியொன்று கூடப்போட்டு
தேளடா ரவிமுகத்திற் காய்ந்தால் உப்பாம்
சிவப்பான சத்தியுட நாதமைந்தா
கோளடா வாராமற் சொல்லக்கேளு
கூர்ந்துபார் கற்பூர வள்ளிச்சாறே (386)

சாறுபடி யொன்றுக்குச் சூடன்கேளு
சாதகமாய் மூப்பலந்தான் தாக்கியாட்டு
வேறுநிற மாய்மெழுகாம் வில்லைசெய்து
வெய்யலிலே மூன்றுநாள் காய்ந்தபின்பு
சாரணை ஆ வரையிலையு மரைத்துருட்டித்
தடிக்கவே கவசமிட்டு வெயிலிற்போடு
தேருமடா மூன்றுநாட் காய்ந்தபின்பு
சிறப்பாக மேற்கவசம் வாங்கிப்போடே. (387)

வாங்கினபின் சுண்ணம்பு மூவர்ப்பூவுந்தான்
வளமான சிறுநீராற் கவசம்பூசி
ஓங்கியதோ ரோலையுட கனமேபோதும்
உத்தமனே மூன்றுநாட் காய்ந்தபின்பு
தாங்குசிப்பிச் சுண்ணத்துள் ளெரித்துவாங்கு
தவளமாய்ச் சூடனது சுண்ணமாகும்
பாங்கான சத்திக்குச் ஜீவனுச்சு
பானுக்குப் பானுகும் பருவங்காணே. (388)

காணவே யித்தனையுஞ் சொன்னீரையா
கல்லான சுண்ணம்பி லுப்பங்கேது
பூணவே படிகம்போற் மின்போல்வெட்டும்
புகழவே அந்தக்கல் பார்த்தெடுத்துத்
தோணவே அதைச்சுட்டு யெடுத்துக்கொண்டு
சுத்தவெள்ளைக் கற்சுண்ணம் படியொன்றுக்கு
ஆணவே யெண்படி நீர் விட்டுநீத்தி
அப்பனே தேவிக்குப் பூஜைபண்ணே. (389)

பூஜைபண்ண மறந்தாக்கா லுப்பேருது
புகழாகயேறினுமே கண்கொள்ளாது
பூஜைபண்ண மறந்தாக்காற் சாரம்போகும்
பூரணிக்கு மனதுவரத் தியானம்பண்ணு
பூஜைபண்ணிக் குழிவெட்டி மூடிப்போடு
பொலிவான உப்பாகுந் துவாதசத்திற்
பூஜைபண்ணி உப்பெடுத் திடுவாய்சொன்னேன்
புதைத்தநாள் முதலாய்ப்பெண் காற்ருகாதே. (390)

பெண்களுட காற்றங்கே வீசிற்ருனுற்
பேரான தேவிநின்று சிரிப்பாளப்பா
கண்களோ பலதுபடக் கண்களாகா
கடுங்குகைக்குட் காணுமற் புதைத்துப்போடு
தண்பாக இப்படியே செய்யாணுகில்
நடுக்கேடா மில்லாட்டால் நோய்கள்மீறும்
கண்போகுஞ் செவிபோகுஞ் சாபமுன்னோர்
காட்டினு ரதுகண்டு வகைசொன்னேனே. (391)

வகையதுவுஞ் செய்யாட்டால் வடுகனங்கே
வாதமொன்றும் பலியாமல் மாட்டுவான்கேள்
இகையாதே பிறகிருந்து மனமேங்காதே
செப்பினதை மறந்துபோய் யெண்ணிடாதே
நகையாதே மசிதசியால் சாபந்தீர்த்து
நாட்டியே வடுகனுக்குப் பூஜைபண்ணு
தகையாதே வேதாந்தம் நித்தம்பாரு
தாயங்கே வார்த்தைசொல்வாள் சிவன்சொல்லாரே.

சொல்லுமிந்தக் கற்சுண்ண மூப்பாங்காலம்
துடியாக வடுகனங்கே நிர்த்தஞ்செய்வார்
செல்லுமிந்தத் தேவிமனங் கொள்ளுங்காலம்
சிவயோக சித்தனையு மறவாக்காலம்
சொல்லுமிந்த உப்பதற்கு விடமீதல்ல
கூறுகெட்ட சித்தைதனைப் படைத்தாயானல்
வல்லதொரு வயிரவனர் கோபமாகி
வலதுசெய்வார் மாற்ருனே வகுப்பார்காணே. (393)

காணப்பா யித்தனையுங் கற்சுண்ணத்தின்
கருத்தனையே தெருத்தோறும் போட்டபேர்க்கு
கோணப்பா குற்றமிகச் சுமதியாகும்
கூறுகெட்ட மாடானுற் சொல்லக்கேளு
பேணப்பா அமூரியுப்புஞ் சுண்ணஉப்பும்
பேரான வழலையுப்பு மூன்றுங்கூட்டி
நாணப்பா வீரமுடன் புழுபூகுரம்
நற்குருவண் டரிசியோ டரைத்துக்கட்டே. (394)

கட்டியதோர் வில்லைதனை ரவியிற்போடு
காய்ந்தபின்பு சுண்ணத்தி லெரித்துவாங்கு
அட்டியென்ன அட்டமபூ ரணத்திேனாடு
அனைந்தாசாய்ச் சுழிமுனையில் நந்திமூழ்கப்
பட்டதினுற் பலனுஞ்சூத் திரனேயானுற்
பலிக்குமடா வாதமொடு வாசியோகம்
விட்டகுறை பூரணத்தை உனக்காகத்தான்
வேதாந்த வாதத்தை வெளிவிட்டேனே. (395)

விட்டதோ ரெழுத்ததினுல் ரேசகஞ்செய்
விடாதெழுத்தாற் பூரித்து மய்யமாக
கட்டதொரு யெட்டெழுத்தாற் கும்பித்தோர்க்குக்
கருணையினு லமுதமது கனிந்துபாயும்
தோட்டதொரு பாணமதை தேவிக்கென்று
சுழிமுனையி லேதீப சுடரையேற்றி
இட்டதொரு பூரணத்தை நோக்கிநோக்கி
யிருப்பவர்க்கு வாதசித்தி யின்னம்பாரே. (396)

இன்னமுந்தான் மக்கம்வந்த விபரங்கேளு
யென்னுசா னகத்தியரோ டிருக்கும்போது
சொன்னதொரு கயிலாச சட்டைநாதர்
சுந்தரம்போற் திட்சையிரு நூறுசொல்லி
நன்னயமாய் ரிஷிகூட்டந் தன்னிலேதான்
நாதாந்த தீட்சையையுங் கொண்டுவந்து
மன்னவராந் திருமூல ரிடங்கொடுக்க
வாங்கியே பார்த்துவிட்டுக் கிழித்திட்டாரே, (397)

கிழித்ததொரு யேடதனைப் பொறுக்கிக்கட்டிக்
கிட்டப்போய்த் திருமூல ரிடத்தில்நின்று
சுழித்ததொரு நூலிதனை வைத்துநின்றேன்
சுகமாக ரிஷிகளெல்லா மொன்றுகூடிப்
பழித்திந்த நூலதனைக் கிழித்ததேது
பகர்ந்திடவு வேணுமென்றென் ஞசான்கேட்டார்
தெளித்தந்தத் திருமூலர் பதில்சொல்லாமற்
நேர்மையுட னிருந்துவிட்டார் நான்கேட்டேனே.

கேட்டதற்கு நீகேட்க வேண்டாமென்றார்
கிருபைவைத்து யிருந்தோர்கள் பேசவில்லை
தாட்டிகமாய்க் குருமுனிவர் தடுத்துக்கேட்ட
ததற்கும்பே சாதிருந்தார் யானுங்கேட்டேன்
மேட்டிமை செய்யாதே நீ போபோவென்று
விறசினர் உடனேயான் மக்கம்வந்தேன்
கூட்டமாய் நபிமார்கள் யாகோப்பென்று
கூப்பிட்டுச் சுண்ணத்துச் செய்தார்பாரே. (399)

செய்துமே மக்கம்வந்த சேதிசொன்னீர்
திரளாக ரிஷிகூட்டஞ் சேறீரென்றீர்
உய்துமே திருமூலர் கிழித்தாரென்றீர்
உண்மையுடன் கேட்டதற்குக் கோபமாக
வைய்துமே போவென்று சொன்னரென்றீர்
வைய்தயிட மின்னதென் றுஞ் சொல்லவில்லை
பைய்வே யிதன்விபரஞ் சொல்லவேண்டும்
பராபனே யெந்தனுக்குத் தெரியத்தானே. (400)

தெரியவே சொல்லுகிறேன் மைந்தாகேளு
ஜெகத்திலே யெத்தனையோ மலைகளுண்டு
உரியதொரு மலைதோறுங் குகைகளுண்டு
உற்றதொரு மகாகோடி சித்தருண்டு
அறியவே அந்தந்த மலைமேல்வாசம்
அப்பனே செய்கிறார் வெகுபேரப்பா
பிரியமா யொருமலையில் மூனிவர்சித்தர்
பேணியே யிருந்திடா ரின்னங்கேளே. (401)

இன்னமுந்தான் சொல்லுகிறேன் விபரமாக
இனிமையுடன் சதுரகிரி தன்னிலப்பா
தன்மையாய் முனிசித்தர் வெகுபேரப்பா
தனித்தனியே குகையினிலே யிருக்கிறார்கள்
நன்னயமாய் விசேடநாள் யெல்லோருந்தான்
நலமாகச் சேருவார்கள் அன்னாள்தன்னில்
கன்னல்போல் கயிலாசர் யிருநூறைத்தான்
கையிலெடுத் தெல்லோர்க்குங் காட்டினாரே. (402)


எல்லோருஞ் சதுரகிரி தன்னிலப்பா
இனிமையுட னிருக்கிறதோர் விபரங்கேளு
வல்லதொரு சதுரகிரி தன்னிலேதான்
மகிமைமெத்தச் சஞ்சீவி மலைதானுண்டு
நல்லதொரு பச்சிலைக ளனேகமுண்டு
நன்மையுடன் வசிப்பதற்குக் குகைகளுண்டு
மெல்லவே கற்பமுண்ண இடந்தானுண்டு
மேலான சித்தர்களும் வசிப்பார்பாரே. (403)

பாரப்பா திருமூலர் கிழித்தநூலைப்
பக்குவமாய்ப் பொறுக்கியதை யொன்றுசேர்த்து
நேரப்பா அநேகநூல் சொல்லிவிட்டேன்
நேர்மையுடன் கண்டறிந்தால் வெளியாய்த்தோணும்
சீரப்பா யென்னூலைக் கோர்வையாகச்
செம்மையுடன் பார்த்தோர்க்குச் ஜெயமேகிட்டும்
காரப்பா நபிமார்கள் பாதம்போற்று
கருத்தாக நானூறு முற்றும்பாரே. (404)

யாகோபு

வைத்திய வாத சூஸ்திரம் 400.

முற்றிற்று.



யாகோபு வாதசூஸ்திரம் 400-க்கு பொருளட்க்க

அட்டவணை.

அட்டவணை முற்றிற்று.

உ

பரமபதி துணை.

திருவள்ளுவர் கற்பம் 300.

7-சாஸ்திரங்கள் சேர்ந்தது.

இதில் காதாந்தசாரம் 100, கற்பக்குருநூல் 50, முப்புசூஸ்திரம் 30, வாத சூஸ்திரம் 16, முப்புக்குரு 11, வைத்திபசூஸ்திரம் 100, ஆக7-சஸ்திரங்கள் ஞானவெட்டி 1500 க்குச் சூஸ்திரமாகப் பாடியது இதில் குருநீர், செயநீர், பூநீர் முடிக்கும் விபரமும் முப்பூ இன்னதென்ற விபரமும் வழலை மார்க்கமும் தெளிவாய்க் கூறியுள்ளது.

நயம் பதிப்பு விலை ரூ 2—50.

காகபுசண்டர் பெருநூல்

காவியம் 1000.

இந்நூல் எட்டுப்பிரதியாயிருந்ததை அச்சிட்டு வெளியாக்கியுள்ளோம் இதில் யோகம், ஞானம், அமுர்தசாரணை, வாசி, விபரம் முதலிய அநேக மர்மங்கள் அடங்கியது முக்கியமான நூல் நயம் பதிப்பு புக் 1க்கு விலை ரூ 5—00

கருவூரார் நொண்டியென்னும்

வாத காவியம் 700.

இதில் கற்பம், வாதம், யோகம், ஞானம், வயித்தியம், முதலியதை நொண்டிச்சிந்தாகவும் மற்றும் பல சந்தங்களாகவும் பாடியிருக்கிறார் முக்கிமான நூல்

நயம் பதிப்பு விலை ரூ 2—00

அகத்தியர் கற்பமுப்புக் குருநூல்.

இதில் கற்பவிதிகளும் முப்பூ விவரமும் பற்பம் செந்தூரம் சுண்ணம், மெழுகு, தைலம், கைபாகஞ் செய்பாக முறைகளும் காற்பத்தி முக்கோண சக்கரத்தின் பூஜாவிதிகளும் அடங்கியது. விலை ரூ 1—50.

குரு இராமசாமிக்கோன்.

புச்சகசாலை, 4 நிர், குருசாமிக்கோனார் சந்து,
வடக்கு மாசி வீதி, மதுரை.